# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு






பிப்ரவரி - 2010
விலை ரூ.10/-










புதுடெல்லியில் 7.2.2010 அன்று, உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்து நடைபெற்ற
முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கலந்து கொண்டார்.

# தமிழரசு


செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041

தை - மாசி

பிப்ரவரி 2010

மலர் : 41 இதழ் : 8



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**ச. ஜெயலலிதா**
**இரா. சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**த. கலைச்செல்வன்**
**வ.பாலசுப்பிரமணியன்**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.

தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்டம் இன்மை பெறின்.**

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால் அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...


மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரைகள்

- ✶ 61ஆவது குடியரசு தின விழா ............ 2
- ✶ தொன்மைச் செம்மொழியாம் அருமைத் தமிழ் மொழி கால நிலைகளுக்கேற்ப வளரும் ஆற்றல் கொண்டது! ............ 7
- ✶ மேட்டூர் அணையில் ஒரு கோடியில் 75 அடி உயரத்தில் பவள விழா தூண்! அணை திறக்கப்படுவதற்கு முன்பே காவிரி ஆற்றில் தூர்வாரும் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை! ............ 10
- ✶ இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு ............ 13
- ✶ திருக்குறள் பேரொளி விருது ............ 17
- ✶ இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் வெளிநாட்டு நிறுவனங்களின் கவனத்தை ஈர்க்கின்ற மாநிலமாக தமிழகம் திகழ்கிறது ............ 25
- ✶ நாட்டிலேயே முழுமையானதொரு ஜவுளித்தொழில் சங்கிலித் தொடரைக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு ............ 28
- ✶ ஊனமுற்றோர்க்கு சிறப்புப் பணியாளர் நியமனத் தேர்வு முறையில் அரசு வேலைவாய்ப்புகள்! ............ 32
- ✶ உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவிதை ............ 51

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் உரைகள்

- ✶ ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது ............ 57
- ✶ பொது விநியோகத் திட்டத்தை தமிழக அரசு சிறப்பாகச் செயல்படுத்துகிறது ............ 61
- ✶ உள்நாட்டுப் பாதுகாப்பு அச்சுறுத்தலை சமாளித்திட மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் ............ 64
- ✶ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – சிறப்பான செயல்பாடு ............ 69
- ✶ முதல்வர் கலைஞரின் மக்கள் நலத்திட்டங்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக அமைந்துள்ளன ............ 72



**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை :

61ஆவது இந்தியக் குடியரசு தினவிழா
(26.01.2010)

# 61ஆவது குடியரசு தின விழா

மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்
தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்!
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
வீரதீரச் செயல்புரிந்தோருக்கு விருதுகள் வழங்கினார் !



இந்தியத் திருநாட்டின் 61ஆவது குடியரசு தினம் 26.01.2010 அன்று தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் அரசின் சார்பில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவில் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள், தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். வீரதீரச் செயல் புரிந்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதக்கங்கள் அணிவித்து, விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார்.


அதிகாலைதொட்டே குடியரசு தினவிழா நிகழ்ச்சிகளைக் காண மக்கள் அலைகடலெனத் திரண்டு வந்த வண்ண மிருந்தனர்.

விழா நடைபெற்ற காமராசர் சாலை விழாவையொட்டி மிகவும் எழிலுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பெருந்திரளாகக் குழுமிடும் மக்கள், விழாவினைக் கண்டுகளிக்கும் வகையில் விழா ஏற்பாடுகள் மிகவும் நேர்த்தியுடன் செய்யப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கானோர் அமர்ந்து காணும் வகையில் நிழற்பந்தல்களும் இருக்கைகளும் போடப்பட்டிருந்தன.

விழாவில் பங்கேற்க காலை 7.50 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார்.



சாலையின் இருமருங்கிலும் திரண்டிருந்த பார்வையாளர்களுக்கு வாகனத்திலிருந்தவாறு கையசைத்து – குடியரசு தினவிழா வாழ்த்துக் கூறினார். அணிவணக்க மேடையருகே வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

7.54 மணியளவில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் வருகை தந்தார்கள். ஆளுநர் அவர்களும் பார்வையாளர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

மேதகு ஆளுநர் அவர்களை, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அணி வணக்கம் ஏற்கும் மேடையருகில் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து – ஆந்திரம், தமிழ்நாடு, கருநாடகம் மற்றும் கேரளா மாநிலங்களின் தலைமைப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் நிதின்கோலி, கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் ராஜீவ் ஜிரோட்ரா, சென்னை தாம்பரம் வான்படை அதிகாரி ஏர்கமோடர் எஸ்.சர்மா, கிழக்கு மண்டல கடலோரக் காவல்படை கமாண்டர் அச்சுதன் இராஜசேகர், காவல்துறை இயக்குநர் திருமதி. லத்திகா சரண், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் ஒழுங்கு) திரு. கே. ராதாகிருஷ்ணன், சென்னை மாநகர காவல் துறை ஆணையர் திரு. தி.ராஜேந்திரன் – ஆகியோரை மேதகு ஆளுநர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

**ஹெலிகாப்டர் மலர் தூவியது!**

காலை சரியாக 8.00 மணியளவில் மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.







நாட்டுப் பண் இசைக்கப்பட, கடலோர காவல்படை ஹெலிகாப்டர் மூலம் மலர் தூவப்பட்டது. அக்காட்சி கண்டு மக்கள் கையொலி எழுப்பி மகிழ்ந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து – மேதகு ஆளுநர் அவர்கள் அணிவணக்க மேடையில் நின்று, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இராணுவப்படை, கடற்படை, வான்படை, கடலோரக்காவல் படை, முன்னாள் இராணுவத்தினர், மத்திய சேமக் காவல்படை, இரயில்வே பாதுகாப்புப் படை, மத்திய தொழிற் பாதுகாப்புப் படை, சென்னை மாநகரக் காவல்துறை, சென்னை மாநகரக் காவல் மோப்ப நாய்ப் பிரிவு, சென்னை மாநகரக் காவல் குதிரைப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகள், தமிழ்நாடு சிறப்புக் கடற்கரைப் பாதுகாப்புப் பிரிவு, தமிழ்நாடு காவல் மண்டலம் நீலகிரிக் காவலர் பிரிவு, சிறைத் துறைப் பிரிவு, தீயணைப்புப்படை, ஊர்க் காவல் படை, தேசிய மாணவர் படைப்பிரிவுகள், சாலைக்காப்புச் சுற்றுக்காவல் படையினர், பாரத சாரண







சாரணியர் பிரிவுகள் ஆகியோரது அணிவகுப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**அண்ணா பதக்கம்!**


மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்களை – நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கத்தரிபுலம் கிராமத்தில் ஆழமான குளத்தில் பள்ளி வேன் விழுந்த விபத்தில் தன்னுயிரையும் பொருட்படுத்தாது பிற உயிர்களைக் காத்த ஆசிரியை சுகந்தியின் துணிவுமிக்க செயலை பாராட்டி – அவரது தந்தையார் மாரியப்பன் அவர்களிடமும்,

தேனி மாவட்டத்தில் தங்களது ஒரு வயதுப் பெண் குழந்தையை ஒரு தம்பதியர், வைகை அணையின் நீர்த்தேக்கப் பகுதியில் வீசிய சமயத்தில் நீரில் குதித்து – குழந்தையினைத் தேடி, மீட்டெடுத்து கரைக்குக் கொண்டு வந்து – தன்னுயிரையும் பொருட்படுத்தாது குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய துணிவுமிக்க செயலைப் பாராட்டி – '108 அவசர உதவி'யின் தொழில்நுட்ப உதவியாளர் கண்ணனுக்கும் வழங்கிச் சிறப்பித்தார்.

**கோட்டைஅமீர் மதநல்லிணக்க விருது! காந்தியடிகள் காவலர் பதக்கங்கள்!**

அதனைத் தொடர்ந்து – கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கத்தை திண்டுக்கல் நகரம் திரு. கே.ஏ. மொகைதீனுக்கும், காந்தியடிகள் காவலர் பதக்கங்களை திருச்சி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. கு.நாகராசன், தருமபுரி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. சி.விவேகானந்தன், தருமபுரி துணைக்காவல் கண்காணிப்பாளர் திரு. லோ.சீனிவாசன், விழுப்புரம் காவல் துறை ஆய்வாளர் திரு.பா.தெய்வ சிகாமணி ஆகியோருக்கு வழங்கி கௌரவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விருது – பதக்கங்கள் வழங்கியதைத் தொடர்ந்து, பள்ளி – கல்லூரி மாணவியரின் ஆடல், பாடல் கலை நிகழ்ச்சிகளும், கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



**கலை நிகழ்ச்சிகள்!**

கண்ணுக்கு விருந்தாக அமைந்த இந்நிகழ்ச்சியில் கிராமிய இசை நடனம், குழு நடனம், தமிழ்நாட்டு பாரம்பரிய கூட்டு நடனம், கிராமிய நடனம் என பல்வேறு வகையான ஆடல் பாடல் நிகழ்ச்சிகளை பள்ளி, கல்லூரி மாணவியர் நடத்திக் காட்டினர்.

அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான் சக்ரி நடனம், மேற்கு வங்காள ராய்பென்சா நடனம், ஆந்திரப்பிரதேச கொம்புகோயா நடனம், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை சார்பில் கிராமிய நடனம் ஆகியன நடைபெற்றன.

**அரசுத்துறைகளின் அலங்கார ஊர்தி அணிவகுப்பு!**

ஆடல் பாடல் நிகழ்ச்சிகளை அடுத்து, அரசுத் துறைகளின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெற்றது. காண்போரது கருத்தை வெகுவாகக் கவர்ந்த இந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பில் பல்வேறு அரசுத் துறைகளின் வாகனங்கள் அணிவகுத்தன. அணிவகுப்புத் தளவாயை – மேதகு ஆளுநர் அவர்களுக்கு தலைமைச் செயலாளர் அறிமுகம் செய்து வைத்தார். நாட்டுப் பண் இசைக்க விழா இனிதே நிறைவுற்றது.

எழிலும் எழுச்சியும் ததும்ப தலைநகர் சென்னையில் ஏற்றத்துடன் நடைபெற்ற இவ்விழாவில், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கோகலே, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா.ஆவுடையப்பன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் மத்திய, மாநில அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள், அரசுத்துறை உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ❖

# தொன்மைச் செம்மொழியாம் அருமைத் தமிழ் மொழி கால நிலைகளுக்கேற்ப வளரும் ஆற்றல் கொண்டது!

பள்ளி மாணவ–மாணவிகளுக்கு அசை நிலை வரைகலைப் போட்டியை
12.2.2010 அன்று காணொளி வாயிலாகத் தொடங்கி வைத்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.





**கோ**வை மாநகரில் வரும் ஜூன் திங்கள் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டோடு இணைந்து, ''உலகத் தமிழ் இணைய மாநாடும்'' நடைபெறவிருக்கிறது.

இந்த மாநாட்டையொட்டி, பள்ளி மாணவ, மாணவியரின் தகவல் தொழில்நுட்ப அறிவாற்றலை ஊக்கி வளர்த்திடும் ஒரு திட்டமாக மாநிலம் தழுவி நடத்தப்படும், ''அனிமேஷன்'' எனப்படும் ''அசைநிலை வரைகலை'' போட்டியைக் காணொளிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைப்பதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகை ஒரு குக்கிராமமாகச் சுருக்கியுள்ள ஆற்றல் வாய்ந்த தகவல் தொழில்நுட்பத்தினை தமிழகத்தில் வளர்த்திட, 1997ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பத் தொழிற்கொள்கையை இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக முதன் முதலிலே உருவாக்கிய மாநிலம் நமது தமிழகம்தான்.

கல்லூரிகளில் மட்டுமல்லாமல், பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்க்கும் தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் நோக்கில் 1999ஆம் ஆண்டில் தமிழகத்தில் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி மையங்கள் அமைக்கப்பட்டு, கணினி அறிவியல் கல்வி கற்பிக்கப்பட்டது.

தமிழக அரசின்கீழ் செயல்படும் துறைகள் அனைத்தையும் கணினிமயமாக்கவும், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில்நுட்பத்தை இணைக்கவும், தமிழ் மென்பொருளை உருவாக்கிப் பரப்பவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1999ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7, 8 ஆகிய நாள்களில், அந்நாளைய மத்திய அமைச்சராகத் திகழ்ந்த தம்பி முரசொலி மாறன் அவர்களின் ஆலோசனைகளின் படி சென்னையில் ‘தமிழ்நெட் 1999’ என்னும், “உலகத் தமிழ் இணைய கருத்தரங்க மாநாடு” நடத்தப்பட்டு; அம்மாநாட்டில் மேற்கொண்ட முடிவுகளின்படி, கணினியில் தமிழ் இடம் பெறுவதற்கான தமிழ் விசைப் பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டதோடு தொடர்ந்து பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்னணு ஆளுமை ஆகியவை தொடர்பாக முதலமைச்சரின் ஆலோசகராகத் திகழ்ந்த அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் எம். ஆனந்த கிருஷ்ணன் தலைமையிலான குழு வழங்கிய பரிந்துரைகளின்படி அரசுத் துறைகளை கணினி மயமாக்குதல், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில்நுட்பத்தை இணைத்தல், தமிழ் மென்பொருளை உருவாக்கிப் பரப்புதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு ஆக்கபூர்வமான பல பணிகள் நடைபெற்றுள்ளன.

**தமிழக அரசின் இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, தமிழகத்தில் இருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியான மென்பொருள்களின் மதிப்பை உற்று நோக்கினால் 2005–2006இல் 14 ஆயிரத்து 400 கோடி ரூபாய் என்பது, 2008–2009இல் 36 ஆயிரத்து 680 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு உயர்ந்து மகத்தான வரலாறு படைக்கப்பட்டுள்ளது.**

உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் பயன்பெறும் வண்ணம், அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர். வா.செ. குழந்தைசாமி அவர்களை தலைவராகக் கொண்டு “உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்” தமிழகத்திலே நிறுவப்பட்டு, கணினி மூலம் தமிழ் வளர்ச்சிபெற வழிவகுக்கப்பட்டது.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், சென்னை தரமணியில் 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில், “டைடல் மென்பொருள் பூங்கா” அமைக்கப்பட்டு 4.7.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னையில் மட்டுமல்லாமல், கோவை, மதுரை, திருச்சி, நெல்லை, சேலம், ஒசூர் போன்ற இரண்டாம் நிலை நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் தொடங்கப்படுவதற்குத் தேவையான அதிநவீன வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்ற வகையில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட ஆவன செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் கோவை தகவல் தொழில்நுட்பப் பூங்கா விரைவில் திறக்கப்படவுள்ளது.

தமிழக அரசின் இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, தமிழகத்தில் இருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியான மென்பொருள்களின் மதிப்பை உற்று நோக்கினால் 2005–2006இல் 14 ஆயிரத்து 400 கோடி ரூபாய் என்பது, 2008–2009இல் 36 ஆயிரத்து 680 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு உயர்ந்து மகத்தான வரலாறு படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் உள்ள பள்ளி மாணவ–மாணவியர்கள் எல்லோரும் கணினிக் கலையில் – தகவல் தொழில்நுட்பத்தில் மேலும்மேலும் சிறந்த அறிவாற்றல் உள்ளவர்களாக வளர வேண்டும்; அதற்குரிய வழிவகைகள் உருவாக்கப்பட வேண்டும் என்னும் உணர்வோடு கோவையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டோடு இணைந்து உலகத் தமிழ் இணைய மாநாடு நடத்தப்படும் வேளையில், அம்மாநாட்டுப் பணிகளில் ஒன்றாக, இன்று நடைபெறும் ''அனிமேஷன்'' எனப்படும், ''அசைநிலை வரைகலைப் போட்டி'' எதிர்காலத்தில் தமிழகத்தில் அனிமேஷன் துறையில் மிகப் பெரிய முன்னேற்றத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாகப் பள்ளி மாணவ, மாணவியச் செல்வங்களிடம் வரைகலை ஆற்றலை – அசைகலை வரைகலை ஆற்றலைத் தூண்டி வளர்ப்பதற்காக நடத்தப்படும் இப்போட்டியில், தமிழகம் முழுவதிலும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர் இணைய தளத்தின் வாயிலாகப் பதிவு செய்துகொண்டு, கலந்துகொள்கிறார்கள் என்பதை அறிந்து நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்; அவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவ–மாணவியர்க்கு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

காலத்தால் மிகவும் தொன்மையான நம் செம்மொழியாம் அருமைத் தமிழ் மொழி கால நிலைகளுக்கேற்ப வளரும் ஆற்றல் கொண்டது. அது இக்காலத்திற்கேற்ப கணினிச் சோலையில் மலரும் கண்கவர் மலராகவும் மணம் பரப்புகின்றது.

இத்தகைய சிறப்புகள் மிகுந்த நம் அன்னைத் தமிழ்மொழியின் இலக்கியங்கள் அனைத்தையும் அனிமேஷன் முறையிலே இசையோடு இழைத்துத் தருவது எதிர்காலத் தலைமுறையினருக்கு நாம் வழங்கும் தலைசிறந்த கலை இலக்கிய அறிவுப் புதையலாகும்.

அருமைத் தமிழ் மாணவ, மாணவியச் செல்வங்களே! உங்கள் கற்பனை ஆற்றலும் படைப்புத் திறனும் மேன்மேலும் பெருகி வளர வேண்டும்! அறிவியல்–தொழில்நுட்பத் திறனோடு தாய்மொழித் தமிழைச் செம்மையாகக் கையாளும் திறனும் உங்களிடையே செழித்து வளம்பல பெற்று நீங்கள் அனைவரும் வாழ்வில் உயர்ந்திட வேண்டும் எனும் விழைவோடு, இந்த அருமையான போட்டியில் வெற்றிகளைக் குவித்திட உங்களையெல்லாம் வாழ்த்துகிறேன்.

*வாழ்க நீவிர்!*
*வளர்க நும் திறன்!*
*வெல்க தமிழ்!*

★ ★ ★

# மேட்டூர் அணையில் ஒரு கோடியில் 75 அடி உயரத்தில் பவள விழா தூண்! அணை திறக்கப்படுவதற்கு முன்பே காவிரி ஆற்றில் தூர்வாரும் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை!



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் மேட்டூர் அணை பவள விழா நிகழ்ச்சியையொட்டி தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி மூலம் பவள விழா கோபுரம் கட்ட அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை (22.12.2009)

மேட்டூர் அணையின் பவள விழா நிகழ்ச்சியில் காணொளிக் காட்சி வாயிலாகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குவதிலும், பவள விழாக் கோபுரம் கட்ட கால்கோள் இடுவதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

'உழவ ரோதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி'
'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி'

என்றும், காவிரியின் வெள்ளம் பாயும் மகிழ்ச்சியை சிலப்பதிகாரம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் இலக்கியத்திலும், தமிழர்தம் வாழ்விலும் வளம் சேர்த்த காவிரியாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்துவரும் வேளைகளில் அதனைத் தடுத்து, சேமித்து வைத்து அறுவடைக் காலம் வரை தேவையான நேரங்களில் நீரைப் பயன்படுத்துவதற்கு அணை ஒன்று கட்டப்பட வேண்டும் எனும் எண்ணம் 19ஆம் நூற்றாண்டில் எழுந்தது.

அதனைத் தொடர்ந்து, நமது நாட்டிலிருந்த அன்றைய ஆங்கிலேய ஆட்சி, காவிரியில் அணை கட்டுவதற்குரிய இடத்தை ஆய்வு செய்து சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பா.வெ. மாணிக்க நாயக்கர் அவர்கள் குறிப்பிட்ட இடமான மேட்டூரைத் தேர்வு செய்தது. கர்னல் டபிள்யூ. எம்.எல்லிஸ் என்ற புகழ்பெற்ற இராணுவப் பொறியாளர் 1910ஆம் ஆண்டில் அணையை வடிவமைத்து, உரிய மதிப்பீடுகளோடு ஆங்கிலேய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினார்.

அதேகாலகட்டத்தில், அன்றைய மைசூர் சமஸ்தானமும், பொறியாளர் சர்.எம். விஸ்வேஸ்வரய்யா உதவியுடன் காவிரியில் மைசூர் அருகே கிருஷ்ணராஜசாகர் நீர்த்

தேக்கத்தை அமைத்திட ஆங்கிலேய அரசிடம் அனுமதி கோரியது.

எனவே, காவிரி நீரைப் பயன்படுத்துவது தொடர்பாக அப்பொழுதே பிரச்சினைகள் எழுந்து, பல்வேறு முயற்சிகளுக்குப் பின் 1924ஆம் ஆண்டில் சென்னை மாகாண அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. 1924ஆம் ஆண்டு தான் காவிரிப் பிரச்சினை ஆரம்பமானது. அதே 1924ஆம் ஆண்டுதான் நானும் பிறந்தேன். பிறந்தது முதல் இதுவரை அந்தப் பிரச்சினைக்காகத்தான் நான் வாதாடிக் கொண்டிருக்கிறேன். போராடிக் கொண்டிருக் கிறேன். அந்த உடன்படிக்கைக்குப் பின், காவிரியில், மேட்டூர் அணை கட்டுவதற்கு 6 கோடியே 12 இலட்சம் ரூபாயை அனுமதித்து 3.3.1925 அன்று இங்கிலாந்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து, பொறியாளர் சர். கிளமெண்ட் முல்லிங்ஸ் (Clement Mullings) என்பவரது தலைமையில் தமிழகப் பொறியாளர்கள், தொழிலாளர்கள், குறிப்பாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கல்தச்சுத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் கூடி மேட்டூர் அணையின் கட்டுமான வேலைகளை 20.7.1925இல் தொடங்கி, 1934 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறைவேற்றி முடித்தார்கள்.

ஏறத்தாழ 9 ஆண்டு காலத்தில் 120 அடி உயரத்திற்குத் தண்ணீரைத் தேக்கும் வகையில், 5 ஆயிரத்து 300 அடி நீளமும், 171 அடி அகலமும் உடையதாகக் கட்டி முடிக்கப் பட்ட இந்த மேட்டூர் அணையிலிருந்து 12.6.1934 அன்று முதன்முதல் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

### காவிரிக்குப் பெருமை சேர்க்கும் மேட்டூர் அணை


தமிழகத்திலே உழவுத் தொழிலுக்கு அச்சாணி காவிரிதான். காவிரிக்குப் பெருமை சேர்ப்பது மேட்டூர் அணை. இந்த மேட்டூர் அணைக்கு 75 வயது முடிந்து இன்று பவள விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 75 ஆண்டுகளுக்கு முன் இந்த அணை கட்டி முடிக்கப்பட்டபொழுது, இது ஆசியாவிலேயே பெரிய நீர்த்தேக்கம், இன்று தமிழகத்தின் தலையான நீர்த் தேக்கம்!

மேட்டூர் அணையின் பொன்விழா கொண்டாடும் இந்த நல்ல தருணத்தில் இந்த அணைக்குக் கீழே வெள்ளக் காலங்களில் கிடைக்கும் கூடுதல் நீரைத் தடுத்து நிறுத்திட கரிகால் சோழன் கட்டிய கல்லணையைத் தவிர வேறு அணை எதுவுமே இல்லாத குறையைப் போக்கிடக் கருதிய இந்த அரசு, கரூர் மாவட்டம் மாயனூர் அருகே கதவணை (barrage) அமைத்திட 5.2.2009 அன்று 189 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அதற்குரிய பணிகளை நிறைவேற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கதவணையின் மூலம் தேக்கப்படும் வெள்ள நீர் வறண்ட பகுதிகளுக்குத் திருப்பி விடப்படும்.

மேலும், காவிரி, கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளைச் செப்பனிடும் திட்டத்திற்கு மத்திய அரசு 375 கோடியே 90 இலட்ச ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், மாநில அரசின் பங்காக 93 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயைத் தருவதற்கு தமிழக அரசு ஒப்புக் கொண்டுள்ளது. காவிரிப்பாசன விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும் பொழுதெல்லாம் காவிரியாற்றிலும், கிளை ஆறுகளிலும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை தமிழக விவசாயிகள் நன்கு அறிவார்கள்.

2006இல் இந்த அரசு அமைந்தபிறகு 35 கோடியே 80 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப் பட்டு தூர்வாரும் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. வரும் ஆண்டில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்து ஆலோசித்து, பொதுப்பணித்துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து, மேட்டூர் அணை திறக்கப்படுவதற்கு முன்னதாகவே தூர்வாரும் பணிகளை நிறைவேற்றி முடித்திட வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



இதுதவிர, தொன்மைவாய்ந்த காவிரி மற்றும் அதன் கிளை நதிகளில் அமைந்துள்ள மதகுகள், அணைகள், கதவணைகள் ஆகிய வற்றைச் சீரமைத்திடவும், கரைகளைப் பலப் படுத்திடவும், வெள்ளக் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்திடவும் உதவும்வகையில், தமிழக அரசு 5 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது.

இந்நிலையில், மேட்டூர் அணையின் பவளவிழா நினைவாக இதன் வலது கரையில் உள்ள குன்றின்மேல் 75 அடி உயரத்தில் ஒரு பவள விழாக் கோபுரத் தூண் அமைத்து, மேட்டுருக்குச் சுற்றுலா வரும் பயணிகள் அதன் மேல் ஏறி நின்று மேட்டூர் அணையையும், நீர்த் தேக்கத்தின் விரிந்து பரந்துள்ள மாட்சியையும், அதன் அருகில் அமைந்துள்ள இயற்கை எழில் குலுங்கும் காட்சிகளையும், மேட்டூர் நகரின் தோற்றத்தையும் கண்டு மகிழ வகை செய்யும் ஒரு திட்டத்தினை நிறைவேற்றிட இந்த அரசு 1 கோடி ரூபாயை அனுமதித்துள்ளதுடன், அத்திட்டத்திற்காக இன்று அடிக்கல் நாட்டியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக வரலாற்றில் நினைந்து மகிழ்ந்து போற்றத்தக்க நாளாக அமையும் இந்நாளில் தமிழக மக்கள் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன். இவ்விழாவைச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள பொதுப்பணித்துறை அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் அனைவர்க்கும் என் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விழா நிகழ்ச்சி**

மேட்டூர் அணை பவள விழா நிகழ்ச்சி 22.12.2009 அன்று மேட்டூர் அணை வலதுகரை வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஜெ. சந்திரகுமார், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. வி.பி.துரைசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.தாமரைச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர் வீரபாண்டி திரு. ஆ.ராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் காணொளிக் காட்சி மூலம் ஆற்றிய உரை ஒளிபரப்பப்பட்டது.

* * *

# இந்த அரசு
# தொழிலாளர்களுடைய அரசு

திரைப்படத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்கியதற்காக 6–2–2010 அன்று, தமிழ்த்திரையுலகம் நடத்திய பாராட்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

இந்த இனிய விழா நிகழ்ச்சிக்கு வருகை தந்து – வாழ்த்தியும் – சில நல்ல அறிவுரைகளை வாழ்த்தியவர்களுக்கும், திரை உலகத்தினருக்கும் எடுத்துக்கூறியுள்ள இந்தியாவினுடைய தலை சிறந்த கலைஞர் அமிதாப்பச்சன் அவர்களுக்கு நான் முதற்கண் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமிதாப்பச்சன் அவர்களுக்கு, அவருடைய பெற்றோர் முதலில் வைத்த பெயர் ''இன்குலாப்'' என்பதுதான். ''இன்குலாப்'' என்றால் புரட்சி – ஜிந்தாபாத் என்று பல புரட்சிகரமான முழக்கங்களை ஒலிக்கக் கேட்டிருக்கிறோம் அல்லவா – அந்த ஜிந்தாபாத் என்ற வாழ்த்துக்குரியவராக முதலில் நம்முடைய அமிதாப் அவர்கள் இளமைப் பருவத்திலே விளங்கினார்கள். அதற்குப் பிறகு இங்கே நம்முடைய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல், பல்வேறு துன்ப துயரங்களுக்கெல்லாம் ஆட்பட்டு, அவைகளையெல்லாம் தனி ஒருவராக



நின்று சமாளித்து தன்னை நோக்கி வீசிய எதிர்ப்புப் புயலைக் கடந்து இன்றையதினம் நம்மிடையே மகிழ்ச்சிகரமாக வீற்றிருப்பது மாத்திரமல்ல, நமக்கும் மகிழ்ச்சிகரமான வாழ்த்துகளை தெரிவித்திருப்பது நாம் பெற்ற பெரும் வாய்ப்பாகும்.

**உயர்ந்த பரிசு**

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அமிதாப் அவர்களுக்கும் நினைவிருக்கு மென்று கருதுகிறேன். சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு – அவர் ஒரு முறை மிகவும் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் – எனக்கும் அவருக்கும் நெருங்கிய நட்பு இல்லாவிட்டாலுங்கூட – அவர் என்னை நேரடியாகப் பார்த்ததில்லை, அவர் என்னைப் பார்த்ததில்லை என்ற நிலை இருந்தாலுங்கூட – இந்தியத் திருநாட்டிலே திரையுலகத்திற்கு ஒரு இழப்பு ஏற்பட்டு விடுமோ என மிகவும் வருந்தி, அவருக்கு நான் ஒரு நீண்ட தந்தி அனுப்பினேன். ''நீங்கள் விரைவில் நலம் பெற வேண்டும்'' என்று. அவருக்கு வந்த ஆயிரக்கணக்கான தந்திகளில், இதை அவர் தேடிப் பார்க்க முடியாது – ஆனால் கலை உணர்வு, அவருக்கு உள்ள தேசப் பற்று – அவர் நாடாளுமன்றத்தில் பொறுப்பேற்று, அவர் ஆற்றிய கடமைகள் – அவர் அளித்த கருத்துகள் – இவைகளின் பால் எனக்குள்ள பற்று, பாசம், மதிப்பு, மரியாதை என்றைக்குமே குறைந்ததில்லை. அதனால் தான் நன்றி தெரிவிக்கின்ற இந்த விழாவில் – இந்த விழாவை ஏற்பாடு செய்த நண்பர்கள், திரையுலகத்தினர், குறிப்பாக இயக்குநர் ராமநாராயணன், குகநாதன் போன்றவர்கள் தெரிவித்த நன்றிகளுக்கெல்லாம் சிகரமாக அமிதாப்பச்சன் அவர்களை இங்கே அழைத்து வந்து, அவர் மூலமாக வாழ்த்துகளைத் தெரிவித்திருப்பதுதான் – இங்கே அவர்கள் எனக்கு அளித்த பொற்கலசம், தங்கபூமி உருண்டை போன்ற பரிசுகளையெல்லாம்விட உயர்ந்த பரிசாக நான் கருதுகிறேன்.

> “இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு. இந்த அரசின் அடிப்படையே – அடித்தளத்து மக்கள் – ஏழையெளிய மக்கள் – வியர்வை சொட்டச் சொட்ட வேலை செய்து வாழ்கின்ற மக்கள் – அந்த மக்களுக்கு நம்மாலானதைச் செய்ய வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம். ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்று அறிஞர் அண்ணா சொன்னதை நாம் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தான் ஏழையைச் சிரிக்க வைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.”

அமிதாப் அவர்களுடைய வருகை, பலருக்கு பல ஐயப்பாடுகளையெல்லாம் உருவாக்கி யிருக்கலாம். கருணாநிதிக்கு விழாவா? அதிலே அமிதாப் கலந்து கொள்கிறாரா? இது சிலருக்கு மகிழ்ச்சியை தந்திருக்கலாம் – சிலருக்கு ''மருட்சி''யைத் தந்திருக்கலாம். மகிழ்ச்சிக்கும், மருட்சிக்கும் அதிக வேறுபாடு. நான் அதுபற்றி

விளக்க விரும்பவில்லை. நம்முடைய அமிதாப் அவர்கள் இங்கே உரையாற்றிய போது – தமிழ்நாட்டுத் திரைப்பட உலகம் எவ்வளவு கடமை உணர்ச்சியோடும், கட்டுப்பாட்டுத் தன்மையோடும் விளங்குகிறது என்பதைப் பாராட்டினார்கள். அந்தப் பாராட்டு நிலைக்க வேண்டும் – நீடிக்க வேண்டும் – தொடர்ந்து கிடைத்திட வேண்டும் என்பதை மனதிலே வைத்துத் தான் – சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களும் – தம்பி சரத்குமார் அவர்களும் – கலைஞானி கமலஹாசன் அவர்களும் இங்கே அந்தக் கருத்தை வழி மொழிந்து பேசியிருக்கிறார்கள். என்னைப் புகழ்ந்த போது எனக்களித்த அழைப்பிதழிலும் சரி – அழைப்பிதழைக் கொண்டு வந்து கொடுத்த நண்பர்களும் சரி – நீங்கள் வழங்கிய அந்த இடத்திற்கு "கலைஞர் நகர்" என்று பெயரிடப் போகிறோம் என்று சொன்னார்கள். "கலைஞர் நகர்" என்றும் பேரிடுகிறார்கள் – "கலைஞரை, நகர்" என்றும் எனக்கு ஆணையிடுகிறார்கள். நான் நகர்வதா அல்லது நகராக இருப்பதா என்பது தமிழ்நாட்டு மக்களுடைய தீர்ப்பிலே இருக்கிறது.

## ஏழைகளுக்கும் கல் வீடுகள் கட்டித்தரும் அரும்பணி

ஏறத்தாழ 90 ஏக்கரா நிலத்தை திரைப்படத் தொழிலாளர்கள், கலைஞர்கள், துணை நடிகர்கள், இயக்குநர்கள் – இவர்கள் எல்லாம் குடியிருப்பதற்கு – வீடு கட்டிக் கொள்வதற்கு வழங்க வேண்டுமென்ற வேண்டுகோள் உடனடியாக ஏற்கப்பட்டது. இதே மேடையிலே தான் இரண்டொரு மாதங்களுக்கு முன்பு அந்த உறுதியை நான் அளித்தேன். இப்போது அங்கே வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. அதற்கான அடித்தளம், அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறவிருக்கின்றது. அதுமாத்திரமல்ல, சென்னையைச் சுற்றியுள்ள, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள திரைப்படத் தொழிலாளர்களுக்கு இந்த வசதியை செய்து கொடுத்தால் போதுமா? போதாது என்று நான் கருதிய காரணத்தால் தான் அண்மையிலே கவர்னர் உரையில், இந்த அரசாங்கத்தின் சார்பாக ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம். விரைவில் தமிழ்நாட்டில் எந்த ஊரிலும், கிராமத்திலும், நகரத்திலும் குடிசைகளே இல்லாத நிலையை இந்த அரசு உருவாக்கப் போகிறது என்று அறிவித்திருக்கிறோம். மார்ச் 3ஆம் தேதி, அதற்கான கால்கோள் விழா திருச்சி நகரத்திலே நடைபெறவிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 1,800 கோடி ரூபாய்ச் செலவில், அரசாங்கத்தின் சார்பில் வீடுகள் கட்டி – ஏறத்தாழ 21 இலட்சம் குடிசைகளை – நல்ல கட்டுமானத்தோடு கூடிய கல் வீடுகளாக கட்டித் தருகின்ற அரும்பணியை இந்த அரசு செய்யவிருக்கிறது. அதற்கு முன்னோட்டமாகவும், தூண்டுதலாகவும் இந்த நிகழ்ச்சி அமைந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

## ஏழைகளின் இதயம்

90 ஏக்கரா நிலத்திற்கு இவ்வளவு பெரிய ஏற்பாடு – இவ்வளவு பெரிய நன்றியறிவிப்பு கூட்டம் – வடக்கேயிருந்து நமது அமிதாப்பச்சன் அவர்கள் வருகைதந்து வாழ்த்துகிறார்கள் என்றால், கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 1,800 கோடி ரூபாய்ச் செலவில் – ஆறு ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக 21 இலட்சம் வீடுகளைக் கட்ட – நாம் திட்டமிட்டிருக்கிறோமே, அதற்கு நன்றியறிவிப்பு நடத்த தமிழகத்திலே எங்கேயாவது இடம் இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தேன். அந்த இடம் மைதானமாக இல்லை, கடற்கரையாக இல்லை, நிலமாக இல்லை, அந்த இடம்

உங்களுடைய இதயமாக இருக்குமென்ற நம்பிக்கையோடு – ஏழைகளின் இதயமாக அந்த இடம் இருக்குமென்ற அந்த நம்பிக்கையோடு தான் இந்த அரசு அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றது.

### அரசியல் வேண்டாம்

இங்கே எனக்கொன்று புரியவில்லை. இங்கே தம்பி சரத்குமாரும், தம்பி ராதாரவியும், குகநாதனும் பேசும்போது ஏதோ திரைப்படத் தொழிலாளர்களுக்கிடையே மன வருத்தங்கள், ஒற்றுமையின்மை இருப்பதாகவும் அதைப் போக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். நாமெல்லாம் இங்கே ஒன்று சேர்ந்திருப்பது – அரசியல் ரீதியாக அல்ல. நாமெல்லாம் ஒரே குடும்பம் என்று சொல்வது – கலைக் குடும்பம் என்ற அந்த வார்த்தையின் அடிப்படையிலே தான் இங்கே ஒன்று சேர்ந்திருக்கிறோம். இதிலே அரசியலை நுழைக்க நான் விரும்பவில்லை. அரசியல் தானாக நுழைந்தால் அதற்கு நான் பொறுப்பும் அல்ல. அரசியலை நுழைத்து இதை யாரும் கெடுத்து விடாதீர்கள். அரசியலை நுழைத்து மேலும் நன்மைகளைச் செய்ய வேண்டுமேயல்லாமல், அரசியல் நுழைந்தால், ஆமை புகுந்த வீடாக இந்தத் திரைப்படத் துறை அமைந்துவிடக் கூடாது என்பதில் நான் மிகுந்த அக்கறையாக இருக்கிறேன். ஆகவே அரசியலை நுழைக்க வேண்டாம். கருத்து வேறுபாடுகளுக்கு இடம் தர வேண்டாம். யாரையும் வலியுறுத்தி – வருகிறாயா, இல்லையா என்று கேட்கவும் வேண்டாம். வந்தவர்களை வாழ்த்துவோம் – அவர்களை வாழ்த்தச் சொல்லிக் கேட்போம். இதைத் தான் நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு. இந்த அரசின் அடிப்படையே – அடித்தளத்து மக்கள் – ஏழையெளிய மக்கள் – வியர்வை சொட்டச் சொட்ட வேலை செய்து வாழ்கின்ற மக்கள் – அந்த மக்களுக்கு நம்மாலானதைச் செய்ய வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம். ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்று அறிஞர் அண்ணா சொன்னதை நாம் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தான் ஏழையைச் சிரிக்க வைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். அந்த முயற்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற கலைஞர்கள் – தலைவர்கள் – அரசுகள் – அனைத்துக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நாம் எடுக்கின்ற இந்தக் காரியங்களுக்கு – இந்தச் செயல்களுக்கு – நாம் கட்டிக்காக்கின்ற ஒற்றுமைதான் வலிவானது. அந்த ஒற்றுமையை மீண்டும் மீண்டும் நீங்கள் கட்டிக் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நீங்கள் தந்த சிறப்பான வரவேற்புக்கும் – நீங்கள் தந்த பரிசுகளுக்கும் – நீங்கள் அளித்த வாழ்த்துகளுக்கும் – என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனித்தனியாக நான் யாரையும் குறிப்பிட்டு இங்கே பேச முடியாது. காரணம் எல்லோரும் ஒரே உருவமாக நாம் இருக்கும்போது – எல்லோரும் நம்முடைய உறவிலே கலந்தவர்களாக இருக்கும்போது – நான் யாரையும் தனித்தனியாகப் பிரித்து அவர்களுக்கு நன்றி சொல்லவில்லை என்று கவலைப்பட வேண்டாம். நான் நன்றி என்று சொல்வதே திரையுலகத்திலே உள்ள என் உடன்பிறப்புகள் அனைவருக்கும் தான் நன்றி என்று சொல்கிறேன் என்று கூறி – உடன் பிறப்புகள் வாழ்க, வெல்க என்று கூறி விடைபெறுகிறேன்.

□ □ □

# உலகத் திருக்குறள் பேரவை சார்பில்
# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு
# திருக்குறள் பேரொளி விருது




10-2-2010 அன்று சென்னையில் நடைபெற்ற
திருக்குறள் பேரொளி விருது வழங்கும் விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

நம்முடைய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தொடர்ந்து எடுத்துள்ள முயற்சியின் உச்சமாக இன்றையதினம் "திருக்குறள் பேரொளி" என்ற விருதினை எனக்கு வழங்குகிற நிகழ்ச்சி உங்கள் அத்தனை பேருடைய நல்ல வாழ்த்துகளோடும், மகிழ்ச்சி ஆரவாரத்தோடும் நடைபெற்றிருக்கிறது. நீண்ட நாட்களாக இத்தகைய ஒரு விருதினை எனக்கு வழங்க வேண்டுமென்ற ஒரு பேரவாவோடு நம்முடைய அடிகளார் அவர்கள், இதற்குரிய நாளைக் குறித்துத் தர வேண்டுமென்று என்னை வலியுறுத்திக் கொண்டே வந்தார். நான், எனக்குள்ள அலுவல்களையும், நான் கடந்த ஆண்டு அறுவை சிகிச்சை செய்து கொண்ட காரணத்தால் ஏற்பட்டுள்ள உடல் நலிவினையும், இன்னும் வருங்காலத்திலே காண வேண்டிய பல்வேறு பணிகளையும் எடுத்துச் சொல்லி, "இந்த விழா தேவையா?" என்று கேட்டேன். "இல்லை, இல்லை, என்னுடைய ஆசையை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்" என்று கேட்டார்கள். துறவிகளுக்கு ஆசை வரக்கூடாது. ஆனால், இந்த ஆசையை நாம் புறக்கணிக்க முடியாது. எனவே, அவருடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்கு தோதாக, இந்த நாளைக் குறிப்பிட்டு, இதைத் தொடர்ந்து பல நாட்கள் விழாக்களும், வேறு பல வரவேற்பு நிகழ்ச்சிகளும்

இருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, அவருடைய அன்புக் கட்டளையை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கின்றேன்.

நான் நம்முடைய பொன்னம்பல அடிகளாரிடத்திலே கொண்டிருக்கின்ற அன்பும், பாசமும், திடீரென்று வந்ததல்ல. குன்றக்குடி மகா சன்னிதானம், குன்றக்குடி அடிகளார் – மறைந்தும், நம் நெஞ்சில் நிறைந்திருக்கின்ற அவருடைய வழித் தோன்றலாக, இந்த ஆதீனத்தை நிர்வகித்து வருகின்ற, இன்னும் சொல்லப்போனால், அவர் வழியில் நின்று தமிழைக் காப்பாற்றுகின்ற போர் வீரராக, போர்த் தளபதியாக இவர் விளங்குகின்ற காரணத்தால், எப்படி பெரியவரிடத்திலே மதிப்பும், மரியாதையும் உண்டோ, அன்பும், பாசமும் உண்டோ, பற்றும், பிடிப்பும் உண்டோ, அதைப் போன்றே இளையவரான, அவரைத் தொடர்ந்து இந்த ஆதீனத்தைக் கட்டிக் காக்கின்ற, அரிய பொறுப்பை ஏற்றுள்ள தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களிடத்திலும் உண்டு.

குன்றக்குடி அடிகளார் என்றாலே, பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. உருவத்தால் மாத்திரமல்ல; உள்ளத்தாலும், இருவரும் ஒன்றே போல் காணப்படுகின்றவர்கள் – ஒன்றாகத் திகழ்பவர்கள் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் உணருவீர்கள். இவருக்குள்ள இந்தத் தமிழ்த் தாகத்தை, தமிழ்ப்பற்றினை, தமிழ் இனத்தின் மீது அவர் கொண்டுள்ள ஆர்வம் மிகுந்த அபிமானத்தை, நான் எண்ணி எண்ணிவியந்து கொண்டிருப்பவன். அப்படிப்பட்டவர் இந்த விழாவிற்கு என்னை அழைத்து, அவருடைய திருக்கரங்களால், இந்த அருமையான, அவருக்கு விருப்பமான, எங்களுக்கெல்லாம் ஆச்சரியமான, வியப்புக்குரிய இந்த விருதை வழங்கியிருப்பது, உள்ளபடியே அவரும், அந்த மடாலயத்திலே உள்ள நண்பர்களும், அவருடைய தலைமையிலே செயல் திறனோடு நடைபெறுகின்ற உலகத் திருக்குறள் அமைப்பினுடைய ஆர்வமும் எங்களுக்குப் பளிச்சிடாமல் இல்லை.

**குன்றக்குடி அடிகளாரின் கவிதையாக வடிக்கப்பட்ட கடிதம்**

மறைந்தும் மறையாத, நம் நினைவில் நிழலாடிக் கொண்டிருக்கின்ற குன்றக்குடி அடிகளார் – பெரியவரை மேலவை உறுப்பினராக இருக்க வேண்டுமென்று நான் அந்தக் காலத்தில் கேட்டபோது, சற்று காலந்தாழ்ந்து, ஆனாலும், நான் விரும்பியவாறு ஒப்புதல் தந்து ஒரு கடிதம் எழுதினார். அது கவிதையாக வடித்தெடுக்கப்பட்ட கடிதம். அதிலே அவர் எழுதியிருக்கிறார்:

"அருமைக் கலைஞர் நமை மேலவையில்
இருக்கச் செய்தது என்ன கருதியோ?
நெடிய நேரம் நினைந்த பின்னும்
புலப்படவில்லை; புலப்படவில்லை!
நமது ஆ தீனம், அஃதண்ணாமலை
ஆதீனம்; ஆம், அண்ணா என்ற
முதன்மைச் சொல்லில் மூண்ட காதலோ?
பேசும் மொழியால், பெட்புறு நெறியால்
தமிழினத்தைச் சார்ந்தது கருதியோ?
குன்றக்குடியைக் குன்ற விடாமல்
நின்று விளக்கிட நினைத்தோ? இவரை
ஏற்றிப் பார்க்கலாம் என்ற எண்ணமோ?
ஒதுங்கி மடத்தில் உட்கார்ந்தவரை
மன்றில் நிறுத்தி வேடிக்கை பார்க்கவோ?
பிறந்த மொழியைப் பயின்றநாள்
தொட்டுத்
தொண்டு நெறியின் சுவைதேறியநீ



நம்மையும் தொண்டு நெறியில் நடாத்தித்
தூண்டக் கருதியோ? தொன்மைச்
சிறப்பின்
தாரணி புகழும் தஞ்சை மண்ணிடை
ஒருங்கே பிறந்தோம் எனும்
பாசத்திலோ?''

*– (நானும் அவரும் தஞ்சை
மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்) –*

''சென்ற நாட்களில் சிலதுறை யேற்றுத்
தொண்டு செய்ததில் தொடர்ந்த
துன்பத்தை
கண்டு களைந்திடுங் கருத்தது
தானோ?
தமிழ்மொழித் துறையில் தக்கபே ரறிவ
இல்லையெனினும் எழிற்றமிழ்ப் பற்று.'' –
*(எவ்வளவு அடக்கம் பாருங்கள்
அவருக்கு ?)*

மிக்கோர் என்னும் விரிந்த கருத்திலோ?
இழிசா தியெனக் கிடந்தநம் இனத்தை
ஏற்ற முறச் செய் பெரியார் எம்மிடைக்
கொண்ட பாசம் குறித்து நினைத்ததோ?
எதுவென அறியோம்! யாது செய்வதென
விளங்கவுமில்லை! வேண்டுவதொன்று
இன்றே போல்க, உமது கேண்மை!
தாங்கு புகழார் தரணிக்கு நீ செய்யும்
பணிக்குடன் நிற்கும்
வாய்ப்பளித்தமைக்கு
உளமார் நன்றி! உவந்துரை செய்தோம்.
எழுபிறப்பும் யாம், எம்முளம் கொள்வோம்
உழுவலன்புத் திறத்தினை
வாழ்த்துவோம்''

என்று அடிகளார் எழுதியிருந்தார். இது எனது "நெஞ்சுக்கு நீதி" இரண்டாம் பாகம் புத்தகத்தில் 185–ஆவது பக்கத்திலே அச்சாகி வெளியிடப்பட்டிருக்கிறது

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் – புத்தக விற்பனைக்காக அல்ல – அந்த அளவிற்கு என்னிடத்திலும், நான் எந்த இயக்கத்திலே என்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கின்றேனோ, அந்த இயக்கத்திலே தலைவர்களாக இருந்த அண்ணா அவர்களிடத்திலும், அண்ணாவை உருவாக்கிய அய்யா பெரியார் அவர்களிடத்திலும், அவருக்கிருந்த ஆழமான பற்றினை இங்கே நான் இந்த நிகழ்வின் மூலமாக விளக்கியிருக்கிறேன்.

**திருக்குறளே பேரொளிதான்**

அதே வழியில் நம்முடைய குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களும் விளங்கி வருகிறார் என்பதை எண்ணும்போது, நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இந்த மகிழ்ச்சியை நான் மேலும் பெருக்கிக் கொள்வதற்கு தேவை என்று கருதியோ, என்னவோ, அவர்கள் இன்றைக்கு "திருக்குறள் பேரொளி" என்ற விருதினை வழங்கியிருக்கிறார்கள். திருக்குறளே பேரொளிதான். "அந்தப் பேரொளிக்கு திருக்குறள் என்று பெயரிடத் தேவையா?" என்பதுதான் என் கேள்வி. இருந்தாலும், திருக்குறளை பேரொளி என்று இருட்டிலே இருப்பவர்களுக்கெல்லாம் உணர்த்துவதற்காகவாவது, இந்த விருது பயன்படட்டும் என்று எண்ணியோ, என்னவோ, இந்தப் பேரொளியை அவர்கள் எனக்குத் தந்திருக்கிறார்கள். இந்தப் பேரொளியை – "ஏதோ என்னைச் சுற்றி வட்டமிடுகின்ற ஒளி" என்று கருதாமல், "என் கையிலே தூக்கிப் பிடித்திருக்கின்ற ஒளி" என்ற உணர்வோடு தமிழை, தமிழின் புகழை இந்தத் தரணியிலே நிலைநாட்டுவதற்குப் பயன்படுத்துவேன் என்ற உறுதிமொழியை நான் அவருக்கும், அவருடைய மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாய்மையே வெல்லும்**

அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று சட்டமன்றத்திலே, நானும், நாவலரும், பேராசிரியரும் அமருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்ட போது, அப்பொழுதுகூட சில வாசகங்களை எப்படியெல்லாம் நாம் நடைமுறைப்படுத்தலாம் என்று எண்ணிய நேரத்திலே, "சத்தியமே ஜெயதே" என்றிருந்த அந்தச் சொற்றொடரை எப்படி மாற்றலாம் என்று கருதியபோது, "சத்தியம்" என்றால் வாய்மை; "வாய்மை வெல்லும்" என்று சொல்லலாமே? என்று யோசித்து, "வாய்மையே வெல்லும்" என்றிருக்கலாம் என்று அந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினோம். அது சில நாட்களுக்கு எதிர்ப்புக்கு ஆளாயிற்று. ஆனாலும்கூட, பழகப் பழக அனைவரும் அதையேற்றுக் கொண்டு, "வாய்மையே வெல்லும்" – நம்முடைய தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சுட்டுச் சொல்லாக, இலட்சினைச் சொல்லாக இன்றைக்கு மாறி விட்டிருக்கின்றது.

**உண்மை வேறு வாய்மை வேறு**

"வாய்மை" என்றால் உண்மையென்று யாரும் கருதிவிடக்கூடாது. உண்மை வேறு; வாய்மை வேறு. வாய்மையாக இருப்பது வேறு; உண்மையாக இருப்பது வேறு. "உண்மை சொன்னான், உண்மை பேசினான்" என்றுதான் உண்மை என்ற சொல் வருமே தவிர, தனியாக உண்மைக்கு அந்தப் பொருள் கிடையாது. வாய்மைதான் தனியாக உச்சரிக்கக் கூடிய, பயன்படுத்தக்கூடிய, எடுத்துக் காட்டக்கூடிய ஒரு சொல். உண்மையையும், வாய்மையையும் ஒன்றாக எண்ணிக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு. அப்படி இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். "வாய்மை" என்பது,

பிறருக்குத் தீங்கில்லாமல் சொல்லப் படுகின்ற ஒரு சொல்லுக்குப் பெயர்தான் வாய்மை அடிப்படையிலே பிறக்கின்ற ஒரு சொல்லாகும். யாருக்கும், எந்தவித கெடுதலும் ஏற்படாமல், இந்த வார்த்தையினால் உறுதியோடு சொல்லப்படுகின்ற சொல் "வாய்மை" ஆகிறது. "உண்மை" என்பதை அதற்கு அடுத்த கட்டத்திலே வைக்கலாமே தவிர, அது வேறு, இது வேறு.

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்"

என்றார் வள்ளுவர். அதற்கு நான் குறளோவியத்திலே விளக்கம் அளித்திருக்கிறேன்.

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்"

என்று வள்ளுவர் சொன்னதற்கு ஒரு சிறுகதை. அந்தக் கதையில் வேடன் ஒருவன் வில்லும், அம்பும் கையில் ஏந்தி வேகமாக வருகின்றான். வருகிற வேடனுடைய குறிக்கோள், அவனால் துரத்தப்பட்ட மான் குட்டியைப் பிடிக்க வேண்டுமென்பதுதான். அம்பெய்து கொன்று அந்த மானை உணவாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற குறிக்கோளோடு வேடன் வருகிறான். வள்ளுவர் தன் குடிலிலே அமர்ந்திருக்கிறார். அந்தக் குடிலுக்குள்ளே மான் குட்டி ஓடி, ஒளிந்து கொள்கிறது. ஓடி வந்த வேடன், வள்ளுவரைப் பார்த்து, "அய்யா இங்கே ஒரு மான் குட்டி வந்ததா, எங்கே ?" என்று கேட்கிறான். அதற்கு வள்ளுவர் "மான் குட்டியா, வரவில்லையே ?" என்கிறார். வேடன் திரும்பிப் போய் விடுகிறான். மான் குட்டி தப்பித்துக் கொள்கிறது. பக்கத்திலே இருக்கிற ஒருவர், வள்ளுவரைப் பார்த்து, "ஏனய்யா ஊருக்கெல்லாம் உண்மையைப் பேசச் சொல்லி அறிவுரை கூறுகிறீர்கள். ஆனால் நீங்கள் வேடனிடத்திலே பொய்யாக மான் குட்டி வரவில்லை என்று சொல்லிவிட்டீர்களே" என்கிறான். உடனே வள்ளுவர் சொல்கிறார். "நான் உண்மையைச் சொல்லியிருந்தால் மான் குட்டி இந்நேரம் வேடன் வயிற்றுக்குள் போயிருக்கும். அதனால் தான் நான் வாய்மையோடு மான் குட்டியைக் காப்பாற்றினேன்" என்கிறார். மேலும், அவர் கூறும் போது "மான் குட்டி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என்னிடம் வந்தது. அது இங்கே தான் இருக்கிறது, போய் பிடித்துக் கொள் என்று சொன்னால் மான் குட்டியின் கதி என்ன ஆகும் என்று எனக்கும் தெரியும், உனக்கும் தெரியும். அதனால் தான் நான் இந்தப் பொய்யைச் சொன்னேன்" என்கிறார். "அப்படியென்றால் பொய் சொல்லலாமா ?" என்று கேட்கிற போது, வள்ளுவர், "அதற்குத் தானப்பா இந்தக் குறளை எழுதியிருக்கிறேன். *"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்"* – ஒரு நல்ல காரியத்தை செய்வதென்றால், அந்த நேரத்தில் பொய்மை கூட, வாய்மையின் இடத்திலே வைக்கப்படும். வாய்மை என்பது உயர்ந்ததோர் பண்பாடு. வாய்மையின் இடத்திலே வைக்கப்படும் என்று நான் சொல்வதற்குக் காரணமே, பொய் தவறு தான், இருந்தாலுங் கூட அது ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுமேயானால், சொல்லலாம். இப்போது நான் சொன்னது நல்ல காரியத்திற்குப் பயன்பட்டிருக்கிறதா இல்லையா ? மான் குட்டியைக் காப்பாற்றியிருக்கிறதா இல்லையா ? அதனால் அதுவும் வாய்மையின் இடத்திலே வைக்கப்படும்" என்று வள்ளுவர் சொல்லி தன்னுடைய குறளுக்கு விளக்கம் அளித்ததாக நான் குறளோவியத்தில் விளக்கம் அளித்திருக்கிறேன்.

குறளோவியம்

இப்படி பல குறட்பாக்களுக்கு சித்திரம் தீட்டிய காரணத்தால் – ஓவியம் தீட்டிய காரணத்தால் அனைத்தும் நிறைந்த புத்தகமாக – குறளோவியம் வெளியிடப்பட்டது. உலக உத்தமர் காந்தியடிகளைப் பற்றியும் குறளோவியத்திலே எழுதியிருக்கிறேன். புரட்சித் தலைவன் லெனினைப் பற்றியும், குறளோவியத்திலே கவிதையும், குறளும் இடம் பெற்றிருக்கின்றன. காரல் மார்க்சின் மனைவி ஜென்னி மார்க்சின் குடும்ப வாழ்க்கையைப் பற்றியும் – அந்தக் குடும்ப வாழ்க்கையில் அவர்கள் அனுபவித்த தொல்லைகள் பற்றியும் – தன்னுடைய கணவன் ஈடுபட்டிருக்கின்ற பொது வாழ்வில் எவ்வளவு துன்பம் வந்தாலும் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று அந்த அம்மையார் அனைத்தையும் சகித்துக் கொண்டார்களே, அதைப் பற்றியும் குறளோவியத்திலே வர்ணனை வருகிறது, பாராட்டு வருகிறது, செய்தி வருகிறது. இப்படி அனைத்துலக அளவிலும் நம்முடைய நாட்டளவிலும் நம்முடைய சமுதாய அளவிலும் நம்மளவிலும் பல நிகழ்வுகளை குறளோவியத்திலே நான் தீட்டிக் காட்டியிருக்கிறேன்.

அதையெல்லாம் இங்கே பாராட்டுகின்ற வகையில் நம்முடைய அடிகளார் அவர்கள் இங்கே சொன்னார்கள் – அதற்காகத் தான் இந்த விருது கொடுப்பதாக எடுத்துக் காட்டினார்கள். குறளோவியத்திலே இரண்டு குறள்களுக்கு நான் தந்துள்ள விளக்கத்தை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குழந்தையின் கை பட்டு அமிழ்தமான கூழ்

உழவன் வீட்டிற்கு வேகமாக வருகிறான் பசியாற – கலப்பை தூக்கி, பாடுபட்டு வயலிலே உழைத்துவிட்டு வீட்டிற்கு வருகின்ற உழவன் துணைவியைப் பார்த்து சாப்பிட என்ன வைத்திருக்கிறாய் என்கிறான். வழக்கம் போல் கூழ் காய்ச்சி வைத்திருக்கிறேன் என்று மனைவி சொல்கிறாள். கூழ் தானா என்று சொல்லிக் கொண்டு உட்காரு கிறான். ஆமாம் என்று கூழ் கலயத்தைக் கொண்டு வந்து அவன் முன்னால் மனைவி வைக்கிறாள். அப்போது கூடத்தில் தவழ்ந்து கொண்டிருந்த குழந்தை மெல்ல மெல்ல தவழ்ந்து அந்தக் கூழ் கலயத்திற்குள்ளே தன் கையை விடுகிறது. கூழைக் கலக்குகிறது. உடனே கூழ் அமிழ்தமாகி விட்டது என்கிறான் உழவன். மனைவி, உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? அது கூழ் கலயமல்லவா? அது எப்படி அமுதமாகும்? என்று கேட்கிறாள். குழந்தை தன்னுடைய கையால் கூழை துழாவிய காரணத்தால், அது அமிழ்தமாக ஆகிவிட்டது என்று தந்தை சொல்கிறான்.

குழந்தையின் கை பட்டாலே, தான் அருந்துகின்ற உணவு கூட அமிழ்தமாக ஆகிவிட்டது என்று கருதுகின்ற அளவிற்கு குழந்தையின் அருமையை வள்ளுவர்

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்று சொல்லிக் காட்டுகிறார். கருணாநிதி அமிழ்தத்தைப் பற்றி இங்கே சொல்கிறார். அமிழ்தம் என்றால் அது தேவர்கள் உண்பதல்லவா? அமிழ்தத்தை ஒத்துக் கொண்டால் தேவர்களையும் ஒத்துக் கொள்கிறாரா? தேவர்களை ஒத்துக் கொண்டால் புராணத்தையும் ஒத்துக்

கொள்கிறாரா ? என்ற கேள்வி எழக் கூடும். நான் அதற்குத் தருகின்ற விடையல்ல – விளக்கம் – நான் அமிழ்தம் என்று குறிப்பிடுவது வள்ளுவருடைய குறளை எடுத்துக் காட்டிச் சொல்ல வேண்டுமேயானால் –

“வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று'' –


வானத்திலிருந்து வருவது மழை – அந்த மழை அமிழ்தமாக ஆகிறது மக்களுக்கு. உழவனுக்கு அமிழ்தம் மழை தானே ? அத்தகைய அமிழ்தம் இது. அப்படி அமிழ்தமாக ஆகி விட்டது என்று அந்தத் தாயோ, தந்தையோ சொல்கிறார்கள் என்று நான் குறளோவியத்திலே தீட்டியிருக்கிறேன்.

**நாத்திகம் – ஆத்திகம்**

நீ அமிழ்தத்தை ஒத்துக் கொள்கிறாயா ? அது தேவர்களுடைய உணவு ஆயிற்றே என்று கேட்டால், ஒத்துக் கொண்டு தானே ஆக வேண்டும். அமிழ்தம் மாத்திரமல்ல – அமிழ்தம் தேவர்களுக்கு உணவு – உண்மை தான். ஆனால் அந்த அமிழ்தத்தைப் பற்றி ஒரு கதையே உண்டு. தேவர்களும், அசுரர்களும் மேரு மலையை மத்தாகக் கொண்டு, வாசுகி என்ற நீளமான பாம்பை கயிறாகப் பிடித்து திருப்பாற்கடலைக் கடைந்து – அப்படி கடையும் போது வீரர்களான தேவர்கள் அந்தப் பாம்பின் வாலைப் பிடித்துக் கொண்டு கடைந்தார்கள் – கோழைகளான அசுரர்கள் பாம்பின் தலையைப் பிடித்துக் கொண்டு கடைந்தார்கள். அமுதமும், அதோடு சேர்ந்து ஆலகால விஷமும் திரண்டு வந்தது. ஆல கால விஷத்தை ஆண்டவன் பரமசிவன் – அதை வெளியே விட்டால் உலகத்தை அழித்து விடும் என்று – அதை வாங்கி வாயிலே போட்டுக் கொண்டான். அவனே விழுங்கினால் அவனிக்கு ஆபத்து என்று அருகிலேயிருந்த அன்னை பார்வதி அவனுடைய கழுத்தைப் பிடித்துக் கொண்டாள். அது உள்ளே போய் விடக் கூடாது என்று அமுக்கிப் பிடித்துக் கொண்டாள். அன்றைக்கு பார்வதி பிடித்த அந்தப் பிடி தான் பரமசிவனின் நெஞ்சிலே அழுத்தி – இன்றைக்கும் ஆண்களுக்கு கழுத்திலே ஒரு எலும்பு இருப்பதற்குக் காரணம் அதனால் தான் என்று புராணங்கள் சொல்கின்றன. இது கதையல்ல – ஜோடித்த கற்பனை – அவ்வளவு தான். இப்படியெல்லாம் விஷமும் அமிழ்தமும் பாற்கடலிலே உருவாயிற்று என்பதையும் அதை அருந்தியவர்கள் தேவர்களும் அசுரர்களும் என்பதையும் – தேவர்கள் புத்திசாலித்தனமாக அமிழ்தத்தை எடுத்துக் கொண்டார்கள் என்பதையும் – அசுரர்கள் விஷத்தைத் தான் பங்கிட்டுக் கொண்டார்கள் என்பதையும் அந்தக் கதை விளக்குகிறது. இதையும் நான் குறளோவியத்திலே சித்திரித்துக் காட்டியிருக்கிறேன்.

இப்படி நடைமுறை வாழ்க்கை – சரித்திரச் சான்றுகள் – வரலாற்றுக் கதைகள் – நிகழ்வுகள் இவைகளை யெல்லாம் இணைத்து குறளோவியம் தீட்டப்பட்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து குறளுக்கு உரையும் எழுதியிருக்கிறேன். ஆனால் நான் எழுதிய உரை எந்தக் கொள்கையையும் சார்ந்தது அல்ல – வள்ளுவர் காலத்திலே இந்த நிலை இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து, அதற்கு முரணாகாமல் எழுதப்பட்ட உரை தான், நான் எழுதிய உரை.

சிலபேர் நாத்திகக் கருத்துகளை தாங்கள் கொண்டிருந்தால், வள்ளுவரையும் நாத்திகராக ஆக்குவதற்காக முயற்சி செய்திருப்பார்கள் – சில பேர் ஆத்திகக் கருத்துகளிலே பெரும் புலவர்களாக இருந்தால் அந்த ஆத்திகக் கருத்துகளை



வள்ளுவர் மீது சுமத்துவதற்கு அவர்கள் உரையிலே முயற்சி செய்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் நாத்திகத்தையும் திணிக்க விரும்பவில்லை – ஆத்திகத்தையும் புறக்கணிக்கவில்லை. வள்ளுவர் காலத்திலே அவர் என்ன நிலையிலே அதை எழுதியிருக்க முடியும் என்ற அந்த ஒரு உண்மையை உணர்த்துவதற்காகத் தான் உரைக்கு நான் முக்கியத்துவம் தந்திருக்கிறேன்.

இவைகளையெல்லாம் நுணுகி ஆராய்ந்து நம்முடைய அடிகளார் அவர்கள் அவருக்கே உரிய தனித் தன்மையோடும், அவருக்கே உரிய தமிழ்ப் புலமையோடும் அவர் கொண்டிருக்கின்ற தமிழ் ஆர்வத்தோடும் என்னை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும், வெறும் குறளிலே மாத்திரமல்ல – எல்லா மொழிகளிலும் இந்தக் குறளைக் கொண்டு வருகின்ற பாண்டித்யம் பெற்றவனாக நான் ஆக வேண்டும் – இந்தப் பாராட்டு மூலமாக அந்த உணர்வை நான் பெற வேண்டுமென்பதற்காக இவைகளையெல்லாம் அவர் பாராட்டி, புகழ்ந்து இந்த “பேரொளி” என்கிற பட்டத்தைத் தந்திருக்கிறாரே அல்லாமல் – நான் ஒன்றும் பேரொளியின் அடியிலே இருப்பவன் அல்ல – என்னைச் சுற்றி பேரொளி ஒன்றும் வீசிக் கொண்டிருக்கவில்லை – ஒரு வேளை சொல்ல வேண்டுமேயானால், என்னைச் சுற்றி பேரொளி இருக்கிறது – அடிகளாரைப் போல – இங்கே அமர்ந்திருக்கின்ற வா.செ. குழந்தைசாமியைப் போல – இப்படி பல பேரொளிகள் என்னைச் சுற்றியிருக்கின்றன. அந்தப் பேரொளிகளால் நான் ஒளி பெறுகிறேன் என்றால், அவர்களுக்கெல்லாம் இந்த விருதைக் காணிக்கையாக்குகிறேன் என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

# இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் வெளிநாட்டு நிறுவனங்களின் கவனத்தை ஈர்க்கின்ற மாநிலமாக தமிழகம் திகழ்கிறது




5.2.2010 அன்று சென்னைக்கு அருகில் மறைமலைநகரிலுள்ள போர்டு கார் நிறுவனத்தின் விரிவாக்கத் தொழிற்சாலையின் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

**போ**ர்டு இந்தியா நிறுவனத்தின் விரிவாக்கத் தொழிற்சாலை துவக்க விழாவில் இன்று நான் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் இங்கே குறிப்பிட்டபடி மதிப்புமிக்க போர்டு கார் நிறுவனத்தின் 1,700 கோடி ரூபாய் முதலீட்டில் முதல் தொழிற்சாலையை நான் கடந்த 1999ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று துவக்கி வைத்தேன் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

இந்தத் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 24.9.2009 அன்று எனது முன்னிலையில் கையெழுத்தாயிற்று. இன்று நாம் இந்த ஆலையின் விரிவாக்கத் திட்ட துவக்க விழாவிற்காகக் கூடியுள்ளோம். குறைந்த கால அவகாசத்தில் இப்படிப்பட்ட குறிப்பிடத்தகுந்த சாதனை படைத்துள்ள போர்டு நிருவாகத்தைப் பாராட்டுகிறேன்.

இந்த விரிவாக்கத்தின் விளைவாக போர்டு நிறுவனத்தின் உற்பத்தித் திறன் ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் கார்களாக அதிகரித்து, இந்தியாவில் மோட்டார் வாகன உற்பத்தியில் சென்னையின் முன்னணி நிலையை வலுப்படுத்தும் வகையில் உள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.



மேலும், சென்னையில் போர்டு நிறுவனம் தற்போது ஏறத்தாழ ஆறாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது என்று அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னையில் போர்டு நிறுவனத்தின் விரிவாக்கம் எங்களது சாதகமான முதலீட்டுச் சூழல் நிலவுவதற்கு நல்லதொரு அத்தாட்சியாக இருக்கிறது.

2006ஆம் ஆண்டு மே மாதம் முதல், புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்காக 25 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டும் மேலும் 12 தொழிற்சாலைகளுக்கு ஆணைகள் பிறப்பித்தும் உள்ளது. இந்த 37 தொழிற்சாலைகளின் மூலம் ரூ.46,091 கோடி முதலீடு செய்யப்பட்டு, இரண்டு இலட்சத்து 22 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகிறது.


ஆக்ஸ்போர்டு அனலைட்டிகா என்ற சர்வதேச சுயேட்சையான ஆலோசனை நிறுவனம், சமீபத்தில் 'இந்தியா மாற்று கட்டமைப்பு' (India Deconstructed) என்ற ஆய்வை நடத்தியது. இதன்படி, தமிழகத்தின் மேலும் சிறந்த தரமான கட்டமைப்பு மற்றும் நிருவாகம் ஆகியவற்றின் காரணமாக இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு மிகவும் ஈர்ப்புடையதாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு இந்தியாவில் 28 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களை ஆய்வு செய்து தமிழ்நாடு அவற்றில் மிகச் சிறந்த மாநிலமாகத் தேர்வு செய்துள்ளது.

எங்களது அரசு மோட்டார் வாகனத் தொழிற்சாலைகளுக்கு ஆதரவு அளிக்கும் மிகவும் கவர்ச்சிகரமான திட்டமான, 'ஒருங்கிணைந்த மோட்டார் வாகன தொழிற்சாலைகளுக்கான பிரம்மாண்டமான கொள்கை' என்ற புதிய கொள்கையை உருவாக்கியுள்ளது.

இந்தக் கொள்கையின் விளைவாக, 2006 மே மாதம் முதல் ரூ.27,170 கோடி முதலீட்டில் 16 பெரிய மோட்டார் வாகனம் மற்றும் உதிரிபாகங்கள் தொழிற்சாலைகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது.

எங்களது அரசு மாநிலம் முழுமையின் வளர்ச்சிக்குக் கடமைப்பட்டுள்ளது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற எமது மாநிலத்தின்




தென் பகுதிக்கு முதலீடுகளை ஈர்க்க சிறப்பு ஊக்கத் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளோம்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிப்பதுடன் மாநிலத்தின் முழுமையான வளர்ச்சி, சாதாரண மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு ஆகியவற்றிலும் எங்களது அரசு முனைப்பாக உள்ளது. கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில், சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் பயனடையக் கூடிய வகையில் ஏராளமான நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்துள்ளோம்.

நமது மக்களுக்கு மேலும் அதிகமான வசதிகளை அளிக்கும் எங்களது முயற்சியில், இளைஞர்களின் வேலைத் தகுதியை மேம்படுத்தவும், அவர்களது திறன் வளர்ச்சி மற்றும் பயிற்சி, உடல்நலம் ஆகியவற்றிற்காக போர்டு போன்ற பெரிய தொழில் நிறுவனங்கள் பங்கு பெறவேண்டும் என்று நாங்கள் விழைகிறோம்.

வேலைவாய்ப்புகளில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று முதலீட்டாளர்களுக்கு நான் மீண்டும் மீண்டும் அறைகூவல் விடுத்து வருகிறேன். இதே கொள்கையை போர்டு நிறுவனமும் கடைப்பிடித்து உள்ளூர் இளைஞர்களுக்கு பெருமளவு வேலைவாய்ப்பு அளித்துள்ளது என்று நம்புகிறேன்.

இந்தத் தருணத்தில், போர்டு நிறுவனத்தின் இந்த விரிவாக்கத் திட்டத்தைத் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வேளையில் போர்டு நிறுவனத்திற்கு எங்களது அரசு தொடர்ந்து ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கும் என்றும் உறுதி அளிக்கிறேன்.

இந்த விரிவாக்கத் திட்டம் பெரும் வெற்றிபெறவும் 'பீகோ' (FIGO) என்ற சிறிய கார் திட்டமும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்''.

விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

* * *

# நாட்டிலேயே முழுமையானதொரு ஜவுளித் தொழில் சங்கிலித் தொடரைக் கொண்ட ஒரே மாநிலம்

# தமிழ்நாடு




சென்னையில் 13–2–2010 அன்று நடைபெற்ற விழாவில், மத்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பருத்தி ஜவுளி ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 2008–09ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி விருதுகளை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

பருத்தி ஜவுளி ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமத்தின் விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். விருதுகளை வென்றவர்களைப் பாராட்டு கிறேன். ஒவ்வொரு ஆண்டும் இந்த விழா மும்பை நகரில் நடைபெறும் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. முதல் முறையாக சென்னையில் இந்த விழா நடைபெறுவது சிறப்புக்கும், பெருமைக்கும் உரியது.

உண்மையில் நாட்டிலேயே முழுமையானதொரு ஜவுளித் தொழில் சங்கிலித் தொடரைக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். நாட்டின் நூற்புத்திறனில் 47 சதவீதத்தையும், விசைத்தறி நூற்புத் திறனில் 20 சதவீதத்தையும், கைத்தறி நூற்புத்திறனில் 17 சதவீதத்தையும், பின்னலாடை உற்பத்தித் திறனில் 75 சதவீதத்தையும் கொண்ட தமிழகம் இந்தியாவின் ஜவுளித் தொழிலில் முன்னணியில் உள்ளது.

தமிழ்நாட்டில் ஜவுளித் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள மாநில அரசு அதை ஊக்குவிக்க ஏராளமான முன் முயற்சிகளை எடுத்துள்ளது.

இந்தத் தொழிலுக்கு பருத்தி ஆதாரமான இடுபொருள் என்பதால், பருத்தி ஏற்றுமதிக்கு சிறப்பு ஊக்க சலுகைகளை கைவிட மத்திய அரசை நாங்கள் வலியுறுத்தி, அதன்மூலம் கட்டுப்படியான விலைகளில் இத்தொழிலுக்கு கச்சாப் பொருட்கள் கிடைக்கச் செய்துள்ளோம். இந்திய பருத்திக் கழகம் மாநிலத்தில் விற்பனை செய்யும் பருத்திக்கு மதிப்புக் கூட்டு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் சிட்டா நூலுக்கு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டு அதன் மூலம் ஆறு இலட்சம் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவியுள்ளோம்.

**உண்மையில் நாட்டிலேயே முழுமையானதொரு ஜவுளித் தொழில் சங்கிலித் தொடரைக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். நாட்டின் நூற்புத்திறனில் 47 சதவீதத்தையும், விசைத்தறி நூற்புத்திறனில் 20 சதவீதத்தையும், கைத்தறி நூற்புத்திறனில் 17 சதவீதத்தையும், பின்னலாடை உற்பத்தித் திறனில் 75 சதவீதத்தையும் கொண்ட தமிழகம் இந்தியாவின் ஜவுளித் தொழிலில் முன்னணியில் உள்ளது.**

**கைத்தறி நெசவாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு**

கைத்தறி நெசவாளர்களின் சார்பில் அவர்களது மருத்துவக் காப்பீட்டுக்கு பிரிமியம் செலுத்தி நாட்டின் முதலாவதாக உள்ளது தமிழ்நாடு அரசாகும்.

கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலன்களைப் பாதுகாக்க நாங்கள் கைத்தறி நல வாரியம் மற்றும் விசைத்தறி நல வாரியம் ஆகியவற்றை அமைத்துள்ளோம்.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் வரையிலும் இலவச மின் விநியோகத்தை அரசு வழங்குகிறது.

ஆண்டுக்கு 3,000 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் இலவச வேட்டி – சேலைத் திட்டம், 20 ஆயிரம் விசைத்தறிகளுக்கும், 15 ஆயிரம் கைத்தறிகளுக்கும் ஒவ்வொரு ஆண்டும் வேலைவாய்ப்பை அளிக்கிறது.

சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கவும், நீதித் துறையின் உத்தரவுகளுக்கு ஜவுளித் தொழில் நிறுவனங்கள் கட்டுப்பட உதவவும், கடலில் கழிவுநீர் வெளியேற்றத் திட்டத்திற்கு

எங்களது ஆதரவை சட்டமன்றத்தில் நான் அறிவித்துள்ளேன்.

தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் 40 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. எனவே இத்தொழிலையும், அதன் உலகளாவிய போட்டித் திறனையும் பாதுகாக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

ஒவ்வொரு ஆண்டும் அரசுக் கருவூலத்திற்கு 180 கோடி ரூபாய் செலவாகும் வகையில் கைத்தறி ஜவுளிகள் விற்பனைக்கு மாநில அரசு தள்ளுபடி அளித்து வருகிறது.

கைத்தறி நெசவாளர்கள் வாங்கிய வீட்டுவசதிக் கடன்களை ஹட்கோ நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்தும் பொறுப்பை மாநில அரசே மேற்கொண்டு அவர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்துள்ளது.

**ஒருங்கிணைந்த ஐந்து ஜவுளிப் பூங்காக்கள்!**

குமாரபாளையம், கடலூர், மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி, தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி, கரூர் ஆகிய இடங்களில் ஐந்து ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்களை அமைக்க அனுமதி அளித்துள்ளது. மாநிலத்தில் ஜவுளி முதலீட்டை உயர்த்தியுள்ளது. ஜவுளித் துறை மேலும் முதலீட்டையும், வேலைவாய்ப்பையும் மேம்படுத்தக் கூடிய கவர்ச்சிகரமான ஜவுளிக் கொள்கையை மாநில அரசு அறிவிக்கவுள்ளது.

தமிழ்நாடு ஜவுளித் தொழில்களில் முதலீடு செய்யுமாறு இதர மாநிலங்களிலும், இதர நாடுகளிலும் உள்ள எங்களது நண்பர்களை அழைக்கிறேன். உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு செய்யும் என்று உறுதி அளிக்கிறேன்.

மாநிலத்தில் ஜவுளித் தொழிலை ஊக்குவிக்க எங்களது முயற்சிகளுக்கு மத்திய ஜவுளி அமைச்சகம் அளித்து வரும் ஆதரவு மிகவும் உன்னதமானது.

இந்த மிக முக்கியமான துறையை முன்னேற்றுவதற்கும், அதன் உலகளாவிய போட்டித் திறனை மேம்படுத்தவும் தயாநிதிமாறன் தலைமையின்கீழ் மத்திய ஜவுளி அமைச்சகம் எடுத்துவரும் செயலர்க்கம் கொண்ட முயற்சிகளை இங்கு பதிவு செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**ஒரு கோடி புதிய வேலைவாய்ப்புகள்**

ஏழு மாதங்களுக்குள், தயாநிதிமாறன் நலிவடைந்த ஜவுளித் தொழிலை மாற்றி அமைத்து, உலகளாவிய தொழில் மந்த நிலையிலிருந்து அதனைப் பாதுகாத்து அதை மத்திய அரசின் எழுச்சிமிக்க துறையாக மாற்றியுள்ளார். அவர் பதவியேற்றவுடன் ஐந்தாண்டுகளுக்குள் ஒரு கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், ஏழு முதல் எட்டு சதவீத வளர்ச்சி விகிதத்தை உண்டாக்கவும் அறிவிப்பு செய்தபோது யாரும் அதை நம்பவில்லை. ஆனால் இன்று அவர் அதை உண்மையாக்கி வருகிறார். ஏனென்றால் அவர் என்னுடைய பேரன்.

அதுபோலவே, பின்வரும் செயல்பாடுகளில் ஜவுளித்துறை அமைச்சரின் செயல் திறனை நினைவுபடுத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் இருந்த ஜவுளித் துறை நவீனமயமாக்கல் நிதி நிலுவைத்

தொகையான 2,546 கோடி ரூபாயை தனிப்பட்ட பயனாளிகளுக்கு 72 மணி நேரத்துக்குள் வெளியிட்டது.

★ ஐந்து சதவீதம் பருத்தி ஏற்றுமதி ஊக்கச் சலுகைக்கான புதிய அறிவிப்பைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து அதன்மூலம் நமது ஜவுளி ஆலை களின் போட்டித்திறனை தக்க வைத்தல்,

★ தேசிய ஜவுளி இழைக் கொள்கையை வகுக்க ஒரு செயற்குழுவை அமைத்தல், தேசிய ஜவுளிக் கழக (என்.டி.சி.) மில்கள் நவீனமயமாக்கல்,

★ கோவையில் தேசிய நாகரிக ஆடை தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (NIFT) அமைக்கும் அறிவிப்பு மற்றும் சர்தார் வல்லபாய் பட்டேல் ஜவுளி நிருவாக கல்வி நிறுவனத்தை சர்வதேச ஜவுளி வணிகக் கல்வி நிலையமாகத் தரம் உயர்த்தல்,

★ கோவை, ராஜபாளையம் ஆகிய இடங்களில் இந்திய பருத்திக் கழகத்தின் இரண்டு பண்டக சாலைகளை (குடோன்ஸ்) திறந்து அதன்மூலம் மாநிலத்திலுள்ள நூற்பாலைகளுக்குப் பயனளித்தல்,

★ 70 கோடி ரூபாய் திட்டச் செலவில் விருதுநகரில் மெகா கைத்தறித் தொகுப்பு மையத்தை அமைக்க அனுமதி வழங்கல், 40 கோடி ரூபாய் திட்ட செலவில் 30 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க காஞ்சிபுரத்தில் பட்டுப் பூங்கா ஒன்றை அமைக்க அறிவிப்பு ஆகியவை ஆகும்.

காஞ்சிபுரத்தைப் பற்றிப் பேசும்போது என்னுடைய கண்கள் பனிக்கின்றன. ஏனெனில் இது உடனடியாக, என்னுடைய நினைவுக்கு எனது அன்புக்குரிய தலைவர் அண்ணாவைக் கொண்டு வருகிறது. 1953ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் சொல்லொனாத் துயரங்களை அனுபவித்தபோது, அண்ணாவின் ஆணைப்படி நான் சென்னையின் தெருக்களில் கைத்தறித் துணிகளை விற்று 25 ஆயிரம் ரூபாய் திரட்டினேன். எங்கள் அன்புக்குரிய தலைவர் அண்ணா திருச்சி தெருக்களில் கைத்தறித் துணிகளை விற்றார்.

சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை அண்ணாதான் ஏற்பாடு செய்தார். 2010ஆம் ஆண்டில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை ஏற்பாடு செய்வதை எனக்குக் கிடைத்த பெருமையாகவும், கவுரவமாகவும் கருதுகிறேன். தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை மாநிலத்தின் ஜவுளித் தொழில் மையமாகும். இந்த எழுச்சிமிக்கதும், மிகவிரைவாக வளர்ந்து வருவதுமான கோவை மாநகரில் தான் இந்த ஆண்டு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடக்கவுள்ளது. இங்குள்ள அனைவரும் இந்த மாநாட்டில் பங்கெடுத்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்று வரவேற்று என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

விழாவில் மாண்புமிகு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. தயாநிதிமாறன் அவர்கள் தலைமை வகித்தார், மாண்புமிகு தமிழ்நாடு கைத்தறித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

★ ★ ★

# ஊனமுற்றோர்க்கு சிறப்புப் பணியாளர் நியமனத் தேர்வு முறையில் அரசு வேலை வாய்ப்புகள்!

21-1-2010 அன்று
தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு
நடத்திய நன்றி பாராட்டும் விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரை,

**ஊ**னமுற்றோர் என அழைக்கப்படும் என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே, வள்ளுவர் கோட்டம் நிரம்பி வழிகின்ற வகையில் குழுமியிருக்கின்ற நீங்கள் எல்லாம் எதையும் எதிர்பார்த்து அல்ல – ஏனென்றால் எதிர்பார்ப்பதைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொண்டு நடத்துகின்ற ஆட்சிக்கு தலைவனாக இருக்கிறேன் என்ற முறையில் – அந்த நம்பிக்கையோடு நீங்கள் எல்லாம் இங்கே கூடியிருக் கிறீர்கள் என்பது எனக்குத் தெளிவாக, நன்றாகத் தெரியும்.

எனக்கு நன்றி பாராட்டுகின்ற விழா என்று விளம்பரங்கள் மூலமாக நீங்கள் சொல்லியி ருக்கிறீர்கள். நீங்கள் எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. உங்களுடைய கால் ஊனம் நீங்கி, நீங்கள் நடந்தால் அதுவே நான் மகிழ்ச்சியடையும் நிகழ்ச்சி. கண் பார்வை பெற்று நீங்கள் காணுகின்ற வாய்ப்பைப் பெற்றால், அதுவே நான் காணக் கிடைக்காத காட்சி. உங்களை ஊனமுற்றோர் என்ற சமுதாயத் திலே ஒரு தனிப் பிரிவாகப் பார்க்க நான் விரும்பவில்லை. ஆனாலும் ஊனமுற்றோர் என்று சொன்னால்தான் உங்களுக்கு உதவிட முடியக்கூடிய நிலைமை



இருக்கின்ற காரணத்தால், அப்படி குறிப்பால் உணர்த்த வேண்டிய நெருக்கடி, கட்டாயம் நாட்டிலே இருக்கின்றது. அரசுக்கும் இருக்கின்றது. பிற்படுத்தப்பட்டோர் என்று சொன்னால் அடையாளம் காட்டினால்தான் அவர்களுக்கு எப்படி சலுகைகள், ஒதுக்கீடுகள் வழங்கிட முடிகிறதோ, அதைப் போல ஊனமுற்றோர் என்று சொன்னால்தான் சில உதவிகளை, சட்டப்படி, விதிப்படி வழங்க முடிகிறது. அதற்காக ஒரு பெயரளவில் உங்களுக்கு நன்மை செய்வதற்காகவே, உங்களை ஊனமுற்றோர் என்றும், பார்வையற்றோர் என்றும், காதுகேளாதோர் என்றும் சொல்ல வேண்டிய அவசியத்தில் நாங்கள் இருக்கின்ற காரணத்தால் அப்படி சொல்வதற்காக என்னை நீங்கள் மன்னித்து விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மனித நேய ஆட்சி!**

ஒரு ரோஜாவில் காம்பைக் கிள்ளி விட்டால், அந்த ரோஜா மலருக்கு மணம் இல்லாமல் போய் விடாது. அப்படித்தான் எப்படி காம்பைக் கிள்ளினால் மலருக்கு மணம் இல்லாமல் போய்விடாதோ அதைப் போல கால் இல்லாவிட்டாலும் மனிதர்களுக்கும் மணமே இல்லாமல் போய் விடும் என்று யாரும் கருத முடியாது. அப்படிக் கருதினால் அவனைப் போன்ற மடையர்கள் உலகத்திலே யாரும் இருக்கவும் முடியாது. அந்த வகையில் தமிழகத்திலே இன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில், தந்தை பெரியார் அவர்களுடைய வழியில் நடைபெறுகின்ற இந்த ஆட்சி மனிதநேய ஆட்சி – மனித சமுதாயத்திற்காக தன்னை ஒப்படைத்துக் கொண்டு நடைபெறுகின்ற ஆட்சி. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதற்காக நடைபெறுகின்ற ஆட்சி. அதை வலியுறுத்தி, அந்தக் கருத்தை வலுப்படுத்தி, அந்தக் கருத்துக்கு வெற்றியினைத் தேடுகின்ற ஆட்சி தான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சி.

**கண்ணொளி வழங்கும் திட்டம்**

என்னைப் பொறுத்த வரையில் நான் இன்று நேற்றல்ல – பல்லாண்டு காலமாக உங்களைப் பற்றி – ஆட்சியிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவன். அந்த கவலை தீர எனக்கு உடனடியான வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அந்த வாய்ப்பை உங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறாதவன் நான்.

நான் என்னுடைய கண் சிகிச்சைக்காக அமெரிக்காவிற்கு சென்றிருந்தேன். அமெரிக்காவில் – ஒரு நகரத்தில் – என்னை அழைத்துச் சென்ற மருத்துவர்களும், அமெரிக்க மருத்துவர்களும், மற்றவர்களும் அமர்ந்து ஒரு திரையரங்கத்திலே – அமெரிக்க அரசின் சார்பாக வெளியிடப்பட்ட ஒரு படத்தைப் பார்த்தோம். கண்ணொளி இழந்தவர்களுக்கு கண்ணொளி வழங்குகின்ற ஒரு திட்டத்தை அமெரிக்காவில் எந்த வகையிலே பல்லாயிரக்கணக்கானவர்களுக்கெல்லாம் வழங்குகின்றார்கள் என்பதைக் கண்டேன். அப்படிப் பார்த்தவுடன் மீண்டும் சென்னைக்கு வந்தவுடன், அன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருந்த நம்முடைய பேராசிரியர் அவர்களை அழைத்து நான் அமெரிக்காவிலே கண்ட அந்தக் காட்சியைச் சொல்லி, ஏன் அதைப்போல கண்ணொளி வழங்குகின்ற முகாம்களை நாம் தமிழகக் கிராமப் பகுதிகளிலே நடத்தக் கூடாது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டேன். அவர்களும் உடனடியாக அதை ஒப்புக்




கொண்டு அன்றைக்கு அறிவிக்கப்பட்ட திட்டம்தான் கண்ணொளி வழங்கும் திட்டம் ஆகும். அந்தத் திட்டத்தை அரசாங்கம் மாத்திரம் தனியாக நிறைவேற்ற இயலாது என்பதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற பெருமக்கள், சீமான்கள், பணக்காரப் பிரமுகர்கள், நல்ல உள்ளம் படைத்தோர், ஏழையெளியவர்களுக்காக, ஊனமுற்ற மக்களுக்காக உதவிட வேண்டுமென்று கருதுவோர் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அரசின் சார்பாக எவ்வளவு ஆதரவு தர வேண்டுமோ – இந்தத் திட்டம் வெற்றி பெற அவ்வளவு ஆதரவு தருவோமென்று – கண் பார்வை இழந்தவர்களுக்கு கண்ணொளி வழங்குகின்ற முகாம்களை தமிழகம் முழுவதும் உருவாக்கி, இலட்சக்கணக்கான மக்களுக்கு உதவி புரிந்தோம். இலட்சக்கணக்கானோர் கண் பார்வை பெற்றார்கள். இன்றைக்கும் அதன் அடையாளமாக சென்னையிலே உள்ள அண்ணா அறிவாலயத்தில் காலை முதல் இரவு வரையில் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு, நூற்றுக் கணக்கானவர்களுக்கு கண்ணொளி வழங்க அறுவை சிகிச்சை செய்ய தனி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, கண் ஒளி வழங்குகின்ற நிலை தமிழகத்திலே இன்னமும் தொடர்ந்து வேறு சில மருத்துவமனைகளிலும் அவர்களும் இதைப் பின்பற்றி நடத்துகின்ற காட்சியை நாம் காண்கிறோம்.

**இனிக்கின்ற பாராட்டு**

அதைப் போலத் தான் உடல் ஊனமுற்றோர் என்பது கண் இழந்தவர்கள் மாத்திரமல்ல, கை இழந்தவர்கள், கால் இழந்தவர்கள், செவிப்பறை இழந்தவர்கள் இவர்களுக் கெல்லாம் கூட உதவிட வேண்டிய பெரும் பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து காலமெல்லாம் அவர்களுக்காக நாங்கள் பாடுபட்டு வருகிறோம். அதைத்தான் இங்கே பேசிய ஒருவர் குறிப்பிட்டார் – ஐந்து **ஆண்டுகளுக்கு முன்பு 23 கோடி ரூபாயை மட்டுமே செலவழித்த இருந்த அரசையும் –**

இன்றைக்கு இருக்கின்ற அரசு இந்த ஆண்டு இதற்காக 107 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது என்பதையும் குறிப்பிட்டார்கள். 100 கோடி ரூபாய் அல்ல – நீங்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்றால் என்னுடைய சுய நலத்திற்காகச் சொல்கிறேன் – அந்த மகிழ்ச்சியிலே எனக்கும் பங்கு உண்டு என்பதற்காக 100 கோடி ரூபாய் அல்ல – உங்களுக்காக ஆயிரம் கோடி ரூபாய் கூட செலவிட இந்த அரசு தயாராக இருக்கின்றது.

இங்கே நம்முடைய அமைச்சர் கீதாஜீவன் எடுத்துக்காட்டியதைப்போல் – கனிமொழி குறிப்பிட்டதைப் போல் உங்களுடைய இருபதுக்கு மேற்பட்ட கோரிக்கைகளை இருபதே நிமிடத்தில் பார்த்துப் படித்து, அதை நிறைவேற்றி அறிவித்த நிலையையும் கடந்த காலத்திலே சில மாதங்களுக்கு முன்பு தமிழக அரசின் சார்பில் நடைபெற்றதை நீங்கள் மறந்துவிடவில்லை. மறந்திருந்தால், நன்றி கூற வந்திருக்கமாட்டீர்கள்; மறந்திருந்தால் இந்தப் பாராட்டு விழாவை நடத்தியிருக்கமாட்டீர்கள். நான் எதிர்பார்ப்பது இன்னும் பல பாராட்டு விழாக்கள் எனக்கு நடைபெற வேண்டும் என்றுதான்.

சட்டமன்றத்திலே ஒருவர் குறிப்பிட்டார் – கருணாநிதிக்கு சினிமா நடிகர்களின் பாராட்டு தான் பிடிக்கும், பொதுமக்களுடைய பாராட்டு பிடிக்காது என்றார். அதிலே ஒரு உண்மை இருக்கிறது. பொதுவான பொதுமக்களின் பாராட்டைவிட, பொதுமக்களிலே ஒரு பிரிவாக இருக்கின்ற கண் இழந்தோர், கால் இழந்தோர், பேச முடியாதோர், காது கேளாதோர் இத்தகைய ஊனமுற்றவர்களுடைய பாராட்டுதான் எனக்கு மிக அதிகமாக இனிக்கிறது. அதுதான் என்னை மெய் சிலிர்க்க வைக்கின்றது. மேலும் மேலும் உங்களுக்கு துணை நிற்க வேண்டுமென்று நான் கருதுகிறேன் என்றால், அப்படி துணை நிற்பதற்கு ஏற்ற வகையிலே கடந்த காலத்திலே உங்களுக்காக வழங்கப்பட்ட கோரிக்கை நிறைவேற்றங்கள் எப்படியெல்லாம் நடைமுறைகளிலே இருக்கின்றது என்பதை கீதா ஜீவன் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கனிமொழி குறிப்பிட்டார்கள். விழாத் தலைவர் நம்முடைய சிதம்பரநாதனும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

## வேலைவாய்ப்பு – இடஒதுக்கீடு

மேலும் பல கோரிக்கைகளை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். வைக்கவும் இருக்கிறீர்கள். புதிய சட்டமன்றக் கட்டடம், புதிய பட்ஜெட் இவையெல்லாம் வரும்போது உங்களுடைய புதிய கோரிக்கைகளும் அங்கே இடம் பெறும் என்று நான் நம்புகிறேன்.

ஊனமுற்றோர் சங்கங்களின் மதிப்பிற்குரிய பிரதிநிதிகள் 19–8–2008 அன்று, தலைமைச் செயலகத்தில் வந்து என்னைச் சந்தித்தபோது, உறுதிமொழி வழங்கி அரசின் சார்பில் சில அறிவிப்புகளை வெளியிட்டோம்.

அரசின் பல்வேறு துறைகளிலும், ஊனமுற்றோர்க்கான வேலை வாய்ப்பிற்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டினை உறுதிசெய்ய வேண்டுமென்று கேட்டீர்கள். நம்முடைய சமூக நலத்துறை அமைச்சர் கீதாஜீவனுடைய தலைமையில் ஒரு உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டு, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தி அப்படி நடைமுறைப்படுத்தியதில் 3 சதவிகித இடஒதுக்கீட்டைத் தந்து இதுவரையிலே 2,000 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஊனமுற்றோர்க்கு காலமுறை ஊதியம்**

ஊனமுற்றோர், அவர்கள் வாழும் மாவட்டத்தில் 100 கிலோ மீட்டருக்குள் இலவசமாகப் பயணம் செய்ய, இலவசப் பேருந்துப் பயணச் சலுகை தேவையென்று கேட்டீர்கள். அது வழங்கப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

அதே ஆண்டில், கால் ஊனமுற்றவர்களுக்கும், பார்வையற்றோருக்கும் அரசு விரைவுப் பேருந்துகளில் தமது இருப்பிடத்திலிருந்து தமிழகத்திற்குள் ஏதாவது ஓரிடத்திற்குச் சென்று வர, ஆண்டுக்கு ஒருமுறை இலவசப் பேருந்து பயணச் சலுகை கழக அரசினால் வழங்கப்பட்டு, அது நடைமுறையில் இருக்கிறது. இதில் எங்கேயாவது குற்றம் குறை இருந்தால், ஏதாவது தவறு நடைபெற்றால் ஒரு கடிதம் குறிப்பிட்டு எனக்கு எழுதுங்கள் போதும், அல்லது அமைச்சருக்கு தெரிவியுங்கள் போதும்.

பேருந்துகளிலே ஊனமுற்றோர் தமிழகம் முழுவதும் பயணம் செய்ய 75 சதவீத கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு, இதுவரையில் 2 இலட்சத்து 31 ஆயிரத்து 474 ரூபாய்ச் செலவில் 8 ஆயிரத்து 38 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர் என்ற மகிழ்ச்சியான தகவலையும் உங்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

பாரத பிரதமர் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டத்தின்கீழ் சுயவேலைவாய்ப்புக்கான ஊனமுற்றோரின் 5 சதவீதப் பங்குத் தொகையினை – அதிகபட்சமாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை – தமிழக அரசே ஏற்கும் என வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இதுவரையில் அதன் காரணமாக, அந்த அடிப்படையில் 60 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

**ஊனமுற்றோருக்கு காலமுறை ஊதியம்**

தமிழக அரசின் பல்வேறு துறைகளிலும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தொகுப்பூதியத்தின்கீழ் பணியாற்றிவரும் ஊனமுற்றோர்க்குக் காலமுறை ஊதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதற்கேற்ப, தொகுப்பூதியத்தில் பணிபுரியும் ஊனமுற்றோர் கண்டறியப்பட்டு, அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உயர் கல்விக் கட்டணம் ரத்து**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர்கல்வி பெறும் ஊனமுற்ற மாணவ, மாணவியர் அனைவர்க்கும் கல்விக் கட்டணம் இல்லை என அறிவிக்கப்பட்டதற்கேற்ப இதுவரை 206 ஊனமுற்றோருக்கு உயர்கல்விக் கட்டணத் தொகை 8 இலட்சத்து 72 ஆயிரத்து 450 ரூபாய் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் கூடிய தொழிற் பயிற்சித் திட்டம், மூன்றாண்டு திட்டமாக அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஊனமுற்றோருக்காகத் தொடங்கப்படுமென அறிவிக்கப்பட்டதற்கேற்ப முதற்கட்டமாக, சென்னை, மதுரை, வேலூர், திருவள்ளூர், கோவை, நெல்லை, திருச்சி, ஈரோடு, தருமபுரி, காஞ்சிபுரம், தூத்துக்குடி, சிவகங்கை ஆகிய 12 மாவட்டங்களில் 15 தொண்டு நிறுவனங்களின் மூலம் 65 இலட்சம் ரூபாய்ச் செலவில், ஆண்டுக்கு 360 ஊனமுற்றோர்க்கு விடுதி வசதியுடன்

கூடிய தொழிற் பயிற்சிகள் அளித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஊனமுற்றோர் நலனுக்காக தனிக்கொள்கை!**

ஊனமுற்றோர் நலனுக்காக ஒரு தனிக்கொள்கை உருவாக்கப்பட்டு, விரைவில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டதற்கேற்ப ஊனமுற்றோர் நலனுக்காக மாநிலக் கொள்கை வகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த விழாவிலே புதிய அறிவிப்புகள் – இந்த விழாவுக்கான அறிவிப்புகள் – பட்ஜெட்டுக்கான பசுமையான அறிவிப்புகள் பட்ஜெட்டின் போது வெளியிடப்படும். இப்போது சில அறிவிப்புகள்.

**மூன்று சக்கர மோட்டார் வண்டிகள்**

ஊனமுற்றோர் வேலைவாய்ப்புப் பெறும்வகையில் ஊனமுற்றோர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கு சிறப்புப் பணியாளர் நியமனத் தேர்வு முறையில் (**Special Recruitment Drive**) அரசு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் ஊனமுற்றோர் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 490 பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். இந்த ஆண்டு கூடுதலாக 1,100 பயனாளிகளுக்கு இத் திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படும். இதற்காக அரசுக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தற்போது கை, கால் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோர்க்கு மாத ஒய்வூதியமாக 400 ரூபாய் வழங்கப்பட்டு வரும், ஊனமுற்றோர் ஒய்வூதியத் திட்டம் இனி செவித்திறன் குறையுடையோர்க்கும், வாய் பேச முடியாதவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும். செவித்திறன் இழந்தோர், வாய் பேச முடியாதோரும் ஊனமுற்றோர் பட்டியலிலே இனி சேர்க்கப்படுவார்கள்.

மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் கோரி விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள 600 பயனாளிகளுக்கு இந்த ஆண்டே மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படும். இதற்காக அரசுக்கு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

**அனைத்து வகை ஊனமுற்றோர்க்கும் நிவாரணத் தொகை!**

பார்வையற்றோர்க்கு வழங்கப்பட்டு வருவதைப் போலவே வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை இனி அனைத்துவகை ஊனமுற்றோர்க்கும் வழங்கப்படும். பார்வையற்றோருக்கு மாத்திரமல்ல, அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் இது வழங்கப்படும். இதன்மூலம், 59 ஆயிரத்து 427 ஊனமுற்றோர் பயன்பெறுவர். இதற்காக அரசுக்கு ஏறத்தாழ 23 கோடியே 93 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

முதலிலேயே சொன்னேன் – கோடிகள் அல்ல பெரிது – பணம் அல்ல பெரிது – உங்களையெல்லாம் வாழவைக்க இந்த மனம் தான் பெரிதாக இருக்க வேண்டும், அந்த மனம் படைத்த அரசு, இந்த அரசு என்பதைக் கூறி உங்களுடைய பாராட்டுக்கும் நன்றிக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# உயிர்க்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் நோயாளியின் கடைசி விருப்பத்தை மனிதநேயத்துடன்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி வைத்தார் !



உயிர்க்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டு ஒவ்வொரு உறுப்பாக செயலிழந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் நோயாளி அனுராதாவின் கடைசி விருப்பத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிவைத்து, உருக்கத்துடன் ஆறுதல் கூறினார். நெஞ்சை நெகிழவைக்கும் இந்த சம்பவம் தலைமைச் செயலகத்தில் 15.02.2010 அன்று நிகழ்ந்தது.

சென்னையில் வசித்துவரும் அனுராதா என்ற 45 வயது பெண் மஸ்குலர் டிஸ்டிரோபி **(Mascular dystrophy)** என்ற உயிர்க்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். இந்த நோயால் பாதிக்கப்பட்ட அனுராதாவின் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாக செயல் இழந்து வருகிறது. இந்நிலையில் தமது கடைசி ஆசையாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை சந்திக்க வேண்டும் என்று மருத்துவர்களிடமும் உறவினர்களிடமும் அனுராதா தெரிவித்துள்ளார். அனுராதாவின் கடைசி ஆசை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நோயாளி அனுராதாவை சந்திக்க 15.2.2010 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. நெஞ்சை நெகிழவைக்கும் இந்த உருக்கமான சந்திப்பின்போது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுராதாவுக்கு

உருக்கத்துடன் ஆறுதல் கூறினார். மஸ்குலர் டிஸ்ரோபி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியாக மருத்துவமனை தொடங்க வேண்டும் என்ற அனுராதாவின் கடைசி விருப்பத்தையும் கனிவுடன் பரிசீலிப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உறுதியளித்தார்.

**அனுராதா அவர்களை அழைத்துவந்த ஆந்திரா மகிளா சபாவில் பணிபுரிந்துவரும் அவரின் மருத்துவர் திருமதி. வசந்தி பாபு பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது:–**

ஆந்திராவிலிருந்து குடிபெயர்ந்து தற்போது சென்னையில் வசித்துவரும் 45 வயதுள்ள அனுராதா அவர்கள், **Muscular dystrophy** என்ற நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார், இந்த நோயினால் தாக்கப்பட்டவர்களின் சதை நார்கள் ஒவ்வொன்றாக செயல் இழக்கும் தன்மையினை கொண்டது. இது சாதாரணமாக நடைமுறையில் ஆண்களை மட்டுமே பாதிக்கும் நோயாகும். இதற்கான மருந்தும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. இந்நோயினால் அனுராதா அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார். நோயாளி எந்நேரமும் இறக்கும் தருவாயில் உள்ளார். இந்நிலையில் இன்று (15.2.2010) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை சந்தித்தார். அந்த சந்திப்பின்போது அனுராதா அவர்கள் இதுபோன்ற நோயினால் பாதிக்கப் பட்டவர்களைப் பராமரிக்க தனியே ஒரு விடுதியோ அல்லது மருத்துவமனையோ கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்ததன் அடிப்படையில், அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பரிவுடன் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க உறுதியளித்துள்ளார்.

★ ★ ★

## செய்யாறு சிப்காட் தொழில் வளாகத்தில் ரூ.1.77 கோடியில் வடிகால் வசதியுடன் தார்சாலையை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்

தமிழக அரசு தொழில்துறையில் பின்தங்கிய திருவண்ணாமலை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காக செய்யாறில் சிப்காட் தொழில் வளாகத்தினை அமைத்தது. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில், மாங்கால், மாத்தூர் மற்றும் செல்லப் பெரும்புலிமேடு கிராமங்களில் 631 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில் வளாகத்தில், அதன் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக ரூபாய் ஒரு கோடியே 77 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட வடிகால் வசதியுடன் கூடிய தார் சாலையை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.1.2010 அன்று திறந்து வைத்தார்.

ஏற்கெனவே, இந்த தொழில் வளாகத்திற்கு தேவையான தண்ணீர் (1MGD), செய்யாறு ஆற்றிலிருந்து சுமார் ரூபாய் 7 கோடியே 80 இலட்சம் செலவில் கிணறுகள் தோண்டப் பட்டு அதற்கு தேவையான நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சிப்காட் தொழில் வளாகத்திற்கு தேவைப்படும் மின்சாரத்திற்காக, இத் தொழில் வளாகத்திலேயே ஒரு துணை மின்நிலையம் அமைக்கப்பட்டு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வளாகத்தில், 2006ஆம் ஆண்டில் காலணிகள் தயாரிப்பதற்கான சிறப்பு பொருளாதார மண்டலம் 275 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டு, இதன் மூலம் ஏறத்தாழ 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் 255 ஏக்கர் நிலப்பரப்பில் மகேந்திரா நிறுவனத்தின் மூலம் பெரிய தொழிற்சாலை அமைப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 90 ஏக்கர் பரப்பளவில் 7 தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு 2007 ஆம் ஆண்டு முதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு இத்தொழில் வளாகத்தை விரிவுபடுத்து வதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது.

# உலக அளவில் பொருளாதார மந்தநிலை இருந்தபோதிலும், தமிழகம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது



*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் சென்னைக்கு வருகை தந்துள்ள மலேசியப் பிரதமர் **டத்தோஸ்ரீ முகமது நஜீப் துன் ரஜாக்** அவர்களையும் மலேசிய அரசுப் பிரதிநிதிகளையும் **22.1.2010** அன்று சந்தித்து உரையாடினார்.*

மலேசிய நாட்டின் மாண்புமிகு பிரதமர் டத்தோஸ்ரீ முகமது நஜீப் துன் ரஜாக் அவர்களையும், அவருடன் வந்துள்ள மலேசிய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் ஆகியோரையும் 22.1.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர், தொழில் துறைச் செயலாளர் மற்றும் பொதுத்துறைச் செயலாளர் ஆகியோரும் உடன் இருந்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துரையாடலின் போது குறிப்பிட்டதாவது:–



"மலேசியப் பிரதமர் அவர்கள் அங்குள்ள அனைத்து இனத்தைச் சார்ந்தவர்களையும் குறிப்பாக இந்திய வம்சாவழியினரையும் சமமாகப் பாவித்து அவர்களுக்குரிய நல்வாய்ப்பு களை வழங்குவதற்காக எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளையும் பாராட்டுகிறேன். இந்த நடவடிக்கைகள் மலேசியாவிலே உள்ள இந்திய வம்சாவழியினர்களுக்கும் மற்ற இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் இடையே உள்ள நல்லுறவை மேலும் வலுப்படுத்தும்.

**உறவை – பலப்படுத்தும் இனிய பயணம்!**

**1999**–ஆம் ஆண்டு மலேசியாவின் பிரதமராக மகாதீர் முகமது அவர்கள் இருந்த போது நான் மலேசியாவிற்கு வந்துள்ளேன். இரண்டு நாடுகளுக்கும் பயனுள்ள பல்வேறு கருத்துகளை அவருடன் அப்போது பகிர்ந்து கொண்டோம். தங்களுடைய இந்தப் பயணமும் இரண்டு நாடுகளுக்கிடையே உள்ள உறவினை மேலும் வலுப்படுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஜூன் திங்கள் 23 முதல் 27ஆம் தேதி வரை கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை நடத்துவதற்கான ஏற்பாட்டினை செய்து வருகிறோம். முதல் உலகத் தமிழ் மாநாடு மலேசியாவில் நடைபெற்றது. தமிழ் மொழி தொன்மையான பேச்சு வழக்கத்திலே உள்ள மொழி. மத்திய அரசு தற்போது இதற்கு செம்மொழித் தகுதியினை வழங்கியுள்ளது. உலகம் முழுவதும் உள்ள தமிழ்ச் சான்றோர்கள் பலர் இந்த மாநாட்டிலே கலந்துகொள்ள ஆர்வமாக இருப்பதோடு – ஆய்வுக் கட்டுரை களை வழங்கவும் முன் வந்துள்ளார்கள். முதல் உலகத் தமிழ் மாநாட்டினை நடத்திய மலேசிய நாட்டிலிருந்து தங்கள் தலைமையில் ஒரு குழு இந்த மாநாட்டிலே கலந்துகொள்ள வேண்டு மென்று நான் விரும்புகின்றேன்.

**தமிழகத்தில் உலகத் தரத்தில் மருத்துவம் மற்றும் கல்வி வசதிகள்**

தெற்காசியப் பகுதியில் மருத்துவத் துறை யிலே அனைத்து வசதிகளையும் கொண்டதாக தமிழ்நாடு விளங்குகின்றது. உலகத்தரத்தில்

சிகிச்சை அளிக்கக்கூடிய மிகச் சிறந்த மருத்துவமனைகள் இங்கே உள்ளன. மேலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய முக்கியமான இடமாகவும் தமிழ்நாடு இருப்பதால் உலக முழுவதிலுமிருந்து சிகிச்சைக்காகவும், ஓய்வுக்காகவும் வெளிநாட்டினர் அடிக்கடி வந்து செல்கிறார்கள். எனவே, தமிழகத்திலே உள்ள மருத்துவ வசதிகளை மலேசிய நாட்டினரும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

**சிறந்த உயர் கல்வியை வழங்கக் கூடிய கட்டமைப்பினைக் கொண்டுள்ளதாக தமிழ்நாடு தற்போது திகழ்கிறது. குறிப்பாக தொழிற் கல்வி பயில ஏற்ற இடமாக தமிழகம் விளங்குகின்றது.**

சிறந்த உயர் கல்வியை வழங்கக் கூடிய கட்டமைப்பினைக் கொண்டுள்ளதாக தமிழ்நாடு தற்போது திகழ்கிறது. குறிப்பாக தொழிற் கல்வி பயில ஏற்ற இடமாக தமிழகம் விளங்குகின்றது. இந்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அண்ணா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி அமைப்புகளோடு மலேசிய நாட்டுப் பல்கலைக்கழகங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள முன் வர வேண்டும்.

உலக அளவில் பொருளாதார மந்த நிலை இருந்த போதிலும், தமிழகம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டும் 37 நிறுவனங்கள் சுமார் 46 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தொழிலகங்களை தமிழகத்திலே நிறுவ முன்வந்துள்ளன. இந்தத் திட்டங்களுக்கான சிறப்புச் சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழிற் சாலைகளுக்கு தனிச் சலுகைகளும் அரசினால் வழங்கப்படுகின்றன. மலேசியாவிலே உள்ள தொழிலதிபர்களும் முதலீட்டாளர்களும் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். மேலும் தமிழக அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு கட்டமைப்புப் பணிகளில் மலேசிய நிறுவனங்களும் பங்கேற்கலாம்''.

**மா**ண்புமிகு மலேசிய பிரதமர் தன்னுடன் அழைத்து வந்திருந்த அமைச்சர்களையும், அந்நாட்டு மாநில முதலமைச்சர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்ததோடு, மலேசியாவில் உள்ள இந்தியர்களுக்கு உதவி செய்வதற்காகவே தன்னுடைய தலைமையில் அமைச்சர்களைக் கொண்டு குழு ஒன்று அமைத்திருப்பதாகவும், தமிழகத்திற்கு வெளியே மிக அதிகமாக தமிழ்ப் பள்ளிகள் மலேசியா நாட்டிலேதான் இருப்பதாகவும், அந்தப் பள்ளிகளுக்கு அதிக நிதியினை அரசின் சார்பில் ஒதுக்குவதாகவும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு முதலமைச்சர் அவர்களின் அழைப்பினையேற்று மலேசிய அரசின் சார்பில் அதிக எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் அடங்கிய குழுவினை அனுப்புவதாகவும் மாண்புமிகு மலேசிய பிரதமர் டத்தோ ஸ்ரீ முகமது நஜீப் துன் ரசக் தெரிவித்தார்.

❖ ❖ ❖

# சமச்சீர் கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்படும் பாடநூல்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது!



**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், சமச்சீர் கல்வி முறையின்கீழ் தமிழகப் பள்ளிகளில், வரும் கல்வியாண்டிலிருந்து முதல் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளில் புதிதாக அறிமுகப்படுத்தப் படவுள்ள பாடநூல்கள் குறித்த ஆலோசனை கூட்டம் 28-1-2010 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

சமச்சீர் கல்வித் திட்டத்திற்கான பொதுப் பாடத் திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்காக 27-11-2009 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும் பாடநூல்களைக் குறித்த நேரத்தில் தரமாகவும், பொலிவாகவும், மாணவர்களை ஈர்க்கும் வகையிலும் தயாரித்து வழங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அந்த அறிவுரைகளின்படி, பாடநூல்கள் தயாரிப்புக் குழுவினர் மூலம், முதல் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கான



பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடநூல்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாடநூல்கள் தயாரிப்புக் குழுவினர் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் 28.1.2010 அன்று ஆய்வு செய்து, அவற்றை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், மாநில திட்டக் குழு துணைத் தலைவர் முனைவர் மு. நாகநாதன், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ம. குற்றாலிங்கம், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் கோ.சத்யகோபால், தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட ஆலோசகர் திரு. எம்.பி. விஜயகுமார், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. பெ. பெருமாள்சாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. கு. தேவராஜன், ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சி இயக்குநர் திரு. ஆர். இளங்கோவன் மற்றும் பள்ளிக் கல்வித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# தமிழகத்திற்கு எரிவாயு – திருப்பூர் சாயப்பட்டறை கழிவுநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்


**பு**துடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 7.2.2010 அன்று டெல்லி சென்று அம்மாநாட்டில் பங்கேற்றார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களை சந்தித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ஆந்திர மாநிலம் கிருஷ்ணா–கோதாவரி படுகையில் கிடைக்கும் எரிவாயு தமிழகத்திற்கும் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை விரைவில் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு பிரதமர், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்கள், மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் எழுதியிருப்பதையும் அப்போது நினைவூட்டினார். தமிழகத்திற்கு எரிவாயு வழங்குவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

திருப்பூர் சாயப்பட்டறை கழிவு நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் ரூ.240 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் சார்பில் ரூ.120 கோடியும், தமிழக அரசின் சார்பில் ரூ.120 கோடியும் செலவிடப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு வழங்க வேண்டிய நிதியினை உடனடியாக ஒதுக்கீடு செய்யுமாறும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு பிரதமர் டாக்டர். மன்மோகன்சிங் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும், மார்ச் மாதம் தமிழகத்தின் புதிய சட்டமன்றப் பேரவை கட்டடத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அழைப்பை ஏற்று வருகைதர இசைவு தெரிவித்தமைக்காக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார். ❖

# குறைந்த விலையில் மளிகைப் பொருட்கள் விற்பனை



மாண்புமிகு
தமிழக
முதலமைச்சர்
கலைஞர்
அவர்கள்
ஆணை

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கிணங்க விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் பொதுமக்கள் பயனடைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும் டி.யு.சி.எஸ். நிறுவனத்தின் மூலம் மக்கள் அத்தியாவசியமாகப் பயன்படுத்தும் 33 பொருட்களை ரூ.666/–க்கும் (பட்ஜெட் பேக்கேஜிலும்), 50 பொருட்களை ரூ.999/–க்கும் (ஸ்பெஷல் பேக்கேஜிலும்) மளிகைப் பொருட்கள் 01.02.2010 முதல் டி.யு.சி.எஸ். காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடிகளில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

டி.யு.சி.எஸ். ரேஷன் கடைகள், மண்ணெண்ணெய் விநியோக மையங்கள், எரிவாயு கிளைகள் ஆகியவற்றில் முன்பதிவு செய்து தங்களுக்கு தேவையான பேக்கேஜ்களை பதிவு செய்த இடத்திலேயே மறுநாளில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஸ்பெஷல் பேக்கேஜ் ரூ.999**
**(50 பொருட்கள்)**

மசாலா பொருட்கள், அளவுகள் விபரம் வருமாறு:–

மஞ்சள் தூள் – 50 கிராம், கடுகு – 50 கிராம், சீரகம் – 50 கிராம், சோம்பு – 50 கிராம், வெந்தயம் –

50 கிராம், வெள்ளை உளுத்தம் பருப்பு – 50 கிராம், மிளகு – 25 கிராம், பெருங்காயம் – 15 கிராம்

### தினசரி உபயோகப் பொருட்கள்

மிளகாய் (போல்ட்) – 500 கிராம், தனியா – 500 கிராம், புளி – 500 கிராம், அரசு உப்பு (கிரிஸ்டல்) – 1 கிலோ

### பருப்பு வகைகள்

துவரம் பருப்பு – 1 கிலோ, கடலைப் பருப்பு – ½ கிலோ, உளுத்தம் பருப்பு – ½ கிலோ, பாசிப் பருப்பு – ½ கிலோ, வறுகடலை – 200 கிராம்

### எண்ணெய் வகைகள்

பார்சூன் சன்பிளவர் ஆயில் 1x2 – 2 லிட்டர், இதயம் நல்லெண்ணெய் – 200 மில்லி லிட்டர், பாராசூட் தேங்காய் எண்ணெய் – 100 மில்லி லிட்டர்

### புரோட்டீன் பேக்

பச்சை பட்டாணி – 200 கிராம், கொண்டக்கடலை – 200 கிராம், அப்பளம் – 1 பாக்கெட், வடகம் – 1 பாக்கெட், ஊறுகாய் 100 கிராம் (777) – 1 நெ, ஹார்லிக்ஸ் அல்லது பூஸ்ட் 500 (ரீபில்)– 1

### இதர பொருட்கள்

ஆசிர்வாத் ஆட்டா 500 கிராம் – 1, நாகா டபுள் ரோஸ்டட் ரவா 500 கிராம் – 1, ட்ரூ மைதா 500 கிராம் – 1, ட்ரூ சேமியா 180 கிராம் – 1, முந்திரி 10 கிராம் உடைத்தது – 1, திராட்சை 10 கிராம் – 1, ஏ.வி.டி. டபுள் ஸ்டராங் 100 கிராம் – 1, லையன் டேட்ஸ் 100 கிராம் – 1

### காஸ்மெடிக்ஸ்

ரின் சோப் 100 கிராம் – 2, சுப்ரியா (ஐ.டி.சி.) ஷாம்பூ – 5, ஹமாம் (அ) லக்ஸ் 100 கிராம் – 2, கோல்கேட் பேஸ்ட் 100 கிராம் – 1, வீல் வாஷிங் பவுடர் 600 கிராம் – 1, (ஆக்டிவ் லைம் பிரஷ்) – 1, அஸ்வினி ஹேர் ஆயில் 50மி – 1

### சேனிடரி பொருட்கள்

பெர்ப்யூம் ஒயிட் பினாயில் 750 மில்லி லிட்டர் – 1, கிளினிங் ஆசிட் 500 மில்லி லிட்டர் – 1, மார்ட்டின் (கொசு விரட்டி) 45 நாட்கள் – 1, சபீனா 450 கிராம் – 1, தீப்பெட்டி (300 குச்சிகள்) – 1, கிச்சன் கிளாத் – 1, திரிநூல் – 1 பாக்கெட்

### சிறுவர்களுக்கான தின்பண்டங்கள்

பிரிட்டானியா மேரி பிஸ்கட் 85 கிராம் – 1 பாக்கட், நெஸ்லே மன்ச் சாக்கலேட் 16 கிராம் – 1 பாக்கெட்,

## பட்ஜெட் பேக்கேஜ் ரூ.666/–
## 33 பொருட்கள்

### பொருட்கள், அளவுகள் விபரம் வருமாறு:–

### மசாலா பொருட்கள்

மஞ்சள் தூள் – 50 கிராம், கடுகு – 50 கிராம், சீரகம் – 50 கிராம், சோம்பு – 50 கிராம், வெந்தயம் – 50 கிராம், வெள்ளை உளுத்தம் பருப்பு – 50 கிராம், மிளகு – 25 கிராம், பெருங்காயம் – 15 கிராம்

### தினசரி உபயோகப் பொருட்கள்

மிளகாய் (போல்ட்) – 500 கிராம், தனியா – 500 கிராம், புளி – 500 கிராம், உப்பு (கிரிஸ்டல்) அரசு – 1 கிலோ

### பருப்பு வகைகள்

துவரம் பருப்பு – 1 கிலோ, கடலைப் பருப்பு – ½ கிலோ, உளுத்தம் பருப்பு – ½ கிலோ, பாசிப் பருப்பு – ½ கிலோ, வறுகடலை – 200 கிராம்

### எண்ணெய் வகைகள்

பார்சூன் சன்பிளவர் ஆயில் 1 x 2 – 2 லிட்டர், இதயம் நல்லெண்ணெய் – 200 மில்லி லிட்டர், பாராசூட் தேங்காய் எண்ணெய் – 100 மில்லி லிட்டர்

### புரோட்டீன் பேக்

பச்சை பட்டாணி – 200 கிராம், கொண்டக்கடலை – 200 கிராம், அப்பளம் – 1 பாக்கெட், வடகம் – 1 பாக்கெட்

### காஸ்மெடிக்ஸ்

ரின் சோப் 100 கிராம் – 5, சுப்ரியா (ஐ.டி.சி.) ஷாம்பூ – 5, ஹமாம் (அ) லக்ஸ் 100 கிராம் – 2, கோல்கேட் பேஸ்ட் 100 கிராம் – 1

### சேனிடரி பொருட்கள்

பெர்ப்யூம் ஒயிட் பினாயில் 750 மில்லி லிட்டர் – 1, கிளினிங் ஆசிட் 500 மில்லி லிட்டர் – 1, சபீனா 450 கிராம் – 1, ஸ்கிரப்பர் – 1, தீப்பெட்டி (300 குச்சிகள்) – 1

★ ★ ★

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பான பல்வேறு குழுக்களின் பொறுப்புகளை வரையறுத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆலோசனை-அறிவுரை



2010 ஜூன் திங்கள் 23 தொடங்கி 27ஆம் தேதி வரையில் நடைபெறவிருக்கின்ற கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு குறித்து ஆராய்ந்திடவும், ஆக்கப் பணிகளை முடுக்கிவிடவும் தலைமைக் குழுவின் கூட்டம் 23-1-2010 அன்று நடைபெற்றது.

**நிறைவு விழாவிற்கு அழைக்கப்படும் சிறப்பு விருந்தினர்கள்!**

கோவையிலே மாநாடு நடைபெறுகின்ற கொடிசியா அரங்கில் மேம்பாட்டுப் பணிகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வரங்கம் நடத்துவது தொடர்பான பணிகளின் முன்னேற்றம் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. மாநாட்டின் தொடக்க மற்றும் நிறைவு விழாக்களுக்கு அழைக்க வேண்டிய சிறப்பு விருந்தினர்களைப் பற்றி முடிவு செய்யவும் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

மாநாட்டின் பொது அரங்கிற்கான இட வசதி, வடிவமைப்பு தொடர்பாகவும் முடிவு செய்யப்பட்டது. பொது அரங்க நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து அறிவுரைகள் வழங்குவது பற்றியும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

கண்காட்சி அரங்கில் அமைக்கப்பட வேண்டிய பகுதிகள், அளவு ஆகியவை தொடர்பாக தக்க முடிவு செய்து ஆலோசனைகள் வழங்குவதென்றும் அதற்காக இந்தத் தலைமைக் குழு பல்வேறு குழுக்களோடு தொடர்பு கொண்டு அந்தப் பணிகளை ஆற்றுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

**மாநாட்டு நினைவாக அஞ்சல் தலைகள்!**

தமிழ் இணைய மாநாட்டினையொட்டி கண்காட்சி அரங்கம் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. ஊர்வலம் நடத்துவது தொடர்பாக ஊர்வலத்தின் பாதை, கருப்பொருள் பற்றியும் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டு நினைவாக அஞ்சல் தலைகள் வெளியிடுவது தொடர்பாக மைய அரசுக்குக் கோரிக்கை அனுப்புவது பற்றியும்

பேசப்பட்டது. ஆய்வரங்கம் மற்றும் பொது அரங்கில் கலந்து கொள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர் பெருமக்களையும் முக்கியப் பிரமுகர்களையும் அழைப்பது தொடர்பாகவும் விவாதித்து முடிவு செய்யப்பட்டது. மாநாட்டிற்கு அழைக்கப்படும் அறிஞர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்பட வேண்டிய வசதிகள் தொடர்பாக முடிவு செய்யப்பட்டது.

**மாநாட்டில் பங்கேற்கும் அறிஞர்கள் அனைவர்க்கும் தங்குமிடம் ஏற்பாடு!**

மாநாடு தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள பிற குழுக்களின் பொறுப்புகள், பணிகளை வரையறுத்து முடிவெடுக்கப்பட்டது. அனைவருக்கும் தங்குமிடம் ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் ஆய்வு செய்து அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மாநாடு 23–6–2010 அன்று மாலை ஊர்வலத்துடன் ஆரம்பம் ஆகிறது. மாநாட்டினை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தொடங்கி வைக்க இசைவு தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த மாநாட்டினையொட்டி நடைபெறும் ஆய்வரங்கத்தில் கலந்துகொள்வதாக இதுவரை அறிவித்துள்ள நாடுகள் இந்தியா உட்பட 41.

கலந்து கொள்ள இசைவு தெரிவித்து இதுவரை பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2,803. இவர்கள் ஆய்வு அரங்கம், தமிழ் இணைய மாநாடு, பொது அரங்கம் மற்றும் தனித்தனியாக நடைபெறும் அரங்கங்களில் கலந்துகொள்ள பதிவு செய்துள்ளார்கள். நாடுகளின் பெயர்களைச் சொல்ல வேண்டுமென்றால் அமெரிக்க சமோயா 1, அயர்லாந்து 3, ஆஸ்திரியா 1, ஆஸ்திரேலியா 10, இத்தாலி 1, இந்தோனேஷியா 1, இலங்கை 74, ஈரான் 1, எத்தியோப்பியா 1, ஐக்கிய அமெரிக்க நாடுகள் 32, பிரிட்டன் 13, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 4, ஓமான் 4, கசகிஸ்தான் 1, கத்தார் 1, கனடா 11, கென்யா 1, சவுதி அரேபியா 4, சிங்கப்பூர் 69, சீனா 1, செர்பியா 1, செக் குடியரசு 1, சைசிலாஸ் 1, சுவிட்சர்லாந்து 1, டோகோ 1, துனிஷியா 1, தென்கொரியா 2, நார்வே 2, நியூசிலாந்து 1, நெதர்லாந்து 3, புரூனே 1, பார்படோஸ் 1, பிரான்ஸ் 5, மலேசியா 102, ரஷ்யா 1, வங்க தேசம் 1, மொரிஷியஸ் 3, ஜப்பான் 2, ஜெர்மனி 8, ஹாங்காங் 1 – ஆகமொத்தம் வெளிநாட்டவர் 373. இந்தியா – 2,430; இரண்டும் சேர்ந்து மொத்தம் 2,803. இது 23.1.2010 அன்று வரை பதிவு செய்து கொள்ளப் பட்டவர்களின் தொகையாகும். பதிவு செய்து கொள்ள கடைசி நாள் 31–1–2010. இதுவரை வந்துள்ள கட்டுரைகளின் எண்ணிக்கை 1,168.

இக் கூட்டத்தினைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியபோது, ஆய்வரங்கத்தின் முகப்பரங்கப் பொருண்மை தற்கால உலகில் தமிழ் இலக்கியங்கள் – தனிப் பொழிவரங்கத்தில் சங்க கால வாழ்வியல், வழிபாட்டில் தமிழ், தலித் இலக்கியம், பெண்ணியம், ஆட்சித் தமிழ் – கலந்துரையரங்கத்தில் தமிழ் வழிக் கல்வி பற்றியும் அண்மைக் காலத் தொல்லியம் ஆய்வுகளும் தமிழ்மொழி இலக்கிய காலக் கணிப்புகளும் இது தொடர்பான பல்வேறு பொருண்மைகள் பற்றி உரைகள் நிகழ்த்தப்படும், விவாதங்கள் நடைபெறும் என்று தெரிவித்தார்.

❖ ❖ ❖

**சுருக்கம்**

நிலம் – வீட்டுமனை ஒப்படை – அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத்திட்டம் – குடியிருப்பு கால வரம்பை மூன்று ஆண்டுகளாக குறைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [நி.மு.1(2)] துறை**

**அரசாணை (நிலை) எண்: 43** நாள்: 29.1.2010

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.854, வருவாய்த்துறை, நாள். 30.12.2006.
2. அரசாணை (நிலை) எண். 498, வருவாய்த்துறை, நாள் 5.9.2007.
3. அரசாணை (2டி) எண். 711, வருவாய்த்துறை, நாள் 30.11.2007.
4. அரசாணை (நிலை) எண். 34, வருவாய்த்துறை, நாள் 23.1.2008.
5. அரசாணை (நிலை) எண் 241, வருவாய்த்துறை, நாள் 9.5.2008.
6. அரசாணை (நிலை) எண் 579, வருவாய்த்துறை, நாள் 3.10.2008.
7. அரசாணை (நிலை) எண்.366, வருவாய்த்துறை, நாள் 8.10.2009.
8. மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் (கண்காணிப்பு) அவர்களின் நேர்முகக் கடித எண்.41/மு.அ.அ (கண்காணிப்பு பிரிவு)/2010 நாள் 06.01.2010.

*********

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு, அவர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் அரசால் வெளியிடப்பட்டது. இச்சிறப்பு திட்டத்தின் கீழ், கோவில் புறம்போக்கு நிலங்கள், திருச்சபை மற்றும் மசூதி போன்ற வழிபாட்டு தலங்களை சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களை தவிர பிற அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அக்குடியிருப்புகளை புலத்தணிக்கை செய்து, உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று அந்நிலங்கள் அரசுக்கு தேவையில்லை எனில், வீட்டுமனை பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. இதற்கென செயல்பாட்டில் இருந்த பல தடையாணைகள் தளர்வு செய்யப்பட்டன.

2. மேலே 2 மற்றும் 3–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர்களுக்கு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தெளிவுரைகள் வழங்கப்பட்டன.

3. மேலே 4–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் இத்திட்டம் அரசு நிலங்களில் **ஐந்தாண்டுகளுக்கு** மேல் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் பயனாளிகள் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தவும் இச்சிறப்புத்திட்டம் **30.9.2010** வரை நீட்டித்து மேலே 7–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் பயனாளிகள் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தவும் இச்சிறப்புத்திட்டம் **30.9.2010** வரை நீட்டித்து மேலே 7–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. நீர்நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த சென்னை உயர்நீதிமன்றத்தால் தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, உயர்நீதிமன்ற தடையாணைக்குட்பட்ட நீர்நிலை புறம்போக்குகள் மற்றும் மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள நில வகைகள் தவிர்த்து ஏனைய அரசு நிலங்களில் குடியிருப்பு வீடுகட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனவற்றை மட்டும், இத்திட்ட செயல்முறை குறித்து அரசு வெளியிட்டுள்ள ஆணைகளில் கண்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி வரன்முறை செய்ய அரசு தெளிவுரை வழங்குகிறது.

6. அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு அவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்ய நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான குறைந்தபட்சம் வீடுகட்டி 5 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை ஆய்வு செய்த அரசு இந்த குறைந்தபட்ச குடியிருப்புக்கால வரம்பை **மூன்று ஆண்டுகளாக** குறைத்து ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணைப்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி.தனவேல்,**
**அரசு செயலாளர்.**

---

# இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு காலவரம்பு 3 ஆண்டாகக் குறைப்பு

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை

அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வருவோர்க்கு, அவர்களுடைய ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் இந்த அரசினால் 2006ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டத்தில், காலவரையறை 10ஆண்டுகள் என்பது 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டதுடன், இத்திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பும் முற்றிலும் நீக்கப்பட்டது. இதன் பயனாகக் கடந்த மூன்றரை ஆண்டுகளில் 6 இலட்சத்து 99 ஆயிரத்து 917 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் மேலும் பல்லாயிரக் கணக்கான ஏழை எளிய மக்கள் வீட்டுமனைப் பட்டா பெற்று பயன்பெறும் வகையில், ''குறைந்தபட்சக் குடியிருப்புக் கால வரம்பு மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்படும்'' என 6.1.2010 அன்று சட்டப்பேரவையில் நிகழ்ந்த ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, அரசு நிலங்களில் பல ஆண்டுகளாக வீடு கட்டிக் குடியிருப்போர் ஐந்தாண்டுகளாவது குடியிருந்திருக்க வேண்டும் என்பதை மூன்று ஆண்டுகள் குடியிருந்தால் போதும் என்று மேலும் குறைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29.1.2010 அன்று ஆணையிட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிறப்பித்துள்ள இந்த ஆணையின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வீட்டுமனைப்பட்டா பெறும் அரிய வாய்ப்பு உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவிதை



**கோ**வை மாநகரில் 2010 ஜூன் திங்களில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, மாநாட்டின் மைய நோக்கத்தினைப் பறைசாற்றும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிறப்பான கவிதை ஒன்றை எழுதியுள்ளார். ஆஸ்கார் விருது, கிராமி விருதுகள் மூலம் உலகப் புகழ் பெற்றதுடன், மத்திய அரசின் உயரிய "பத்மபூஷன்" விருதையும் பெற்றுள்ள இசைப்புயல் திரு. ஏ.ஆர். இரகுமான் அக்கவிதைக்கு இசையமைக்கிறார். அந்தக் கவிதை வருமாறு :–

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் –**
**பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!**

**உண்பது நாழி உடுப்பது இரண்டே**
**உறைவிடம் என்பது ஒன்றேயென**
**உரைத்து வாழ்ந்தோம் –**
**உழைத்து வாழ்வோம்.**

**தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்**
**நன் மொழியே நம் பொன் மொழியாம்!**

**போரைப் புறம் தள்ளி**
**பொருளைப் பொதுவாக்கவே**
**அமைதி வழி காட்டும்**
**அன்பு மொழி**
**அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!**

**ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே**
**உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும்**
**ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்**
**ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு**
**ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்**
**சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்**
**செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!**

**அகமென்றும் புறமென்றும் வாழ்வை**
**அழகாக வகுத்தளித்து**
**ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி –**
**ஓதி வளரும் உயிரான உலக மொழி –**
**நம் மொழி – நம் மொழி – அதுவே**
**செம்மொழி – செம்மொழி – நம் தமிழ் மொழியாம் !**
**வாழிய வாழியவே! வாழிய வாழியவே!**
**வாழிய வாழியவே!**

இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை **28.1.2010** அன்று, அவரது இல்லத்தில் திரு. ஏ.ஆர்.இரகுமான் சந்தித்து ஆலோசனைகளைக் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சன் குழுமத்தின் தலைவர் திரு. கலாநிதிமாறன், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, மும்பையைச் சேர்ந்த கவிஞரும், கதாசிரியருமாகிய திரு. ஜாவித் அக்தர், பாடகர் பாம்பே ஜெயஸ்ரீ ஆகியோரும் பங்குபெற்றனர்.

★ ★ ★

# தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டப் பணியை விரைந்து முடித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தல்!



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 20.1.2010 அன்று பொதுப்பணித் துறையின்கீழ் நிறைவேற்றப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்ற நிலைகள் குறித்து பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் திரு. இராம சுந்தரம், இ.ஆ.ப., மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகளுடன் விரிவாக ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர், முனைவர் க. பொன்முடி, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

**மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்கள்**

நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்படுவதற்காக நிர்ணயிக்கப் பட்டுள்ள4 ஆயிரத்து 299 ஏரிகளில் தற்போது 118 அணைக்கட்டுகளிலும் 705 கிலோமீட்டர் நீளமுள்ள நீர்வரத்துக் கால்வாய்களிலும் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி

களையும், எஞ்சியுள்ள இதர பணிகளையும் விரைந்து நிறைவேற்றி முடித்திட வேண்டுமென்றும்;

20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வெலிங்டன் நீர்த்தேக்கத் திட்டம்; 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மலட்டாற்றில் கட்டப்படும் நீர்த்தேக்கம்; 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்தலப்பள்ளம் ஆற்றில் நடைபெறும் கண்மாய்ப் பணிகள் ஆகியவற்றை விரைந்து முடித்திடவும், உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசனவசதி அளித்திடத் திட்டமிடப்பட்டு நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் உள்ள திட்டங்களை மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் விரைந்து முடித்திட வேண்டுமென்றும்;

மாநிலத்திற்குள் ஓடும் ஆறுகளை இணைக்கும் திட்டத்தின்கீழ் காவிரி – குண்டாறு நதிகளை இணைத்திட 189 கோடி ரூபாய்ச் செலவில் மாயனூரில் காவிரியின் குறுக்கே கதவணை கட்டும் பணிகளில் 46 கோடி ரூபாய்ச் செலவிலான பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இத்திட்டப் பணிகளை 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்றும்;

அதேபோல தாமிரபரணி ஆற்றினைக் கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் 369 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப்பணிகளில் 18 கோடி ரூபாய் அளவுக்குப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், இத்திட்டப் பணிகளுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தி, பணிகளை முழு வீச்சில் மேற்கொண்டு முடித்திட வேண்டுமென்றும்;

434 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கி உதவியுடன் நடைபெற்று வரும் 27 கண்மாய்கள் சீரமைக்கும் பணிகள்; 30 வெள்ளத் தடுப்புப் பணிகள்;

சிவகங்கை மாவட்டத்தில் 5 கோடியே 39 இலட்சம் ரூபாய்ச் செலவில் நடைபெற்றுவரும் ஷீல்ட்கால் மற்றும் 40 ஏரிகள் புனரமைக்கும் பணிகள்;

550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை முறையில் நிலத்தடி நீர்ச் செறிவு செய்வதற்காகத் தடுப்பணைகள் அமைக்கும் திட்டப் பணிகளில் இவ்வாண்டில் 180 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள 58 பணிகள்;

5 கோடியே 26 இலட்சம் ரூபாயில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள்;

388 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வெள்ள மேலாண்மைத் திட்டப் பணிகள்;

ஜவகர்லால் நேரு தேசிய நகரப் புனரமைப்புக் குழுமத்தின்கீழ் சென்னை மாநகர வடிகால்களை மேம்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள 633 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் ஆகியவற்றை விரைந்து முடித்திட வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

**புதிய சட்டமன்ற வளாகக் கட்டடம்**

பொதுப்பணித் துறையின் கட்டடப் பிரிவின்கீழ் தமிழகம் முழுவதும் நடைபெற்று வரும் பல்வேறு கட்டுமானப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்யும்பொழுது, புதிய சட்டமன்ற வளாகக் கட்டடம் மார்ச் 13ஆம் நாள் திறக்கப்படவுள்ளதால், அப்பணிகளில் தனிக்கவனம் செலுத்தி முடிக்குமாறும்,

அண்ணா நூற்றாண்டு நினைவு மாநில நூலகக் கட்டடம், விழுப்புரம், திருவாரூர் மாவட்ட மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் ஆகியவைகளையும் குறித்த காலத்தில் கட்டி முடித்திட வேண்டுமென்றும், இன்னும் தொடங்கப்படாமல் உள்ள பெரம்பலூர், சிவகங்கை மாவட்ட மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடப் பணிகளை உடனடியாகத் தொடங்கிட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

வரும் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்குத் தேவையான விவரங்களைப் பெற்று உரிய அரசாணைகளை மார்ச் மாதத்திற்குள் பிறப்பித்திடவும், காவிரி டெல்டா பகுதிகளில் தூர்வாரும் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளை வரும் மார்ச் மாதத்தில் தொடங்கி ஜூன் மாதத்திற்குள் முடித்திட வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

**மழைநீரை சேமிக்கும் திட்டங்களை செயல்படுத்துவீர்!**

தமிழகத்தில் வற்றாத ஜீவ நதிகள் எதுவும் இல்லாமல் பருவமழையை மட்டுமே எதிர் பார்க்க வேண்டிய நிலை உள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் உள்ள ஊராட்சிகளுக்குச் சொந்தமான 25 ஆயிரத்து 492 ஊராட்சி ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி, மழை நீரைச் சேமித்து வைப்பதற்குரிய திட்டம் தயாரித்து, அதனைச் செயல்படுத்திட வேண்டுமெனவும்;

தாமிரபரணி ஆற்றில் ஆண்டுதோறும் வீணாகக் கடலுக்குச் செல்லும் தண்ணீரை அருகில் உள்ள வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்காக தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்துவது போல; ஒட்டப்பிடாரம் பகுதிக்கும் பாசன வசதிகளை அளிக்கும்வகையில் புதிய திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமெனவும், இவ்வகையான திட்டங்களுடன், ஊராட்சி ஏரிகளும் இணைக்கப்பட வேண்டுமெனவும், கட்டடப் பராமரிப்புப் பணிகளில் தேக்க நிலை உள்ளதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி இப்பணிகளில் தனிக் கவனம் செலுத்தி நிலுவையில் உள்ள கட்டடப் பணிகளை விரைவாக முடித்திட வேண்டுமெனவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

**பொறியாளர்களுக்கு மடிக்கணினிகள்**

இந்நிகழ்வின்போது, நீர்வள நிலவள ஆதார அமைப்புத் திட்டப் பணிகளின் முன்னேற்றத்தை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கு உதவும் வகையில், 12 கோடியே 96 இலட்சம் ரூபாய்ச் செலவில் கணினிகள், நவீன புகைப்படக் கருவிகள், நிகரிகள், ஸ்கேனர்கள் முதலான தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்படுவதன் அடையாளமாகப் பொறியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மடிக் கணினிகளை வழங்கினார்.


இத்துடன் பல்வகைப் பயிர்களின் சாகுபடிகளுக்காகக் கள அலுவலர் களுக்கும், வேளாண் பெருமக்களுக்கும் வழிகாட்டக்கூடிய "பணிக்கையேடு 2010" மற்றும் "நீரும் நிலமும்" என்னும் காலாண்டு இதழ் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். ★

## பொதுப்பிரச்சினைகளிலும் – மதச்சார்பற்ற அணிக்கு மக்களைத் திரட்டுவதிலும் ஜோதிபாசுவோடு இணைந்து செயல்பட்ட பல நிகழ்வுகள் நெஞ்சில் நிழலாடுகின்றன



மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சர் ஜோதிபாசு மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உருக்கம் !

**பொ**துவுடைமை இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும், மேற்கு வங்க மாநில முன்னாள் முதலமைச்சர் தோழர் ஜோதிபாசு அவர்கள் 17.01.2010 அன்று காலமானார் இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–



ஜோதிபாசு

பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும், என்னுடைய அருமை நண்பருமான தோழர் ஜோதிபாசு அவர்கள் மறைந்த செய்தியினைக் கேட்டு மிகவும் துயர் அடைந்தேன்.

மேற்கு வங்க மாநிலத்தின் முதலமைச்சராக பல ஆண்டுக் காலம் வீற்றிருந்து – அந்த மாநிலத்தின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டவர் அவர். தன் மனதிலே தோன்றிய கருத்துகள் எதுவாக இருந்தாலும் அதனைத் துணிந்து வெளிப்படுத்த அவர் தயங்கியதே இல்லை.

பொதுப் பிரச்சினைகளிலும் – மதச் சார்பற்ற அணிக்கு மக்களைத் திரட்டுவதிலும் அவரோடு இணைந்து செயல்பட்ட பல நிகழ்வுகள் என் உள்ளத்தில் இன்னும் நினைவுகளாக நிலைத்திருக்கின்றன. அவருடைய மறைவால் துயருறும் அவருடைய குடும்பத்தினருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அமெரிக்க நாடாளுமன்றம் சார்பில் வழங்கப்படும் மிக உயரிய விருது



– தமிழ்ச் செம்மொழி மாநாட்டில்
நியூயார்க் தமிழ்ச் சங்க பிரதிநிதிகள் வழங்குகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு அமெரிக்க நாடாளுமன்றம் சார்பில் அளிக்கப்படும் மிக உயரிய விருதான ''அமெரிக்க காங்கிரஸ் மகாசபை'' விருது வழங்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் அமெரிக்காவில் உள்ள நியூயார்க் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு. பிரகாஷ் எம்.ஸ்வாமி 2.2.2010 அன்று சந்தித்துப் பேசினார்.

கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு நியூயார்க் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவை தெரிவித்துக்கொண்ட அவர், இந்த மாநாட்டில் அமெரிக்காவைச் சேர்ந்த 100 தமிழறிஞர்கள் கலந்துகொள்ளவிருப்பதாகக் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. பிரகாஷ் எம்.ஸ்வாமி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரின் சமுதாயச் சேவையைப் பாராட்டி, அமெரிக்க நாடாளுமன்றம் சார்பில் வழங்கப்படும் மிக உயரிய விருதான அமெரிக்க காங்கிரஸ் மகாசபை விருது வழங்கப்பட இருப்பதாகத் தெரிவித்தார். முதல் முறையாக இந்தியத் தலைவர் ஒருவருக்கு வழங்கப்படும் இந்த விருதை, கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்போது நியூயார்க் தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகள் நேரில் வழங்குகின்றனர் என்றும் அவர் கூறினார். ★

# ஏ.ஆர்.ரகுமானுக்கு 2 'கிராமி' விருதுகள்

மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் வாழ்த்து!

தமிழகத்தைச் சேர்ந்த திரைப்பட இசை அமைப்பாளர் திரு. ஏ. ஆர். ரகுமான் அவர்களுக்கு உலகப் புகழ்பெற்ற இசை விருதான கிராமி விருது அளிக்கப் பட்டுள்ளது. இதற்காக அவரைப் பாராட்டி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். அதில், ''பெருமைமிக்க இரண்டு 'கிராமி' விருதுகளைப் பெற உரிய முறையில் தாங்கள் தேர்வு செய்யப் பட்டமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.



உலகளாவிய மிகப்பெரும் இசை விருதுகளை தன் மகன் பெறுவதற்காக தமிழ்நாடே இந்த நேரத்தில் இறும்பூதெய்துகிறது; பெருமை கொள்கிறது.

இன்று உலகின் மிக உயர்ந்த இடத்திற்கு சென்றுள்ள உங்களுக்கு என் இதயபூர்வ வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

★ ★ ★

# ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 25.1.2010 அன்று, இருங்காட்டுக் கோட்டை – சிப்காட் வளாகத்தில் தெற்காசியாவிலேயே முதன் முறையாக அதிநவீன டிரிவிட்ரான் மருத்துவ தொழில்நுட்பப் பூங்காவையும் (TRIVITRON MEDICAL TECHNOLOGY PARK), அலோகா நிறுவனத்தின் முதல் உற்பத்தி பிரிவினையும் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

டிரிவிட்ரான் மருத்துவ தொழில்நுட்பப் பூங்காவையும், அலோகா நிறுவனத்தின் முதல் உற்பத்திப் பிரிவையும் தொடங்கிவைப்பதில் பெருமைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 2007ஆம் ஆண்டு இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 23.5 ஏக்கர் நிலத்தில் இந்தத் தொழில்நுட்பப் பூங்கா செயல்படவுள்ளது. சர்வதேசத் தரத்துடன் கூடிய மருத்துவத் தொழில்நுட்பக் கருவிகளைக் குறைந்த விலையில் தயாரித்து விற்பனை செய்ய உள்ளது.



இந்திய சந்தையின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்காக டிரிவிட்ரான் தனது முதல் மருத்துவத் தொழில்நுட்பப் பூங்காவினை இப்பகுதியில் அமைத்திருப்பது நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளக் கூடியதாகும். இந்த மருத்துவ தொழில்நுட்பப் பூங்கா தெற்கு ஆசியாவிலேயே முதல் முறையாக தனது உற்பத்தியைத் தொடங்க உள்ளது. தமிழகத்தின் மருத்துவத்துறை வளர்ச்சியில் இத்தொழிற்சாலை சிகரமாக அமையும்.

மருத்துவத்துறைக்கு பயன்படக்கூடிய தொழில்நுட்ப உபகரணங்களை வெளிநாடுகளிலிருந்து விலைக்கு வாங்கி தமிழகத்திலும், மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்வதை 1997ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் முதலில் மேற்கொண்டிருந்தது. தற்போது, இந்த உபகரணங்களை தமிழ்நாட்டிலேயே உலகத்தரத்தில் தயாரிப்பதால் குறைந்த விலையில் அப்பொருட்களை விற்பனை செய்திடலாம் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் லிஸ்டர் லேபாரட்டரியின் உரிமையாளரான டாக்டர் வேலு தமிழக அரசை அணுகியதால் இந்தத் தொழில்நுட்பப் பூங்கா உருவாகியுள்ளது.

இந்த மருத்துவ பூங்காவில் 10 பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டுறவோடு உபகரணங்கள் தயாரிக்கப்படவுள்ளன. ஜப்பான் நாட்டின் அலோகா நிறுவனத்தின் மூலம் அல்ட்ரா சவுண்டு, கலர் டாப்ளர் எந்திரங்கள் தயாரிக்கும் தொழில் கூடமும், இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களான கண்ணொளி வழங்கும் திட்டம், குழந்தைகள் இதயநோய் சிகிச்சைத் திட்டம், வரும்முன் காப்போம் திட்டம், கர்ப்பிணிப் பெண்கள் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழக சுகாதாரத்துறை, மாநிலம் எங்கும் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. தமிழகத்தில் மருத்துவ சேவை நிறுவனத்தின் மூலம் மருந்துகள் பொதுமக்களுக்கு வினியோகிப்படுவது இந்திய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது.




கடந்த 22 ஆம் தேதி மலேசிய நாட்டின்

மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர். சுப்பிரமணியன் அவர்களும், அவருடன் வந்த குழுவினரும் என்னை சந்தித்தபோது, அந்தக் குழுவில் வந்த ஒருவர், தான் விருதுநகருக்கு சென்று கொண்டிருந்த போது, அங்கு ஏற்பட்ட ஒரு விபத்தில் படுகாயமுற்ற ஒருவரை காப்பாற்ற, அங்கு இருந்த நபர்கள் 108 ஆம்புலன்சிற்கு அவசர சிகிச்சைக்காக கைபேசி மூலம் தகவல் தெரிவித்தனர். தகவல் கிடைத்த பத்தே நிமிடத்தில் 108 அவசர ஊர்தி வந்து அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று காப்பாற்ற முடிந்தது என்றும், மருத்துவ வசதி தமிழகத்தில் மிகவும் சிறப்பாக உள்ளது என்றும் தெரிவித்தார். அவரிடத்தில் நான் முதல்வர் அவர்களின் உன்னத திட்டமான "உயிர்காக்கும், உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" குறித்த விவரங்களை தெரிவித்து, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் மருத்துவ காப்பீட்டிற்கான பிரீமியம் தொகையினை அரசே வழங்குகிறது என்பதையும் தெரிவித்தேன். இதனை கேட்ட மலேசிய குழுவினர் மிகவும் வியப்படைந்தனர்.

தமிழகத்தில் சுமார் ஒரு கோடியே 25 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், 51 நோய்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரையில் உயர் சிகிச்சையினை தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ள வகை செய்யும் "உயிர்காக்கும், உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் மூலம் 29 ஆயிரத்து 355 நோயாளிகள் பயன் அடைந்துள்ளனர். இவர்களுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபாய் 91 கோடி 35 இலட்சத்து 82 ஆயிரம் ஆகும். மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ சேவை ஆகிய துறைகளில் தமிழகம் முன்னணி வகித்தாலும், மருத்துவத் தொழில்நுட்ப உபகரணங்கள் தயாரிப்பில் நாம் சிறப்பிடம் பெறவில்லை என்ற நிலையிருந்தது. இன்று முதல் அந்தத் துறையிலும் தமிழகம் சிறப்பான முறையில் ஈடுபடத் தொடங்கியுள்ளது என்பதற்கு அடையாளம் தான் இன்று தொடங்கப்பட்டுள்ள மருத்துவத் தொழில்நுட்ப பூங்காவாகும். இதுபோன்ற முன்னோடி திட்டங்களுக்கும், மக்கள் ஏற்றம் பெற உதவிடும் வகையில் உருவாகும் திட்டங்களுக்கும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அரசு தொடர்ந்து துணை நிற்கும் என்ற உறுதியை உங்களிடத்தில் வழங்கி, இந்த பூங்கா மேலும் வளர எனது வாழ்த்துகளை கூறி விடைபெறுகிறேன்".


இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. யசோதா, மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ்,இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன்,இ.ஆ.ப., சிப்காட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. என். கோவிந்தன்,இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப., அப்பல்லோ மருத்துவமனை குழுமத்தின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி, ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. வி.ஆர்.வெங்கடாசலம், ஜப்பான் நாட்டு அலோகா நிறுவனத்தின் தலைவர் திரு.மினோரு யோஷிசூமி (Thiru. MINORU YOSHIZUMI), டிரிவிட்ரான் குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர். ஜி.எஸ்.கே. வேலு, இயக்குநர் டாக்டர் டி.கே. பார்த்தசாரதி, துணை மேலாண்மை இயக்குநர் சமீர் டி.சாராள் ஆகியோர் கலந்து கொண்டனர். ❖

# தமிழ் மொழியை உயர்தனிச் செம்மொழி என உலகறியச் செய்த அறிஞர் கால்டுவெல் வாழ்ந்த இல்லம் அரசு நினைவு இல்லமாகிறது

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை

இங்கிலாந்து நாட்டில் பிறந்து கிறித்தவ சமயத் தொண்டு புரிவதற்காக 1838ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்த இராபர்ட் கால்டுவெல் அவர்கள், நெல்லை மாவட்டம் இடையன்குடி என்னுமிடத்தில் தங்கிச் சமயப் பணிகளாற்றி மறைந்தார்.

கால்டுவெல் அவர்கள் தமிழகத்திற்கு வந்தபின் தமிழ்மொழியைக் கற்று, அதன் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்; தமிழ்மொழி மட்டுமல்லாமல், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பிற திராவிட மொழிகளையும் கற்று, இம்மொழி களுக்கிடையில் உள்ள ஒற்றுமைகளை ஆய்வு செய்தவர்; அதன் பயனாக, ‘திராவிட மொழிகள்’ என்னும் சொல்லாக்கத்தை முதன்முதல் உருவாக்கி உலகுக்கு அறிமுகம் செய்தவர் அவர் அத்துடன், “திராவிட மொழிகள் அனைத்திலும், உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒருசிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்” என்னும் வரலாறு போற்றும் மகத்தான உண்மையையும் நிலைநாட்டி உலகறியச் செய்தவர் கால்டுவெல். அவர் படைத்த “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்” என்னும் நூல் தமிழ்மொழியின் தனித் தன்மையையும், சிறப்பையும் உலகுக்கு வெளிப்படுத்தியதுடன், தமிழ்மொழி பற்றிய தொன்மைச் சிறப்பினையும் பறைசாற்றுகிறது.



இவ்வாறு தமிழ்மொழிக்கு மாபெரும் பெருமைகளைச் சேர்த்த இராபர்ட் கால்டுவெல் அவர்களைப் போற்றும் வகையில், அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பின், 1968ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது, சென்னைக் கடற்கரையில் காமராஜர் சாலையில் சிலை அமைத்துச் சிறப்பிக்கப் பட்டது.

செம்மொழியாம் தமிழ் மொழிக்குச் சிறந்த மணிமகுடம் சூட்டிய மாமேதை கால்டுவெல் அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், நெல்லை மாவட்டம், இடையன் குடியில் அவர் வாழ்ந்து மறைந்த இல்லத்தை, அவரது நினைவைப் போற்றும் வகையில், அரசு நினைவு இல்லமாக மேம்படுத்திப் பராமரித்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29.1.2010 அன்று ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖

# பொது விநியோகத் திட்டத்தை தமிழக அரசு சிறப்பாகச் செயல்படுத்துகிறது

புதுடெல்லியில் 6–2–2010 அன்று, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது குறித்து நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சார்பில் பங்கேற்று மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.

எங்களது முதலமைச்சர் சார்பில் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவரது உரை ஏற்கெனவே இங்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. எனவே, நான் இந்த உரையிலுள்ள சில முக்கியமான கருத்துகளை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

1. விலைவாசி உயர்வு குறித்து மத்திய அரசின் கவலையைப் பகிர்ந்து கொள்வதோடு, கடுமையான உணவு விலை உயர்வு பற்றி விவாதிக்க இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக பிரதமருக்கும், வேளாண்துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க இயன்ற அளவு நடவடிக்கைகள் அனைத்தையும் மத்திய, மாநில அரசுகள் எடுத்துள்ளன. இப்போது தேவைப்படுவது என்னவென்றால், குறிப்பிட்ட உணவுப் பொருளுக்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியது ஆகும்.

தற்போதைய போக்கு, பருப்பு வகைகள், சர்க்கரை, சமையல் எண்ணெய், காய்கறிகள் போன்ற உணவுப் பொருட்களின் விலைகள் மிகக் கடுமையாக உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது. இந்தப் பண வீக்கம் தேவை மற்றும் விநியோகம் ஆகியவற்றிலுள்ள நிர்ப்பந்தங்களால் ஏற்பட்டுள்ளது.

2. உணவு தானியங்களின் தனிநபர் நுகர்வு அதிகரிப்பு, நல்வாழ்வுத் திட்டங்களால் தனிநபர் வருமானம் உயர்வு ஆகியவையும் இதற்குக் காரணங்களாக உள்ளன.

சந்தையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளும் நெருக்கடிக்குக் காரணமாக உள்ளன. இவ்வாறு பிரச்சினையைச் சமாளிக்க நீண்டகால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

**தமிழக அரசின் நடவடிக்கைகள்**

3. நிலைமையைச் சமாளிக்க தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவற்றில் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(அ) தமிழ்நாட்டிலுள்ள பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் முறை நாட்டில் மிகச் சிறந்தவற்றுள் ஒன்றாகும்.

(ஆ) இலக்கிடப்பட்ட பொது விநியோகத் திட்ட முறையை விட அனைவருக்குமான பொது விநியோக முறை உணவுப் பாதுகாப்பை நல்ல முறையில் அளிக்கிறது. தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டுக்கு மேலுள்ள குடும்பங்கள் உட்பட குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் மிகக் குறைந்த விலையில் கிலோ ஒரு ரூபாய்க்கு என மாதம் 20 கிலோ அரிசி வரை விநியோகிக்கப்படுகிறது.

(இ) ஒவ்வொரு மாதமும் எங்களது மாநிலத்துக்கு மத்திய அரசு 10,832 டன் என்று சர்க்கரையை ஒதுக்கீடு செய்கிறது. நாங்கள் அனைத்து குடும்பங்களுக்கும் கிலோ ரூ.13.50க்கு 35,000 டன் சர்க்கரையை விநியோகம் செய்கிறோம். இந்த இடைவெளியை நிரப்ப, வெளிச்சந்தையிலிருந்து வாங்குவதால் ஆண்டுக்குக் கூடுதலாக 500 கோடி ரூபாய் பளு ஏற்படுகிறது.

(ஈ) பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், கோதுமைப் பொருட்கள் ஆகியவற்றை விநியோகிக்க 2008ஆம் ஆண்டு மே மாதம் எங்கள் முதலமைச்சரால் ஒரு சிறப்பு பொது விநியோக முறைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

(உ) 50 ரூபாய்க்கு 10 வகையான மளிகைப் பொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது.

(ஊ) நெல், அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், சர்க்கரை ஆகியவற்றிற்கு இருப்பு உச்சவரம்பு தமிழ்நாடு அரசால் விதிக்கப்பட்டுள்ளது.

(எ) பதுக்கல், கருப்புச் சந்தை, கடத்தல் ஆகியவற்றிற்கு எதிராக நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

(ஏ) முதல்வரின் ஆணையின்படி ஒரு புதுமையான திட்டம் மூலம் மாநிலத்தில் 150 உழவர் சந்தைகளை உருவாக்கியுள்ளோம். இங்கு விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்கின்றனர்.

**ஆலோசனைகள்**

4) இறுதியாக, கீழ்க்கண்ட ஆலோசனைகளைப் பரிசீலனைக்காக முன்வைக்கிறேன்.

(i) சர்க்கரை, துவரம் பருப்பு போன்ற சில அத்தியாவசிய உணவுப் பொருட்களின் சில்லறை விலைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் பிரிவு 3Aயின் கீழ் உச்ச வரம்பு நிர்ணயிப்பதைப் பற்றி மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்.

(ii) கருப்புச் சந்தை போன்றவற்றிற்கு தண்டனைகள் விதிக்கும் சட்டங்களின் பிரிவுகள் மேலும் கடுமையாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

(iii) மாநிலங்களில் அதிகரித்து வரும் விநியோகத்தை சமாளிக்க வறுமைக் கோட்டுக்கு மேலான அரிசி / கோதுமை ஆகியவற்றின் ஒதுக்கீட்டு அளவை உயர்த்த வேண்டும். மேலும், உணவு தானியங்களின் ஒதுக்கீடு, அவை நிர்ணயிக்கப்பட்ட அளவாக இருந்தாலும், கூடுதலாக இருந்தாலும், மானிய விலை விகிதத்தில் தான் இருக்க வேண்டுமே தவிர பொருளாதார விலையாக இருக்கக் கூடாது.

(iv) தற்போது கோதுமை இருப்பு நிலைமை தாராளமாக இருப்பதால், வழக்கமாக பொது விநியோகத் திட்ட முறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் கோதுமையின் அளவு, அவ்வப்போது ஒதுக்கீடு செய்வதற்கு மாறாக, அதிகரிக்கப்பட வேண்டும்.

(v) 1.10.2009 முதல் லெவி உரிமை 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்தப்பட்டு விட்டதால், மத்திய அரசு மாநிலங்களுக்கான லெவி சர்க்கரை ஒதுக்கீட்டு அளவை இரட்டிப்பாக்க வேண்டும். தேவைப்படும்போதெல்லாம் மத்திய அரசு சர்க்கரையை இறக்குமதி செய்து கொள்ளலாம்.

(vi) மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும். இத்தகைய இறக்குமதிகளுக்கும் மத்திய அரசு மானிய உதவி அளிக்க வேண்டும்.

(vii) பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை ஊக்குவிக்க, நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை அப்போது நிலவும் சந்தை விலைகளுடன் ஒப்பிடக்கூடியதாக இருக்க வேண்டும்.

இறுதியாக, ஆழமான அறிவும் ஞானமும் கொண்ட நமது பிரதமரும், வேளாண்துறை அமைச்சரும் இந்தப் பிரச்சினைக்கு நீண்ட காலத் தீர்வு காண முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எங்களது மாநிலத்தின் சார்பில், முழு ஆதரவையும் உங்களுக்குத் தெரிவிக்க உறுதி அளிக்கிறேன்.

* * *

# உள்நாட்டுப் பாதுகாப்பு அச்சுறுத்தலை சமாளித்திட மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும்!

7–2–2010 அன்று, புதுடெல்லியில்
உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்து நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சார்பில் பங்கேற்று
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.




"பிரதமர் அவர்களின் வழி காட்டுதலின் கீழ் மத்திய உள்துறை அமைச்சரின் செயலூக்கம் கொண்ட திறமையான அணுகுமுறையால் 2009 ஆம் ஆண்டில் எந்தவிதமான பெரிய சம்பவமும் நிகழாமல் நாம் கடந்து வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. விரைவாக மாறிவரும் உலகலாவிய நிலைமைகளில், பாதுகாப்பு, அமைதி, வளமடைதல் ஆகியவற்றை உறுதிசெய்ய உள்நாட்டுப் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நான்காவது முறையாக நாம் அனைவரும் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க ஒன்று கூடியுள்ளோம் என்பது, உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையில் சந்தித்து வரும் சவால்களைச் சமாளிப்பதில் மத்திய, மாநில



அரசுகளின் உளமார்ந்த ஈடுபாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

துணை பன்முகமை, மத்திய – மாநில தனிப்பிரிவு மையம் அமைத்தல், கடலோரப் பிரிவை வலுப்படுத்துதல், மத்திய அரசு மாநில உளவுப் பிரிவுகளுக்கு நிதி வழங்குதல்– ஆகியவை பயங்கரவாதத்தையும், உள்நாட்டுப் பாதுகாப்புக்கான சவால்களையும் எதிர்த்துப் போரிடும் நமது பொதுவான உறுதியை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளாகும்.

விவாதப் பொருளிலுள்ள பிரச்சினைகளை எடுத்துக்கொண்டால் –

தமிழ்நாட்டில் உள்நாட்டுப் பாதுகாப்பு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. மாநில காவல்துறை மற்றும் உளவுப் பிரிவுகள் தடுப்பு அம்சங்களில் முனைப்பு செலுத்த இடைவிடாது பாடுபட்டு, அனைத்து விதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் முடக்கிவைக்க முனைந்துள்ளது.

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட மூன்றாவது ஊதியக் குழு தகுதி உருவாக்கல் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் ஏற்கெனவே பரிசீலித்துள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் மாநில அரசு ஈடுபட்டு வருகிறது. அதிநவீன மாநில காவல் துறை கல்விப் பயிற்சி நிறுவனம் (அகாடெமி) முழுமையாகச் செயல்பட்டு வருகிறது. தனியான பணி நியமனம் மற்றும் அது தொடர்புடைய பிரச்சினைகளால் மாநில அரசு தனியாக மாநில தொழில் பாதுகாப்புப்படை அமைப்பதற்கு ஆதரவாக இல்லை. இருப்பினும் மாநில காவல்துறையின் செயலூக்கம் கொண்ட தலையீட்டுடன் தனியார் பாதுகாப்பு அமைப்புகளுக்கு தொழில்முறைப் பயிற்சி அளிப்பது அதைவிடச் சிறந்ததாகும். இந்தத் தேவைக்காக, மாநில அரசு 2007ஆம் ஆண்டின் தமிழ்நாடு தனியார் பாதுகாப்பு முகமைகள் விதிகளின்கீழ் விதிகளை வகுத்து, அவை சரிபார்த்தல், அனுமதி

வழங்குதல், பயிற்சி ஆகியவற்றில் தற்போது நடைமுறையில் உள்ளன.

**கடந்த நான்காண்டுகளில் 11,167 காவலர்கள் நியமனம்**

கடந்த மாநாட்டிற்குப் பிறகும், தொடர் நிகழ்வாகவும், தமிழ்நாடு காவல்துறையில் மேலும் நல்ல நிருவாகத்திற்காக, ஒரு புதிய மாவட்டம், ஒரு துணைக் கோட்டம், 10 போக்குவரத்து மற்றும் ஒரு வழக்கமான காவல் நிலையங்கள் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளதுடன், 15 புறக்காவல் நிலையங்கள் வழக்கமான காவல் நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் 600 கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்பட்டும், 28 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 212 உதவி ஆய்வாளர்கள், 4,339 காவலர்கள் நியமிக்கப்பட்டும் உள்ளனர். தற்போதைய அரசு 2006ஆம் ஆண்டு பதவியேற்றதிலிருந்து, 11,167 காவலர்கள், 741 உதவி ஆய்வாளர்கள், 200 உதவி ஆய்வாளர்கள் (தொழில் முறை) ஆகியோர் சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையம் மூலமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

476 அலுவலர்களுடன் திட்டமிட்ட குற்றங்கள் உளவுப்பிரிவு உருவாக்கப்பட்டு திட்டமிட்ட குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அதிகாரப்படி முக்கியமான இந்திய கள்ளநோட்டு வழக்குகளை தேசியப் புலனாய்வு முகமைக்கு மாற்ற தேசியப் புலனாய்வு முகமைச் சட்டம் ஏற்கெனவே வழிவகுக்கிறது. பொதுவான ஒப்புதலின்படி கள்ளநோட்டு வழக்குகளை மத்தியப் புலனாய்வு அமைப்புக்கு (சி.பி.ஐ.) மாற்ற வேண்டிய தேவை இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். இது தொடர்ந்து அந்தந்த வழக்குகளின் அடிப்படையில் கலந்தாலோசனை மூலமாக மாற்றுவதாகவே தொடர்ந்து நீடிக்கலாம்.

**மாநில உளவு அமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது**

600 புதிய பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு மாநிலத்திலுள்ள உளவு அமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. உளவுத்துறை (உள்நாட்டுப் பாதுகாப்பு காவல்துறை தலைவர் – ஐ.ஜி.) பதவி உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. திட்டமிட்ட குற்றங்கள் உளவுப் பிரிவு உருவாக்கப்பட்டதுடன், 289 பேர் கொண்ட சிறப்பு உளவு அணி உளவுப் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. உளவுப் பிரிவு அலுவலர்களுக்கு 10 சதவீத சிறப்பு ஊதியம் அளிக்கப்படுகிறது. 24x7 கட்டுப்பாட்டு அறை, துணை பன்முகமை மையம், மாநில சிறப்புப் பிரிவு அமைப்பு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆபரேஷன் 'ரக்ஷக்'–ன் போது சமீபத்தில் கட்டுப்பாட்டு அறையின் திறமை நன்கு சோதிக்கப்பட்டது. உளவு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவுகளின் அலுவலர்களுக்கு அவர்கள் செயல்படும் பகுதிகளில்–துறைகளில் காவல் பணியின் சர்வதேசத் தரங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று மீண்டும்

> **பொதுவான செயல்பாட்டு முறைகளின் படி, விரைவு பதிலடிப் பிரிவுகள், வெடி குண்டு கண்டுபிடிப்பு மற்றும் அழித்தல் பிரிவுகள், மற்ற பிரிவுகளுடன் மாநகரங்களிலும், அனைத்து மாவட்டங்களிலும் விரைவு நடவடிக்கை அணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.**

வலியுறுத்தப்படுகிறது. கடந்த மாநாட்டிலும் கூறிய காரணங்களால், தனியான உளவுப் பணிக்குழு உருவாக்கப்படுவதற்கு தமிழ்நாடு அரசு ஆதரவாக இல்லை.

பயங்கரவாத எதிர்ப்புக்காக பொதுவான செயல்பாட்டு முறைகள் நன்கு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இடைவெளி பகுப்பாய்வு செய்து முறையான இடைவெளி நிரப்பும் நடவடிக்கைகளை உருவாக்க முறையான ஒப்புமைப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. பொதுவான செயல்பாட்டு முறைகளின்படி, விரைவு பதிலடிப் பிரிவுகள், வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் அழித்தல் பிரிவுகள், மற்ற பிரிவுகளுடன் மாநகரங்களிலும், அனைத்து மாவட்டங்களிலும் விரைவு நடவடிக்கை அணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. எந்த விதமான விளைவுகளையும் மேலும் தீர்மானகரமாக கையாள்வதற்கு தயார் செய்வதற்காக 300 பேர் கொண்ட அதிவிரைவுப் படையினரின் (கமாண்டோ) விரிவான மனித ஆற்றல், சாதனங்கள் தணிக்கையை மாநில அரசு தற்போது மேற்கொண்டுள்ளது. பெருநகரமான சென்னையைப் பொருத்தமட்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி அளிப்பிற்கு மத்திய அரசின் கவனம் ஈர்க்கப்படுகிறது. பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களைத் தொடர்ந்து பல ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டும், இதுவரை எந்த அனுமதியும் கிடைக்கப் பெறவில்லை.

மாநிலத்தின் காவல் பணிக்கு மின்னணுவியல் நிருவாகத்தின் பலன்களை தமிழக அரசு வெற்றிகரமாகக் கொண்டு வந்துள்ளது. மாநில தலைமை காவல் துறை இயக்குநரின் அலுவலகத்தில் கட்டணமற்ற உதவிச் சேவை தொலைபேசி வசதி செயல்படுகிறது.

தமிழ்நாடு காவல்துறையின் இணைய தளத்தில் ஆன்லைன் மூலமாக புகார் பதிவுமுறை உள்ளது. குற்றம் மற்றும் குற்ற நடவடிக்கை கண்டுபிடிப்பு மற்றும் இணைய செயலமைப்பு முறையை (CCTNS) பொருத்தமட்டில் மாநில திட்ட நிருவாக ஆலோசனை அமைப்பு ஏற்கெனவே உள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள காலவரையறைப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உச்சநீதிமன்றம் மற்றும் மாநில மூன்றாவது காவல்துறை கமிஷன் ஆகியவற்றின் பெரும்பாலான பரிந்துரைகளை தமிழ்நாடு ஏற்கெனவே நிறைவேற்றி உள்ளது. காவல்துறை நிறுவன வாரியங்கள் அமைக்கவும், நகர்ப்புர காவல் நிலையங்களில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றங்கள் செயல்பாடுகளைப் பிரிக்கவும் நிருவாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. புதியதொரு காவல்துறை மசோதா வரையப்பட்டு தற்போது அது மாநில சட்டமன்றத்திற்கு தேர்வுக் குழுவின் முன் உள்ளது. புகார்களை கவனிக்க ஏற்கெனவே காலத்தால் சோதிக்கப்பட்ட காவல்துறை நிலை ஆணைகளின் கீழ் உள்ள பிரிவுகள் தவிர, தேசிய மனித உரிமை ஆணையம், மாநில மனித உரிமை ஆணையம், சிறுபான்மையினர் ஆணையம் போன்ற ஏராளமான சட்டரீதியிலான அமைப்புகள் தற்போது இருப்பதால், மேலும் ஒரு புகார் அமைப்பு உருவாக்குவதை தமிழக அரசு ஆதரிக்கவில்லை.

காவல் படை நவீனமயமாக்கல் திட்டம் தமிழ்நாடு காவல் துறைக்கு, குறிப்பாக திறன் உருவாக்கல், பயிற்சி, வீட்டு வசதி போன்ற சமயங்களில் பலன் அளித்திருந்தபோதும் மத்திய அரசிடமிருந்து ரூ.51 கோடி ஒருமுறைக்கான நிதி உதவி இன்னும் வரவில்லை. இந்தத் திட்டத்தின் தணிக்கையில் எழுப்பப்பட்ட குறிப்புகளுக்கு விரிவான பதில்கள் ஏற்கெனவே அனுப்பப்பட்டுவிட்டன.

**பயங்கரவாதிகளை ஒடுக்க தொடர்ந்து முன்னுரிமை**

இடதுசாரி தீவிரவாதிகளை சமாளிப்பதற்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தில் இவர்களால் எந்தவிதமான கலவரமும் எழவில்லை. மாநில உளவு அமைப்பில் க்யூ பிரிவு கூடுதலாக 439 அலுவலர்கள், ஆட்களுடன் மேலும் வலுப்படுத்தப் பட்டுள்ளது.

கடலோரப் பாதுகாப்புத் துறையில், ஆப்ரேசன் பேரிகேட் நடவடிக்கைக்கு அடுத்த ஆப்ரேஷன் ரக்ஷக் நடவடிக்கையிலும் மாநில காவல்துறை பங்கு பெற்றது. ஆப்ரேஷன் ரக்ஷக்–இல் மாநில காவல் துறை திறமையாக ஒருங்கிணைந்து அதிகமான இடைமறித்தல் விகித்ததைக் கண்டு, செயல்படுத்தப்பட்ட செயற்கை தாக்குதல்களை முறியடித்தது.

பன்னிரண்டு கடல்சார் காவல் நிலையங்கள், 5 புறக்காவல் நிலையங்கள், 87 செக் போஸ்ட்டுகள், 9 படகுகள் ஆகியவை செயல் படுகின்றன. கூடுதலாக 11 வாடகைப் படகுகள் வழக்கமான கண்காணிப்புப் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. கடலோரப் பாதுகாப்பு கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணும் செயல்படுத்தப்பட்டு நல்ல பலன்களைத் தந்து வருகின்றன. இருப்பினும் இலங்கை நாட்டுடனான இந்த எல்லையின் பதற்றமான நிலை முழுமையாக உணரப்படவில்லை. பல்வேறு மத்திய, மாநில முகமைகளிடையே மேலும் நல்ல ஒருங்கிணைப்பு, தகவல் பறிமாற்றம், ஒருங்கிணைந்த நடவடிக்கை ஆகியவை மீனவர்களிடம் மற்றும் இலங்கை கடற்படை சம்பந்தப்பட்ட பல துயரமான சம்பவங்களைத் தவிர்க்கும் சர்வதேச எல்லைப் பகுதியான தென் பகுதி கடலோரப் பகுதிக்கு வடநாட்டிலுள்ள தரை மற்றும் கடல் எல்லைப் பகுதிகளுக்கு அளிக்கப்படுவது போன்ற கவனம் தேவைப்படுகிறது.

இதனால்தான் இதற்கான மனித சக்திக்கான முழுச் செலவும் மத்திய அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாவது கட்டத்தில் கூடுதலாக 30 கடல்சார் காவல் நிலையங்கள், 20 படகுகள், 175 நிலநீர் வாகனங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. படகுகள் நிறுத்துமிடங்கள் (ஜெட்) கட்டுவதும், பராமரிப்பும் பற்றி கூட ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

நிறைவு செய்வதற்கு முன்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு பற்றிய முந்தைய மூன்று கூட்டங்களின் விவாதங்களுக்கு கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். நிலைமையை தமிழக அரசு கவனத்தில் கொண்டு அங்கு எழுப்பப்பட்ட பிரச்சினைகளை அவ்வப்போது பரிசீலித்து வருகிறது. அவற்றில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் கவனத்தை இழக்காமல், முறையாகக் கையாண்டும், தேவையான இடங்களில் மாற்றியமைத்தும் செயல் திட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளன என்பதை அறிவதில் இங்கு கூடியுள்ளவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

அந்தந்த மாநில அரசு தான் எழுப்பியுள்ள பிரச்சினைகளை கவனிக்க மத்திய அரசு முறையான நடவடிக்கைகள் எடுத்துள்ளதும் பாராட்டத்தக்கது. உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள பகைவர்களால் உருவாக்கப்படும் சவால்களை எதிர்த்துப் போரிட மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் நடை முறைக்கு உகந்த இணைப்பும், பரஸ்பர கருத்தொற்றுமையும் கட்டாயத் தேவை என்ற அடிப்படைக் கோட்பாட்டை இது உறுதி செய்கிறது''.

* * *

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் - சிறப்பான செயல்பாடு

**தமிழக அரசுக்கு மத்திய அரசு பாராட்டு !**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக
பெருந்திட்ட வளாக திடலில் 4.2.2010 அன்று நடைபெற்ற
அரசு விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.





இவ்விழாவில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.2 கோடியே 59 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் அயன் பேரையூர் ஊராட்சியில் சமத்துவபுரம் மற்றும் பள்ளிக் கட்டடம் உள்ளிட்ட 2 பணிகளுக்கும், நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில், தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் 3 பணிகளும், பொதுப்பணித் துறையின் சார்பில் ரூ.97 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் குன்னத்தில் அரசு மருத்துவக் கல்லூரி கட்டடம் உள்ளிட்ட 3 பணிகளும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் 2 பணிகளும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ரூ.1 கோடியே 1 இலட்சம் மதிப்பீட்டில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும்

பணிக்கும் தொழில்நுட்ப கல்வித் துறையின் சார்பில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் வேலூர் கிராமத்தில் புதிய பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரி கட்டுமானப் பணிக்கும், கூட்டுறவுத் துறையின் சார்பில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவுத் துறை அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கும், கல்வித் துறை மற்றும் வனத்துறை சார்பில் ரூ.49 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டடம் மற்றும் வன ஓய்வு விடுதிக் கட்டடம் உள்ளிட்ட 4 பணிகளுக்கும் என ரூ.112 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் 17 பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.3 கோடியே 61 இலட்சம் மதிப்பீட்டில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், காரை ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலான பணிகள் உள்ளிட்ட 24 பணிகளுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் சுமார் ரூ.1 கோடியே 51 இலட்சம் மதிப்பீட்டில் வேப்பூரில் அரசு மருத்துவமனைக் கட்டடம், வகுப்பறை, ஆய்வகம் உள்ளிட்ட 11 பணிகளுக்கும், நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.9 கோடியே 83 இலட்சம் மதிப்பீட்டில் பாலங்கள் அமைக்கும் 14 பணிகளும், பேரூராட்சிகள், நகராட்சி நிருவாகத் துறை மற்றும் தாட்கோ நிறுவனத்தின் சார்பில் ரூ.79 இலட்சம் மதிப்பீட்டில் 6 பணிகளும், தமிழ்நாடு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்கும் என ரூ.23 கோடியே 22 இலட்சம் மதிப்பீட்டில் 15 பணிகள் இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

**ரூ.180 கோடியில் பல்வேறு பணிகள்**

மேலும், இந்த விழாவின் மூலம் 1,000 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் அரசு மானியம் தலா ரூ.10 ஆயிரம் மற்றும் வங்கிக் கடனாக ரூ.10 கோடியே 41 இலட்சம் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதுமட்டுமன்றி, வருவாய்த் துறையின் சார்பில் ரூ.2 கோடியே 71 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள், இலவச மனைப் பட்டா உள்ளிட்ட 2,107 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், கூட்டுறவுத் துறை சார்பில் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் 453 பயனாளிகளுக்கு பொருளாதாரக் கடன், மத்திய காலக் கடன் வழங்கியும், என ரூ.15 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் 3 ஆயிரத்து 62 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆகமொத்தம் இன்றைய தின விழாவின் மூலம் சுமார் ரூ.180 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டிலான அடிக்கல் நாட்டும் பணிகள், திறப்பு விழா பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 12,620 கிராம ஊராட்சிகளில் சுமார் ரூ.2,536 கோடி செலவில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டது. ஊராட்சிக்கு தலா 20 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது. மாநில அளவில் நான்கு ஆண்டுகளில் 10,104 ஊராட்சிகளுக்கு ரூ.2,20.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்ட அளவில் 4 ஆண்டுகளில் 1,725 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1,601 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 121 பணிகளும் விரைவில் நிறைவுபெறும். தமிழ்நாட்டிலுள்ள 561 பேரூராட்சிகளிலும், சுமார் ரூ.280 கோடி செலவில், இத்திட்டத்தை 4 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப் பட்டுள்ளது. பேரூராட்சிக்கு தலா ரூ.50 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை நாட்டிலேயே சிறப்பாக செயல்படுத்தும் முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். இதற்காக மத்திய அரசும், மத்திய திட்டக் குழுவும் தமிழக அரசை பாராட்டியுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இது வரை ரூ.2,939 கோடியே 19 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.36 கோடியே 73 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு 36 ஆயிரத்து 153 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**3,000 பேருக்கு வேலைவாய்ப்பு**

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 5ஆவது கட்டமாக இதுவரை வழங்கப்படாத அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் டிசம்பர் இறுதிக்குள் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுவிடும். பெரம்பலூர் மாவட்டத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலம் 3,072 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது. இதற்காக தற்பொழுது 2,893 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. விரைவில் மீதமுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் தொடங்கப் படும். மேலும், நாரணமங்கலம் அருகே 300 ஏக்கர் பரப்பளவில் ரூ.800 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.எப். டயர் தொழிற் சாலைக் கான பணிகள் நடைபெற்று வருவதால், 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது''.

இவ்விழாவில் மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ.இராசா, மாண்புமிகு சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை இணையமைச்சர் திரு. து. நெப்போலியன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் திரு. மா.விஜயகுமார், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மா. இராஜ்குமார், திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

## இயல்–இசை–நாட்டிய கலைஞர்களுக்கு
## பாரதி – எம்.எஸ்.சுப்புலட்சுமி – பாலசரஸ்வதி பெயரில் விருது





பாரதியார்



பாலசரஸ்வதி



எம்.எஸ். சுப்புலட்சுமி

சட்டசபையில், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்தின் போது, தமிழக அரசின் சார்பில் கலைஞர்களுக்கு விருது வழங்குவதோடு, அகில இந்திய அளவில் புகழ் பெற்ற கலைஞர்களுக்கும், தமிழக அரசின் சார்பில் விருதுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

அதையொட்டி, அகில இந்திய அளவில் புகழ் பெற்ற கலைஞர்களுக்கு, தமிழக அரசின் சார்பில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம், மூன்று விருதுகளை இயல் துறையில், 'பாரதி' என்ற பெயரிலும், இசைத் துறையில், 'எம்.எஸ்.சுப்புலட்சுமி' என்ற பெயரிலும், நாட்டியத் துறையில், 'பால சரஸ்வதி' என்ற பெயரிலும் விருதுகள் வழங்கவும், இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருதுகள் வழங்கும் போது, இவ்விருதுகளை சேர்த்து வழங்கவும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

★ ★ ★

# முதல்வர் கலைஞரின் மக்கள் நலத்திட்டங்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக அமைந்துள்ளன!

**– மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 11.2.2010 அன்று பெரும்பாக்கத்தில் குடிசை மாற்று வாரிய புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் செம்மஞ்சேரி புதிய பேருந்து நிலைய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் கடலோர எல்லைப் பகுதியில் வசிக்கும் மக்களை மறுகுடியமர்த்தும் திட்டம், செம்மஞ்சேரி புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழா மிக எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.




இந்த விழாவில் மொத்தம் 26,144 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், பேருந்து நிலையம் ஆகியவை ரூ.1,247 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த அரசை வழி நடத்துகின்ற **தலைவர் கலைஞர்** அவர்களின் கொள்கை, மனிதர்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து, புரிந்து நிறைவேற்றுவது ஆகும். மனிதனின் அத்தியாவசியத் தேவையாக மூன்றைக் குறிப்பிடுவார்கள்.

அவை, உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் ஆகியவையாகும். இந்த அடிப்படைத் தேவைகள் கிடைத்தால் தான் மனிதன் நிம்மதியாக வாழ முடியும். அதற்கு ஏற்ற வகையில் நடைபெறும் ஆட்சிதான் தலைவர் கலைஞர் அவர்களின் தி.மு.கழக ஆட்சியாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு, 1967ஆம் ஆண்டு தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் முதன் முதலாக அமைந்த தி.மு.க. ஆட்சியில் தான், சென்னை மாநகரில் தீப்பிடிக்காத கல்நார் வீடுகள் கட்டும் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. 1971ஆம் ஆண்டு மீண்டும் தி.மு.கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது தான் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினை உருவாக்கி, அதற்குத் தலைவராக அரங்கண்ணல் அவர்களை நியமித்தார். குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்ட பின் தமிழகத்தில் சென்னை மாநகரம் உட்பட 14 முக்கிய நகரங்களில் அடுக்குமாடி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது. அப்போது, கோட்டூர்புரத்தில் நடைபெற்ற துவக்க விழாவிற்கு சுதந்திரப் போராட்டத் தியாகியான ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களை, முதலமைச்சர் கலைஞர் அழைத்திருந்தார். அவ்விழாவில் பேசிய ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் "காந்தியடிகள் கண்ட கனவினை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றியதை எண்ணி பாராட்டுகிறேன், போற்றுகிறேன்" என்று புகழ்ந்துரைத்தார். அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் பல அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டன.

### இரத்தத் துளியும் – பேனா மையும்

1973 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக கிராம ஊராட்சிகளில் ஆதி திராவிட மக்களுக்கு கான்கிரீட் கூரையுடன் கூடிய நிரந்தர வீடுகள் கட்டித்தரப்பட்டன. மத்திய அரசும் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்திரா நினைவு வீட்டு வசதித் திட்டத்தை பின்னர் உருவாக்கியது. 1972ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயப் பெருமக்களுக்கும், கிராமப்புற ஏழை மக்களுக்கும் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். அதன் தொடக்க விழா தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக கம்யூனிசக் கொள்கையை தனது மனதில் ஏந்திய மணலி கந்தசாமி கலந்து கொண்டார். அவர் பேசும்போது "விவசாயிகள், கிராமப்புற ஏழை எளியவர்களுக்கு இலவசப் பட்டா வழங்க நாங்கள் போராடினோம், இரத்தம் சிந்தினோம். ஆனால், கலைஞர் அவர்கள், தனது பேனா மையினைச் சிந்தி இத்திட்டத்தினை நிறைவேற்றினார்" என்று புகழாரம் சூட்டினார்.

மாநகர், நகர்ப்புரம் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கின்ற ஏழை, எளிய மக்கள் சுகாதார வசதியுடன் நிரந்தர வீடு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்புகளும் தமது பங்கினை அளிக்கிறார்கள். இதன் முதல் கட்டமாக 236 குடிசைப் பகுதிகளுக்கு ரூ.127 கோடியே 42 இலட்சம் செலவிலும், இரண்டாம் கட்டமாக 186 குடிசைப் பகுதிகளுக்கு ரூ.72 கோடியே 63 இலட்சம் செலவிலும் அடுக்குமாடி குடியிருப்புகள் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை ரூ.115 கோடி செலவிலான பணிகள் முடிக்கப் பட்டுள்ளது.

குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்ட 1970 முதல் 2006 வரை 36 ஆண்டுகளில் 77 ஆயிரத்து 627 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 5 ஆம் முறையாக தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற 2006 முதல் 5ஆண்டு காலத்திற்குள் ரூ.3,000 கோடி செலவில் 82 ஆயிரம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 42 ஆயிரம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 40 ஆயிரம் குடியிருப்புகளில், இன்று 26,000 குடியிருப்புகள் பெரும்பாக்கம் மற்றும் மெரினா பகுதிகளில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 14 ஆயிரம் குடியிருப்புகளின் திட்டப் பணிகள் ஓரிரு மாதங்களில் தொடங்கப்படும். இங்கு பேசிய குடிசை மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், இன்று அடிக்கல் நாட்டிய குடியிருப்புகள் 15 மாதங்களில் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற 3 ஆண்டுகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் இத்திடத்தினை 2 ஆண்டுகளில் முடிக்குமாறு அத்திட்டத் தொடக்க விழாவில் கேட்டுக் கொண்டார். முதலமைச்சர் அவர்களின் உத்திரவிற்கு இணங்க நாங்களும் வேகமாகச் செயல்பட்டு 1½ ஆண்டுகளில், இத்திட்டத்தினை முடித்தோம். அதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்றிய அதிகாரிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்து பரிசுகளை வழங்கினார். அதுபோலவே, இந்த குடியிருப்புத் திட்டத்தையும் 15 மாதங்கள் என்றில்லாமல், ஓர் ஆண்டிற்குள் கட்டி முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு கட்டி முடித்தால் நானே முதலமைச்சரிடம் பேசி துறை அதிகாரிகளுக்கு பரிசுகளை வாங்கித் தருவேன் என்று உறுதியளிக்கிறேன்.


நான் அண்மையில் டெல்லி சென்றபோது பிரதமர், அன்னை சோனியா காந்தி, மத்திய அமைச்சர்கள், பல்வேறு மாநில முதலமைச்சர்களை நேரில் சந்தித்து உரையாடியபோது, அனைவரும் என்னிடத்தில் ஆச்சர்யத்துடன் கேட்ட கேள்வி கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தில் 21 இலட்சம் நிரந்தர கான்கிரீட் வீடுகளை எப்படி கட்டித்தருவீர்கள் என்று கேட்டனர். அதற்கு நான் இந்த நிதியாண்டில் 3 இலட்சம் வீடுகள் ரூ.1,800 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்றும், வரும் 6 ஆண்டுகளில் படிப்படியாக 21 இலட்சம் வீடுகளையும் கட்டி, தமிழகத்தினை குடிசைகள் இல்லாத மாநிலமாக மாற்றும் பணியினை தலைவர் கலைஞர் நிறைவேற்றுவார் என்று எடுத்துக் கூறினேன். எப்படி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றினோமோ அதுபோலவே இத்திட்டத்தையும் செயல் படுத்துவோம் என்று விளக்கிக் கூறினேன்.

இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்களை தங்கள் மாநிலங்களிலும் செயல்படுத்துவதாக பல மாநில முதலமைச்சர்கள் என்னிடம் தெரிவித்தனர். சொன்னதையே செய்வோம், செய்வதையே சொல்வோம் என்று முதலமைச்சர் கலைஞர் அரசு மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளது. இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்களுக்கு நீங்களும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

* * *

# சிறுவிதையாக அன்று விதைக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம் - இன்று மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது!

4.2.210 அன்று அரியலூர் மாவட்டம் – தா. பழூர் ஒன்றியத்தில் சமத்துவபுரத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை!



அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம், நடுவலூர் ஊராட்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் இந்த ஆண்டின் முதல் கட்டமாக திறந்து வைக்கப்பட்ட 22–ஆவது சமத்துவபுரம் ஆகும். இந்த ஆண்டில் முதல் கட்டமாக 29 தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட உள்ளன. அடுத்த ஆண்டில் 30 சமத்துவபுரங்களும், அதற்கடுத்த ஆண்டு 36 சமத்துவபுரங்களும் என 95 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட உள்ளன. 95 சமத்துவபுரங்களின் நோக்கம்– முதல்வர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த ஆண்டைக் கணக்கிட்டு துவக்கப்பட நிர்ணயிக்கப்பட்டது. முதன் முதலாக பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் 1999–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 145 சமத்துவபுரங்கள் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அதற்குப் பின்னர் வந்த ஆட்சியில் புதிதாக சமத்துவபுரங்கள் தொடங்கப்படவும் இல்லை, தொடங்கப்பட்ட சமத்துவபுரங்களைப் பேணிக்காக்கவும் இல்லை.

### பெரியார் கண்ட கனவை நிறைவேற்றுகிற திட்டம்!

பெரியார் கண்ட கனவான ஜாதி, மதங்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும் என்பதை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த சமத்துவபுரத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறார். முதல்வர் கலைஞர் அவர்களின் கருத்தினைப் போல நாம் ஒற்றுமையுடனும், ஜாதி, மத பாகுபாடின்றியும் சமத்துவபுரம் திட்டத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி,

சமூகத்தில் ஒற்றுமையுடனும், தோழமையுடனும் வாழ வேண்டும்.


இந்த விழாவில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.14 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் ஊராட்சி அலுவலகம் உள்ளிட்ட 4 பணிகளுக்கும், நகராட்சித் துறையில் ரூ.27 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் அரியலூர் நகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணித் திட்டத்திற்கும், ரூ.26 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித் துறையில் அண்ணா பல்கலைக்கழகக் கல்லூரி மற்றும் இதர 7 பணிகளுக்கும், நெடுஞ்சாலைத் துறையில் ரூ.37 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டில் நீலத்தநல்லூர் – மதனத்தூர் இடையே கொள்ளிடம் குறுக்கே உயர்மட்டப் பாலம், கீழப்பழுவூர் – புள்ளம்பாடி, மேலகருப்பூர் – வடுகப்பாளையம், திருமானூர் – ஏலாக்குறிச்சி ஆகிய 4 பாலப் பணிகளுக்கும், கல்வித் துறையில் ரூ.2 கோடியே 24 இலட்சம் மதிப்பீட்டில் 23 பள்ளி கட்டடப் பணிகளுக்கும், பேரூராட்சித் துறையில் ரூ.20 இலட்சம் மதிப்பில் வரதராஜன்பேட்டை பேரூராட்சி அலுவலக கட்டிடப் பணி என ரூ.94 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் 40 பணிகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேலும் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத் திறப்பு விழாவாக ஊரக வளர்ச்சித் துறையில் ரூ.3 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் தா.பழூர் ஊராட்சி ஒன்றியம் நடுவலூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் உள்ளிட்ட திட்டத்திலான 43 பணிகளுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் சுமார் ரூ.44 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் அரியலூர் – பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 525 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியினையும், பொதுப்பணித் துறையில் ரூ.15 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் உள்ளிட்ட 22 பணிகளுக்கும், நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.6 கோடியே 33 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் புதுப்பித்துக் கட்டுதல் மற்றும் பணிகள் உள்ளிட்ட 12 பணிகளுக்கும், கல்வித் துறையில் ரூ.1 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் 15 பள்ளிக் கட்டடங்களும், பேரூராட்சித் துறையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் 2 குடிநீர் வழங்கும் பணிகளுக்கும் என ரூ.71 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் 95 பணிகள் இன்று மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் மொத்தம் 4,24,829 குழுக்கள் உள்ளன. இக்குழுக்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ரூ.52.13 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.**

### மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.14 கோடி கடனுதவி!

இன்று இவ்விழாவில் 1,600 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 800 சுயஉதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் அரசு மானியம் தலா ரூ.10,000 மற்றும் வங்கிக் கடனான ரூ.4 கோடியே 80 இலட்சமும், 750 சுயஉதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் நேரடிக் கடனாக ரூ.7 கோடியே 50 இலட்சமும், 50 சுயஉதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.1 கோடியே 91 இலட்சம் பொருளாதாரக் கடனாகவும் என மொத்தம் ரூ.14 கோடியே 21 இலட்சம் வழங்கப்படுகிறது.




மகளிர் சுயஉதவிக் குழுக்கள் 1989–ஆம் ஆண்டு முதன் முதலில் தருமபுரி மாவட்டத்தில்தான் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. சிறு விதையாக அன்று விதைக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுவானது இன்று வளர்ச்சியடைந்து மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் 4,24,829 குழுக்கள் உள்ளன. இக்குழுக்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ரூ.52.13 கோடி கடன் வழங்கப் பட்டுள்ளது.

சுயஉதவிக் குழுக்கள் வளர்ச்சி யடைவதற்குக் காரணம், குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் தாங்கள் வாங்கும் கடன்களை உரிய நேரத்தில் வங்கிகளில் திருப்பிச் செலுத்திவிடுவதால்தான். மேலும் அவர்கள் வங்கிக் கடன்கள் பெறுவதற்கு வசதியாகவும், குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளவும், தங்களின் தன்னம்பிக்கையை வளர்த்து, எவருடைய உதவியும் இல்லாமல் சொந்தக் காலில் நிற்பதற்கும் பயனுள்ளதாக உள்ளது.

சுயஉதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள சூழ்நிலைக்கேற்ப சிறு தொழில் தொடங்க இந்த கடனுதவி அவர்களுக்கு பயனுள்ளதாக அமைகிறது.

கலைஞர் அறிவித்த திட்டங்களுக்கெல்லாம் மகுடம் சூட்டியதுபோல் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. தற்போது நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்த கலைஞர் வீட்டு வசதித் திட்டம் மார்ச் 3–ஆம் தேதி கலைஞர் அவர்களால் திருச்சியில் தொடங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக ரூ.1,800 கோடி மதிப்பீட்டில் 3,00,000 வீடுகளும் மொத்தம் 21 இலட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. கலைஞர் வழங்குகின்ற திட்டங்களையும், சலுகைகளையும் தமிழக மக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ. ராசா. மாண்புமிகு மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் திரு. டி. நெப்போலியன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், திரு. பாளை. து. அமரமூர்த்தி, திரு. ரவிக்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

★ ★ ★

# அறிவிக்கப்படும் திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படுகின்றன



மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டம் இப்போது அறிவிக்கப்பட்டதல்ல. 1989–ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார். எதற்காக தொடங்கினார் தெரியுமா? தேர்தல் நேரத்தில் பயன்படுத்தி கொள்ளவா? இல்லை. பெண்கள் தங்கள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் தன்னம்பிக்கை பெற வேண்டும் என்பதற்காகவும் தான் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

3.2.2010 அன்று
புதுக்கோட்டை மாவட்டம்
கந்தர்வக்கோட்டை, புதுப்பட்டி
ஊராட்சியில் சமத்துவபுரத்தை
திறந்துவைத்து மாண்புமிகு
துணை முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
ஆற்றிய உரை

இந்தத் திட்டத்தின் மூலம் வங்கிகளில் கடன் பெற்று பல்வேறு பொருள்களை தயாரித்து பெண்கள் வருமானம் பெற்று பயன் அடைந்து வருகின்றனர். இந்த திட்டம் கம்பீரமாகவும், மாபெரும் இயக்கமாகவும் வளர்ந்து கொண்டு வருகிறது. அகில இந்திய அளவில் தமிழகத்தில்தான் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு அதிக அளவில் வங்கிக் கடனும், சுழல்நிதியும் வழங்கப்பட்டு

வருகிறது. தமிழ்நாட்டில் இது வரை 4 இலட்சத்து 24 ஆயிரத்து 829 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன.



**மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி அதிகரிப்பு**

ஆனால் கடந்த ஜெயலலிதா ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.1,644 கோடி வங்கிக் கடனாகவும், சுழல்நிதியாக ரூ.76 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தி.மு.க. ஆட்சி அமைந்த மூன்றரை ஆண்டு காலத்தில் மட்டும் ரூ.5 ஆயிரத்து 972 கோடி வங்கி கடனும், ரூ.215 கோடி சுழல்நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் இறுதி நாளன்று இந்தியா முழுவதும் உள்ள எல்லா திட்டங்களையும் வெல்லக்கூடிய ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார். அந்த திட்டம்தான் "கலைஞர் வீட்டு வசதி திட்டம்".

அடுத்த 6 ஆண்டுகளில் 21 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. முதல் கட்டமாக ரூ.1,800 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3 இலட்சம் வீடுகள் கட்டப்பட இருக்கின்றன. இந்தத் திட்டத் தொடக்கவிழா வருகிற மார்ச் மாதம் 3ஆம் தேதி திருச்சியில் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பங்கேற்று இந்தத் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். ஆக இந்த ஆட்சியில் தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மட்டுமின்றி புதிதாக அறிவிக்கப்பட்ட திட்டங்களும் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று உணருவீர்கள். எனவே இப்படி நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வரும் இந்த அரசுக்கு உங்கள் ஆதரவை வழங்கி உற்சாகப்படுத்துங்கள் என கேட்டுக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

# தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் பயன்பெறுவதற்காக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் ரூ. 237.18 கோடியில் துவக்கம்!

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைக்க ரூ.1,928.80 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல்கட்டப் பணிகள் ரூ.237.18 கோடியில் துவங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தின் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,755 ஊரக குடியிருப்புகளில் உபயோகிக்கப்படும் குடிநீரில் ப்ளோரைடு உப்புகளின் சதவிகிதம் 1 லிட்டர் குடிநீரில், 1.5 மில்லி கிராம் முதல் 12.4 மில்லி கிராம் உள்ளதாக, குடிநீர் மாதிரிகளின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல் நிறுவனத்தின் கையேட்டின்படி வரையறுக்கப்பட்ட ப்ளோரைடு அளவாக 1 லிட்டர் குடிநீருக்கு 1.5 மி.கி. மட்டுமே உள்ளது. எனவே, பல ஆண்டுகாலமாக இந்த இரண்டு மாவட்டங்களில் ப்ளோரைடு கலந்த குடிநீரை பருகிவருவதால், இம்மாவட்டங்களில் உள்ள மக்கள் மூட்டு, முதுகெலும்பு, கைகால் வளைதல், முடக்குவாதம் போன்ற நோய்களினாலும், பற்கள் காவியாதல் மற்றும் எலும்பு தொடர்பில்லாத பல்வேறு நோய்களினாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும், இரண்டு மாவட்டங்களும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாகும். எனவே, கோடைக் காலங்களில் இந்த மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு பெருமளவில் ஏற்படுகிறது. எனவே, ப்ளோரோசிஸ் பாதிப்பிலிருந்து தடுக்கும் வகையிலும், நிலையான மற்றும் நீடித்த குடிநீர் இப்பகுதி மக்களுக்கு வழங்கும் வகையிலும், 1,928 கோடியே 80 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை செயல்படுத்திட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இவ்விரு மாவட்டங்களிலுள்ள சுமார் 30 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். இத்திட்டத்தினை செவ்வனே செயல்படுத்திடும் வகையில் 5 கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

கட்டம் ஒன்றில் நீர் உள்வாங்கும் கட்டமைப்பு, இயல்பு நீர் உந்து அறை, இயல்புநீர் இறைப்பான், இயல்பு நீர் உந்துக் குழாய், நாளொன்றுக்கு 156 மில்லியன் லிட்டர் திறனுடைய நீர் சுத்திகரிப்பு நிலையம், சுத்திகரிக்கப்பட்ட நீர் கடத்தும் குழாய், நீர் உந்து நிலையம், 240 இலட்சம் லிட்டர் கொள்ளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டி, மின்னணு தகவல் பரிமாற்றம் மற்றும் குறிப்பு சேகரித்தல் போன்ற பணிகளை உள்ளடக்கியதாக உள்ளது.

முன்தகுதிக்கான தேர்வு, தொழில்நுட்பம் மற்றும் நிதி தொடர்பான மதிப்பாய்வு முடிந்து கட்டம் ஒன்றுக்கான பணி உத்தரவு ரூபாய் 237 கோடியே 18 இலட்சத்திற்கு ஐ.வி.ஆர். சி.எல். இன்ப்ராஸ்ட்ரக்சர் என்ற ஹைதராபாத் நிறுவனத்திற்கு 28.1.2010 அன்று வழங்கப்பட்டது.

இப்பணிகள், நிறுவனத்தால் விரைவில் துவங்கப்படவுள்ளன. ★

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு
# தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

வெளியீட்டு ஆணை எண். 1445/வரைகலை/விளம்பரம்/2009

R.N.I.No.21446/70-Regn.No.TN/ARD/48/09-11
& WPP No.TN/PMG (CCR) 518/09-11




தமிழரசு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற,
“நன்றி பாராட்டும் விழாவில்” கலந்து கொண்டு, ஊனமுற்றோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.
உடன் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன், கவிஞர் கனிமொழி, எம்.பி.,
ஆகியோர் உள்ளனர். (21.1.2010)